Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும்
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

**சிலோன் எலக்றிக்கல்ஸ்**

*180, ஆஸ்பத்திரி வீதி,*

*யாழ்ப்பாணம்.*

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, சித்திரை 19-ஆம் நாள். (2-5-59) சனிக்கிழமை இதழ் 13.

# தீவெங்கும் சென்று தமிழன் வர்த்தகம் செய்யலாமா ?

## உத்தியோகம் வகிக்கலாமா?

## அப்படியாயின் ஏன் தமிழ் மாகாணங்களில் சிங்களவர் குடியேறக் கூடாது ?

### யு. என். பி. தலைவர் திரு. டட்லியின் வாதம்

— நமது அரசியல் நிருபர் —

**“தமிழன், இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் சென்று வர்த்தகம் செய்யலாமா? உத்தியோகம் வகிக்கவும் உரிமை பெறலாமா? அப்படியாயின் சிங்களவர் மட்டும் வடக்கு, கிழக்கு மாகாண குடியேற்றத் திட்டங்களில் ஏன் சேரக்கூடாது? சிங்களவரை அவ்விரு மாகாணங்களிலும் குடியேறக் கூடாதென்பதாயின், தமிழரும் மற்ற மாகாணங்களில் வர்த்தகம் செய்யவோ, அல்லது உத்தியோகம் வகிக்கவோ முடியாது.”**

என்று சில மாதங்களுக்கு முன் யு. என். பி. கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா ஒரு பத்திரிகை நிருபரிடம் தெரிவித்தார். அவ்வித மனப்பான்மைகொண்டவர் மாத்தறையில் நடைபெற்ற யு. என். பி. கட்சியின் 11 ஆவது மகாநாட்டிலே பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள பிரதேச சுயாட்சி சபைகள் யோசனையை எதிர்த்துள்ளதில் வியப்பில்லை.

ஒரு பிரதேசத்திலுள்ள குடியேற்றத்திட்டத்தில் யாரைக் குடியேற்ற வேண்டும் என்பதை நிர்ணயிக்கும் உரிமையும் அதிகாரமும், மேற்குறித்த ஒப்பந்தப்படி பிரதேச சபைகளுக்கே இருக்கும்.

இலங்கையில் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் தான் சாகுபடி செய்யவேண்டிய பூமி அதிகமிருக்கிறதாம். அப்பகுதிகளுக்குச் சிங்களவர் வந்து குடியேற முடியாமற் செய்வதைத் தாங்கள் ஏற்க முடியாதென்றும் இதன் பலாபலன் மிக பாரதூரமாக இருக்குமென்றும் எச்சரிக்கிறார் திரு டட்லி.

ஒப்பந்தம் செய்து கொண்ட பண்டாரநாயக்காவும், முதலில் குடியேற்ற அதிகாரமும் உரிமையும் பிரதேச சபைகளுக்கே இருக்குமென்று ஒப்புக்கொண்டார். பின்னர், பெரிய திட்டங்களுக்கு இது செல்லாதென்றும் சிறிய திட்டங்களுக்கே இது பொருந்துமென்றும் மழுப்பினர். பிறகு அந்த ஒப்பந்தமும் முறிந்து விட்டதாகவும் அறிவிக்கப்பட்டுவிட்டது.

### தமிழரின் பண்பு

தமிழரைப் பொறுத்தவரை அவர்கள் நாட்டில் எங்கும் சென்று வர்த்தகம் உத்தியோகம் செய்யும் உரிமையையே விரும்புவார்கள். நாட்டைப் பிளந்து, அதில் ஒரு பகுதியில் மட்டும் அடைபட்டுக் கிடக்கத் தமிழர் ஆசைப்படவில்லை. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதே அவர்களது மேலான பண்பு. தமிழ் மாகாணங்களிலுள்ள குடியேற்றத் திட்டங்களுக்கு வெளியிலிருந்து தெரிவு செய்யப்படுபவர், விரும்பத்தக்கவர்களாக இல்லையென்றும், பல முறை குற்றம் செய்து சிறைத்தண்டனை அனுபவித்தவர்களை, அந்தக் கிராமங்களிலிருந்து அகற்றிவிடுவதற்காகவே அவர்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பப்படுவதாகவும், அவர்களால் பக்கத்திலுள்ள தமிழ் கிராமவாசிகளுக்கும் மக்களுக்கும் தொந்தரவுகள் ஏற்படுவதாகவும் புகார்கள் கூறப்படுகின்றன.

### மாங்குளத்தின் அருகே

சமீபத்தில் மாங்குளத்தின் அருகே இருமுறை ரயில்வண்டி கவிழ்க்கப்பட்டதல்லவா? பக்கத்திலே குடியேற்றப்பட்டுள்ள விரும்பத்தகாத வெளியார்களே இதற்குக் காரணமென்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

## யாழ்ப்பாணம் முஸ்லிம் மகளிர் கல்லூரி

### அஸ்திவாரக் கல் நாட்டு விழா

யாழ்ப்பாணம் முஸ்லிம் மகளிர் கல்லூரிக் கட்டடத்தின் அஸ்திவாரக்கல் நாட்டுவிழா இம் மாதம் 3-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 க்கு நடைபெறும். இக்கல்லூரி நிறுவப்படும் காணியின் விசாலம் நான்கு ஏக்கராகும். இதனோடு கூடவே விளையாட்டு மைதானமும் அமைந்துள்ளது. இக்கல்லூரிக் கட்டடத்தை நிறுவுவதற்கு ஒரு லட்சத்து அறுபதினாயிரம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. கட்டட வேலைகளை யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்விச் சபையார் ஏற்று நடாத்த முன்வந்துள்ளனர். அரசினர் இதற்காக எண்பதினாயிரம் ரூபாய் அளிப்பார்கள். மிகுதித் தொகையைக் கல்விச் சபையினரே கொடுத்து உதவுவார்கள். கல்வி வளர்ச்சியில் ஆர்வமுள்ள அனைவரும் இத்துறையில் ஊக்கங்காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. அநேகமாக இக்கல்லூரிக் கட்டடவேலைகள் இவ்வருட முடிவுக்குள் பூர்த்தியாகுமெனவும் கல்லூரித் திறப்புவிழா 1960-ம் ஆண்டு ஜனவரியில் நடைபெறக்கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வீண் செலவுகளைக் குறைக்கவும்

### திருக்கேதீச்சரத்தில் மதுரை ஆதீனத்தின் உபதேசம்

அகில இலங்கை சைவ மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க யாழ்ப்பாணம் வந்திருந்த ஸ்ரீலஸ்ரீ மதுரை ஆதீனம், சென்ற புதனன்று காலை விமானத்தில் திருச்சிக்குப் புறப்பட்டார். பலாலி நிலையத்தில் பலர் சென்று மாலையிட்டு வணங்கி, வழி அனுப்பி வைத்தனர்.

அவர் சென்ற திங்களன்று திருக்கேதீச்சரம் சென்று, சுவாமி தரிசனம் செய்து, ஒரு பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றினார். வீண் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையைத் தமிழர் வாழவேண்டுமென்றும், தெய்வத்தை மறவாமல் அன்பு வாழ்வு வாழ்ந்தால் தமிழர் மீண்டும் பழைய சிறப்பை அடையலாமென்றும், திருக்கேதீச்சரத் திருப்பணிக்கு பலரும் கூடுமளவும் உதவவேண்டுமென்றும், ஆண்டவன் பெயரில் செய்யும் தர்மத்துக்கு அதிகமான பலன் கிடைக்குமென்றும் கூறினர்.

முத்தமிழ் ஸ்ரீ மணிபாகவதர் இனி ஒவ்வொரு கதா பிரசங்கத்திலும் திருக்கேதீச்சரத்திற்காக பண வசூல் செய்யவேண்டுமென்று ஆதீனம் கூறியதைக் கரகோஷங்களுக்கிடையே அவர் ஏற்றுக்கொண்டார்.

திருப்பணிச்சபைத் தலைவர் சேர் கந்தையா வைத்தியநாதன் நன்றி கூறினர்.

இன்று தலைமை அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு எவ்வித பங்கும்,அந்தஸ்தும் இல்லை. இந்நிலைமையில், தலைமை அரசாங்கம் தெரிவு செய்து தமிழ்ப்பகுதிகளில் குடியேற்றும் யாவரையும் தமிழர் சந்தேகக்கண்ணுடன் பார்ப்பதும், இருசாரினருக்கும் உறவுகள் மோசமாவதும் இயற்கை. இதனால் தங்கள் பகுதியில் மக்கள் அமைதியாக வாழ முடியாமல் போய்விடுமென்றும் தமிழர் அஞ்சுவது இயற்கை. இந்த அவல நிலையை எப்படித் தீர்ப்பது?

(9-ம் பக்கம் பார்க்க)

## குடிசைக் கைத்தொழில் விருத்தி

### பொது மக்களைக் கவர்ந்த பொருட்காட்சி

### யாழ்ப்பாண மாவட்ட ‘கிராமாபி விருத்திச் சங்கங்களின் அரும்பணி

குடிசைக்கைத்தொழில் வடபகுதியில் விருத்திபெற்று வருகின்றதென்பதற்கு அற்புதமானதோர் எடுத்துக்காட்டாகச் சாவகச்சேரி ட்றீபேக் கல்லூரியிற் சென்ற 25, 26-4-59 திகதிகளில் நடைபெற்ற குடிசைக் கைத்தொழிற் கண்காட்சி விளங்கியதென்றால் அது மிகையாகாது. யாழ்ப்பாணம் மாவட்டக் கிராமாபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனமும், குடிசைக் கைத்தொழிற்காட்சியும் யாழ்ப்பாண மாவட்டப் பகுதியிலுள்ள மக்களின் கவனத்தை நன்கு கவர்ந்தனவென்பதற்கு இரு தினங்களும் அங்கு திரண்டுவந்த மக்கள்கூட்டமே சான்றுபகரும். பள்ளிக்கூட மாணவர்களுக்கு இக் காட்சி அறிவுவிருந்தாக அமைந்திருந்தது.

### கண்காட்சி

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதினொரு காரியாதிகாரிகளின் பிரிவுகளும் பதினொரு பகுதிகளாகக் கண் காட்சியை ஏற்படுத்தியிருந்தன. இக் கண்காட்சியைக் கிராமாபிவிருத்திக் குடிசைக் கைத்தொழில் அதிபர் திரு. எம். ஜி. வி. பி. சமரசிங்க திறந்துவைத்தார். கிராமஊழியர்கள் அணிவகுத்துநின்று அதிபரை வரவேற்றனர். காட்சிக்கு வைக்கப்பெற்ற பன்னவேலைப்பொருள்களும், சித்திரத் தையல்வேலைகளும், தோட்டப்பிரயோசனங்களும், ஊறுகாய், அச்சாறு போன்ற உணவுப்பொருள்களும் தரத்திற் சிறந்தனவாக இருப்பதைக் கண்டு அதிபர் பெரிதும் மகிழ்ந்தார். இந்தமாதிரியான உற்சாகம் தொடர்ந்திருக்கவேண்டுமெனவும் பொருட்காட்சி முடிவடைந்தவுடன் கிராமாபிவிருத்திபற்றி மறந்துபோகக் கூடாதெனவும் அவர் நகைச்சுவையுடன் குறிப்பிட்டார்.

### நல்வாழ்வே நோக்கம்

அன்று காலை கிராமாபிவிருத்திச்சங்கங்களுக்கிடையில் நடைபெற்ற உரையாடலின்போது கிராமாபிவிருத்திச் சங்கங்களின் பரிபாலனத்தில் வஞ்சகத்துக்குத் தாம் ஒருபோதும் இடங்கொடுக்கப்போவதில்லை யென திரு. சமரசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டம் ட்றீபேக் கல்லூரி மண்டபத்தில் அன்று மாலை நடைபெற்றது. கிராம மக்களின் நல்வாழ்வுக்காக உழைப்பதே கிராமாபிவிருத்திச் சங்கங்களின் நோக்கமெனக் கூறிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர், சமூக சேவைக்கெனத் தங்களை அர்ப்பணம் செய்பவர்கள் மிகுந்துள்ள பகுதிகளிலேதான்

(9-ம் பக்கம் பார்க்க)

**பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள் — BRIDGESTONE TYRES**

ஏக விநியோகஸ்தர்கள் :

**ஓட்டோஸ் லிமிடெட்**

யாழ்ப்பாணம்

போன் : 496

தந்தி : “ஓட்டோஸ்”

அகில இலங்கைச் சைவ மகாநாடு

# உண்மை பரவுமாயின் உலகம் சேமமடையும்

## வழிபாட்டின் அவசியம் பற்றி அறிஞர்களின் அறிவுரை

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் நாவலர் மண்டபத்தில் 24-ம், 25-ம், 26-4-59-ம் திகதிகளில் நடைபெற்ற சைவமகாநாடு சைவமக்களிடையே ஒரு புதிய உணர்ச்சியை ஊட்டியிருக்கின்றதென்றே கூறவேண்டும். மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் 291 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் இம்மகாநாட்டுக்குத் தலைமை தாங்கியமை சைவ நன்மைக்காகப் பெற்ற பெரும் பேறேயாகும்.

ஆதீனகர்த்தர் அவர்கள் தமது தலைமைப் பேருரையிற் குறிப்பிட்டதாவது:

உலகத்தில் இல்லறத்தார், துறவிகள், அரசர்கள், அமைச்சர்கள், எவ்வாறு நடந்து வாழ்வாங்கு வாழ்ந்து நற்பெயர் பெற்றுத் திகழவேண்டுமென்பதை, வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற முறையில் அறிவிக்கின்ற ஒப்புயர்வற்ற தனித்தமிழ்நூல் திருக்குறள். ஆண்டவனது சட்டதிட்டங்களைச் சந்தேகத்திற்கிடமின்றி 1330 அருங்குறள்களால் அறிவிப்பது தமிழில் இருக்கின்ற திருக்குறள் போன்று வேறு ஒரு நூல், உலகத்தில் இதுவரை கண்டுபிடித்திருக்கிற 999 பாஷைகளில் 998 பாஷைகளிலும் கிடையாது.

எவரையும் எந்தத் தேசத்திலும், எந்தப் பெற்ரோரிடத்திலும், எந்தப் பெயரிலும், எந்த நிலையிலும் எந்தமொழி பேசுகின்றவராகவும் பிறக்கும்படி ஆண்டவன் செய்யக்கூடும் என்பதை உணர்ந்திருந்தால், நாட்டுப்பற்றினாலும், மொழிப் பற்றினாலும் ஏற்படுகின்ற சண்டை சச்சரவுகள் இல்லாமல் போகும். சிங்களவர்கள் தமிழர்களாகப் பிறக்கலாம். இலங்கையர் இந்தியராகப் பிறக்கலாம். இந்தியர் இலங்கையராகப் பிறக்கலாம். அமெரிக்கர் ருஷ்யராகவும், ருஷ்யர் அமெரிக்கராகவும் பிறக்கலாம். இவ்விதமாக எந்தத் தேசத்தவரையும், எந்தத் தேசத்தவராகவும் ஆண்டவன் பிறக்கும்படி செய்யலாம். எந்தமொழி பேசுகின்றவரையும், வேறு எந்தமொழி பேசுகின்றவராகவும் பிறக்கச் செய்யலாம். அவை எல்லாம் ஆண்டவனுடைய நியாயத் தீர்ப்பிலுள்ளவை என்று உணர்ந்துகொண்டால், இன்றைய உலகப் பூசல்களே இல்லாமற் போகும். உலகத்தில் சாந்தமும் சமாதானமும் நிலவும். ஆகையால் இந்தச் சைவசமய உண்மையை எவ்வளவுக்கெவ்வளவு உலகறியச் செய்கின்ரோமோ, அவ்வளவுக்கவ்வளவு உலகம் சேமமடையும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தலைமையுரையின் பின்னர் கடவுளுக்குச் செய்நன்றியறிவித்தல் என்னும் பொருள் பற்றி திரு. கே. சீதாராமசாஸ்திரி அவர்கள் வேத மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு சொற்பொழிவாற்றினர்.

**முதல் நாள் பிற்பகலில்** சந்நிதானம் அவர்கள் தலைமையில் மீண்டும் மகாநாடு ஆரம்பமாகியது.

பெரியபுராணம் என்னும் பொருள்பற்றி வித்துவான் பொன். முத்துக்குமாரு அவர்கள் பேசியபோது, பெரியபுராணம் புராணங்களுள் எல்லாம் தலை சிறந்த புராணம் என்றும், அது திருமுறை என்றும் கூறினர்.

திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் பக்திச்சுவையோடு தேவாரபாராயணம் என்னும் பொருள்பற்றிப் பேசினர்.

திரு. மு. வைரமுத்து அவர்கள் "தெய்வமென்பதோர் சித்தம்" எனும்பொருள் பற்றிப் பேசும்போது இலங்கை மக்கள் சிறப்பாகத் தமிழ்மக்கள் தெய்வ பக்தியுடையவர்களாக வாழ வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

இரவு எட்டுமணியளவில் முத்தமிழ்மணி மணிபாகவதர் அவர்கள் 'கிழவியும் குழவியும்' என்னும் பொருள் பற்றிச் சங்கீத கதாப்பிரசங்கஞ் செய்தார்.

**அடுத்த நாளாகிய சனிக்கிழமை யன்றும்** ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளே தலைமை வகித்தார்கள்.

முதலாவதாக திரு கே. பி. அரன் அவர்கள் பேசும்போது ஏனைச் சமயங்கட்குக் குருபீடங்கள் இருப்பதுபோல சைவசமயத்தினராகிய எங்களுக்கும் குருபீடம் வேண்டும் என்றும் இம்மகா சந்நிதானம் அவர்கள் இங்கு எழுந்தருளியமை எம்மிடத்தே சமய அறிவையும் உணர்ச்சியையும் வளர்ப்பதற்குப் பெருவாய்ப்பாக அமைந்துள்ளதென்றுங் குறிப்பிட்டார்.

அடுத்ததாக மணிவாசகர் காட்டிய வழி என்னும் பொருள் பற்றிப் பேசிய திரு. வே. நடராசா அவர்கள் திருவாசகத்திற் காணும் சைவசாதனைகள்பற்றி விரித்தார்.

அதன்பின் 'அருளும் பொருளும்' பற்றிப் பேசிய ஆதீனகர்த்தர் அவர்கள் நாமெல்லாம் அருளை இப்பிறவியிலேயே தேடிக்கொள்ள வேண்டுமென்றும், அவ்வுலக வாழ்வுக்கு வேண்டியது அருள் தானென்றும் ஆவி உலக நிகழ்ச்சிகளை உதாரணமாகக் காட்டி, தாம் ஆவி உலகத்தாரோடு பேசக்கூடியதாக இருக்கின்றது என்றுங் கூறினர்கள்.

**அன்றைய பிற்பகல் நிகழ்ச்சிகள்** வழக்கறிஞர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தன.

முதலில் கந்தபுராணம் என்னும் பொருள்பற்றி பண்டிதர் திரு. இ. திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில் முருகக்கடவுளின் பெருமையைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டார்கள்.

அதன்பின் 'பெரிய புராணமும் சுந்தரர் தேவாரமும்' என்னும் பொருள் பற்றிப் பேசிய பண்டிதை திருமதி ச. அமிர்தாம்பிகை அவர்கள் பெரிய புராணம் இயற்றுவதற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகளே பேருதவியாக இருந்தார்களெனத் தெரிவித்தார்.

ஞானப்பிரகாச முனிவர் அவர்களைப் பற்றிப் பேசிய முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள், முனிவர் அவர்களுடைய வரலாற்றை எடுத்துக் கூறி, அன்னார் எழுதிய நூல்களுள் சிவஞான சித்தியார் உரையை நாம் மீளவும் பதிப்பிக்கவேண்டுமென வேண்டிக் கொண்டார்.

தலைவர் அவர்கள் பெரிய புராணம், கந்தபுராணம் ஆகியவற்றில் காணப்படும் சைவசித்தாந்தக் கருத்துக்களையும் ஞானப்பிரகாச முனிவர் எழுதிய ஆகமங்கள் பற்றியும் குறிப்புரை கூறினர்கள்.

இரவு எட்டுமணியளவில் மணிபாகவதர் அவர்கள் திருவாலவாயில் திருஞானசம்பந்தர் என்பது பற்றி ஒரு சங்கீத கதாப்பிரசங்கஞ் செய்தார்.

**மூன்ரும் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று** காலை சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமை வகிக்கக் கூட்டம் ஆரம்பமாயிற்று.

தலைவர் தமது முன்னுரையில் இன்றைய சைவமக்களிடையே காணப்படும் உணர்ச்சிக் குறைவை எடுத்துக் காட்டினர்.

அப்பால் "நம்பிரான் திருமூலன்" என்னும் பொருள்பற்றிப் பண்டித வித்துவான் திரு க. கி. நடராஜன் அவர்கள் ஓர் ஆராய்ச்சி நிறைந்த சொற்பொழிவை நிகழ்த்தினர். திருமூலர், நம்பிரான் திருமூலன் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பிரானென்னும் பெருமதிப்பான சொல்லால் திருத்தொண்டத் தொகையுள் போற்றப்பட்டவரென்று அவர் தமது பேச்சிற் குறிப்பிட்டார்.

வழிபாட்டின் அவசியம் பற்றி மதுரைத் திருஞான சம்பந்த மட ஆதீனகர்த்தர் அவர்கள் பேசுகையில் சிவலிங்கத்தின் மேன்மையையும் சிவலிங்க மூர்த்தத்தின் கருத்தையும் சிவலிங்க வழிபாட்டின் உன்னத நிலையையும் எடுத்துரைத்தார்கள்.

அன்றைய பிற்பகல் நிகழ்ச்சிகள்சைவபரிபாலனசபைத் தலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்களுடைய தலைமையில் நடைபெற்றன.

தலைவர் தமது முன்னுரையில் திருவைந்தெழுத்தின் பெருமையையும் திருநீற்றின் பெருமையையும் உருத்திராக்கத்தின் மேம்பாட்டையும் குறிப்பிட்டார்கள்.

அதன்பின் வழக்கறிஞர் திரு. அ. அருளம்பலமவர்கள் 'ஆனந்தத்தேன்' என்னும் பொருள் பற்றிப் பேசும்போது திருவாசகத்தின் கண்ணே வருகின்ற சைவசித்தாந்தக் கருத்துக்களை விரித்துரைத்தார்கள்.

பெரிய புராணத்துப் பெண்மணிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம் அவர்கள் மங்கையர்க்கரசியார், திலகவதியார், காரைக்காலம்மையார் ஆகியோரின் சிறந்த வாழ்க்கை பற்றிப் பேசினர்.

அப்பால் கீழ்க்காணும் பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேறின.

1. "யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஊர்கள் தோறும் கிளைச் சபைகளை நிறுவவேண்டும். அதற்காக ஒரு செயற்குழு தெரியப்படல் வேண்டும்.

2. ஞானப்பிரகாச முனிவர் பிறந்த இடமாகிய திருநெல்வேலியில் அவருடைய ஞாபகமாக ஒரு ஆலயமமைத்து வழிபாடு செய்ய ஒழுங்குகள் செய்தல் வேண்டும்.

அன்னார் எழுதிய சிவஞான சித்தியாருரையை அச்சிட வசதிகள் செய்தல் வேண்டும்.

இவ்விரண்டு பணிகளையும் புரியும் வண்ணம் இம்மகாநாடு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையைக் கேட்டுக் கொள்கிறது.

3. இலங்கையிலிருந்து இந்தியாவுக்குப் போகின்றவர்களுக்கு "விஸா" வழங்குவதற்கு ஒரு காரியாலயத்தை யாழ்ப்பாணத்திலும் ஸ்தாபிக்கவேண்டுமென இம்மகாசபையார் இந்

(15ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

சிறந்தமுறையில் "ரைப்பிறைற்றிங்" சொல்லிக்கொடுக்கப்படும். ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சுருக்கெழுத்தில் பட்டம் பெறுவதற்கு ஜோஸ்அன்ரூவை ஆலோசியுங்கள்—4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

உத்தரவாதத்துடனும், குறைந்த செலவிலும் சுருக்கெழுத்துப் படிப்பதற்கு, ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ரூடியோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

உங்கள் வீட்டுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் 286க்கு போன் செய்யுங்கள்.

உங்கள் வீட்டுக்குப் பொருள்கள் வினியோகம் செய்யப்பட வேண்டுமானல் "விநோதன்ஸ்" யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது—வீனஸ் சோப்—கே. கே. எஸ். ஸ்ரேட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானல் வீனஸ் சோப்—கே. கே. எஸ். ஸ்ரேட், யாழ்ப்பாணம்.


உங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய சகலவிதமான

**இரும்புச் சாமான்களுக்கு**

எங்களிடம் விசாரியுங்கள்

★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
★ உருண்டைக் கம்பிகள் ,,
★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
★ தீந்தை, வார்னிஸ் வகைகள்
★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும் எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கிறது.

**சண்முகம் ஸ்ரோர்ஸ்**

உரிமையாளர் : ஆ. சண்முகராசா

**222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

போன்: 697




எங்களிடம்

பவுண் மார்க் ஓடுகள் மான்தலை மார்க் ஒற்றைப்பீலி இரட்டைப் பீலி ஓடுகளும்

★

**நெல்லு, எள்ளு, அரிசி**

முதலியனவும்



சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்

**R. சிவகுமாரன்**

76, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்

# தேர்தல் தொகுதிகள் நிர்ணயம்
## இலங்கையில் கையாளப்படும் விதிமுறைகள்

[ அரசியல் அவதானி ]

சோல்பரி அரசியல் திட்டத்தின்படி இலங்கையில் இரண்டாவது தேர்தல் தொகுதி நிர்ணயக்குழு நியமிக்கப்பட்டுக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் இந்நாட்களில் தொகுதிகள் நிர்ணயம் சம்பந்தப்பட்ட விதிகளையும் முறைகளையும் விளக்கி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தேர்தல் தொகுதிகள் நிர்ணயம் பற்றிய விதிகள் "இலங்கை அரசியலமைப்புச் சட்டம், பெப்ரவரி 1948" என்ற அரசாங்க வெளியீட்டில் 40 தொடக்கம் 44 வரையுள்ள பிரிவுகளில் கூறப்பட்டிருக்கின்றன. 1959-ம் வருட அரசியலமைப்புச் சட்ட 4-ம் இலக்கத் திருத்த மசோதாவினல் இவ்விதிகள் திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றன. பிரதான விதிகளின் சுருக்கம் வருமாறு-:

1. ஒவ்வொரு குடிசன மதிப்பும் நடைபெற்ற ஒரு வருட காலமாவதற்குமுன் மகா தேசாதிபதி அரசியலிற் பங்குபற்ருத மூன்று அங்கத்தவர்களைக்கொண்ட ஒரு தொகுதி நிர்ணயக் குழுவை நியமிக்கவேண்டும்; அவர்களுள் ஒருவரைக் குழுவின் தலைவராகவும் நியமிக்கவேண்டும்.

2. தொகுதி நிர்ணயக்குழு ஒவ்வொரு மாகாணத்தையும் 75,000 சனத்தொகையடங்கிய தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கவேண்டும். மேலும் 1,000 சதுரமைல் விஸ்தீரணத்துக்கு ஒரு தொகுதிவீதம் ஒவ்வொரு மாகாணத்திலும் சில தொகுதிகளைப் பின்வரும் எண்ணிக்கையின்படி சேர்க்கவேண்டும் :-

| | |
|---|---|
| மேல் மாகாணம் | 1 |
| மத்திய மாகாணம் | 2 |
| தென் மாகாணம் | 2 |
| வட மாகாணம் | 4 |
| கீழ் மாகாணம் | 4 |
| வடமேல் மாகாணம் | 3 |
| வடமத்திய மாகாணம் | 4 |
| ஊவா மாகாணம் | 3 |
| சப்பிரகமுவா மாகாணம் | 2 |

இலங்கையின் விஸ்தீரணம் 25, 332 சதுர மைலாக இருப்பதால் இம்முறையில் 25 தொகுதிகள் நியமிக்கப்படுகின்றன.

3. தொகுதிகளாகப் பிரிக்கும்பொழுது மாகாணத்தின் போக்குவரத்து வசதிகள், இயற்கை அமைப்புகள், வசிக்கும் மக்களின் ஒற்றுமை வேற்றுமைகள் ஆகியனவற்றைத் தொகுதி நிர்ணயக்குழு கவனித்துக் கூடிய அளவுக்கு ஒவ்வொரு மாகாணத்தையும் சம சனத்தொகை அடங்கிய தொகுதிகளாகப் பிரிக்கவேண்டும்.

4. சிறுபான்மையராக வசிக்கும் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் நோக்கத்துடன் தேவையான இடங்களில் இரண்டு அல்லது மூன்று அங்கத்தவரைத் தெரிந்தெடுக்கும் பல அங்கத்தவர் தொகுதிகளை அமைக்கத் தொகுதிநிர்ணயக் குழுவுக்கு அதிகாரமுண்டு.

5. தொகுதி நிர்ணயக் குழு அங்கத்தவரிடையே அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் பெரும்பான்மையோரின் தீர்மானம் முடிவானதாக ஏற்கப்படும். ஒவ்வொரு அங்கத்தவரும் தனித்தனியாகக் கருத்து வேற்றுமைப்படும்போது தலைவரின் அபிப்பிராயம் குழுவின் அபிப்பிராயமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

### முதலாவது அறிக்கை

இவ்விதிகளை அனுசரித்து 1946 இல் கணிக்கப்பட்ட குடிசன மதிப்பைத் தொடர்ந்து முதலாவது தொகுதி நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டது. 30-8-46 இல் வெளியிடப்பட்ட அவர்களுடைய அறிக்கையின்படி இலங்கை 95 அங்கத்தவரைத் தெரிவுசெய்யும் 89 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இவற்றுள் ஐந்து பல அங்கத்தவர் தொகுதிகள். அவை பின்வருமாறு ;-

i. மத்திய கொழும்பு — 3 அங்கத்தவர் தொகுதி.
ii. அம்பலாங்கொடை - பலப்பிட்டி—இரட்டை அங். தொகுதி
iii. கடுகன்னவை — " " "
iv. பலாங்கொடை — " " "
v. பதுளை — " " "

மாகாண ரீதியாகத் தொகுதிகளின் எண்ணிக்கை வருமாறு:

| | |
|---|---|
| மேல்மாகாணம் | 18 |
| மத்திய மாகாணம் | 14 |
| தென் மாகாணம் | 11 |
| வடமேல் மாகாணம் | 10 |
| வட மாகாணம் | 9 |
| சப்பிரகமுவா மாகாணம் | 9 |
| கீழ் மாகாணம் | 7 |
| ஊவா மாகாணம் | 6 |
| வடமத்திய மாகாணம் | 5 |
| மொத்தம் | 89 |

1948 இல் நிறைவேற்றப்பட்ட பிரஜா உரிமைச்சட்டம், 1949 இல் நிறைவேற்றப்பட்ட இந்திய பாகிஸ்தானி வாசிகள் பிரஜா உரிமைச்சட்டம், பாராளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் ஆகியவற்ருல் மலைநாட்டில் வாழும் இந்திய மக்களுள் ஏறக்குறைய எல்லாருக்கும் இருந்த வாக்குரிமை பறிபோயிற்று. இதனல் பல மலைநாட்டுத் தேர்தல் தொகுதிகளில் வாக்காளரின் எண்ணிக்கைபெருமளவிற் குறைந்துபோயிற்று. 1947 இல் ஏழு அங்கத்தவரைப் பாராளுமன்றத்துக்குத் தெரிந்தனுப்பிய இந்திய வாக்காளர், 1952, 1956-ம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களில் ஒரு அங்கத்தவரையும் தெரிந்தெடுக்க முடியாத நிலையை அடைந்தனர்.

### கைவிடப்பட்டது

1954 இல் இயற்றப்பட்ட இந்திய பாகிஸ்தானியர் பாராளுமன்றப் பிரதிநிதித்துவச் சட்டப்படி இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யப்பட்ட இந்தியருக்கும் பாகிஸ்தானியருக்கும் அகில இலங்கை ரீதியில் நான்கு அங்கத்தவரைத் தெரிந்தெடுக்கும் உரிமை 1966 வரை வழங்கப்பட்டது. இது நடைமுறைக்குக் கொண்டுவரப்படாமல் 1959 இல் கைவிடப்பட்டது.

1953 மார்ச் மாதத்தில் குடிசன மதிப்புக் கணிக்கப்பட்டது. ஆனல் தொடர்ந்து தொகுதி நிர்ணயக்குழு நியமிக்கப்படாமல் 1956 இல் பொதுத்தேர்தலும் நடைபெற்றது.

1958 ஜுலையில் அரசியற் திட்டத்திற் செய்யவேண்டிய திருத்தங்களை ஆராய்வதற்குப் பாராளுமன்றம் ஒரு தெரிவுக் குழுவை நியமித்தது. அக்குழுவினர் 1958 மார்கழியில் வெளியிட்ட முதலாவது அறிக்கையின்பிரகாரம் 1959-ம் வருட 4-ம் இலக்க அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1959 பெப்ரவரியில் இரண்டாவது தொகுதி நிர்ணயக்குழு நியமிக்கப்பட்டது. 30-6-1959 குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் தொகுதிகளை இக்குழு நிர்ணயிப்பதற்குத் திருத்தச் சட்டம் வகை செய்கின்றது. குடிசனப் புள்ளி விபரங்கள் 19-2-59 இல் ஒரு விசேஷ 'கசற்' அறிக்கையாக வெளியிடப்பட்டன.

### 150 தெரிவுசெய்யப்படும் அங்கத்தவர்கள்

குடிசன மதிப்பு புள்ளிவிபர அதிகாரியின் அறிக்கையின்படி 30-6-1958 இல் இலங்கையின் மொத்த சனத்தொகை 93,61,300 என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத்தொகையில் இலங்கைப் பிரஜைகள் 82,13,800; இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர் 11,47,500.

30-6-58 இல் மாகாண ரீதியில் சனத்தொகை மதிப்பு பின்வருமாறு :-

| | |
|---|---|
| மேல் மாகாணம் | 2547,500 |
| மத்திய மாகாணம் | 15,52,600 |
| தென் மாகாணம் | 12,58,700 |
| வடமாகாணம் | 6,64,300 |
| கீழ் மாகாணம் | 4,96,200 |
| வடமேல் மாகாணம் | 10,00,900 |
| வடமத்திய மாகாணம் | 2,75,100 |
| ஊவா மாகாணம் | 5,49,900 |
| சப்பிரகமுவா மாகாணம் | 10,16,100 |
| மொத்தம் | 93,61,300 |

இச் சனத்தொகையைக் கொண்டு சனத்தொகை அடிப்படையில் இலங்கை 125 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படும் என எதிர்பார்க்கலாம். விஸ்தீரண அடிப்படையிலுள்ள 25 தொகுதிகளையும் சேர்த்து எல்லாமாக 150 அங்கத்தவரைத் தெரிவுசெய்யும் தொகுதிகளாக இலங்கை பிரிக்கப்படலாம். மாகாண ரீதியாகத் தொகுதிகளின் எண்ணிக்கை பின்வருமாறு இருக்கும் என எதிர்பார்க்கலாம் :-

| மாகாணம் | விஸ்தீரணப்படி தொகுதிகள் | சனத்தொகைப்படி தொகுதிகள் | மொத்தம் |
|---|---|---|---|
| மேல் மாகாணம் | 1 | 34 | 35 |
| மத்திய மாகாணம் | 2 | 21 | 23 |
| தென் மாகாணம் | 2 | 17 | 19 |
| வட மாகாணம் | 4 | 9 | 13 |
| கீழ் மாகாணம் | 4 | 7 | 11 |
| வடமேல் மாகாணம் | 3 | 13 | 16 |
| வடமத்திய மாகாணம் | 4 | 4 | 8 |
| ஊவா மாகாணம் | 3 | 7 | 10 |
| சப்பிரகமுவா " | 2 | 13 | 15 |
| | | மொத்தம் | 150 |

சனத்தொகை வீதம் தொகுதிக்கு 75,000 என்றிருப்பதைக் குறைத்துச் சில இடங்களிற் தொகுதிகளை அமைத்தால் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஏதாவது மாற்றங்கள் ஏற்படும். தொகுதிநிர்ணயக் குழு தமது அறிக்கையை 1959 மே அல்லது ஜுன் மாதத்தில் வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் பின்பு புதிய தொகுதிகளின் வாக்காளர் இடாப்புக்கள் தயாரிக்கும் வேலை ஆரம்பமாகும். இவ்வேலை 1960 ஆம் ஆண்டு முடிவதற்குமுன் பூர்த்தியாக்கப்பட்டால்தான் 1961-ல் பொதுத்தேர்தல் உரிய தேதிகளில் நடைபெறும். இலங்கை 151 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படும் என்ற செய்தி இப்போது வெளியாகியிருக்கின்றது.

---

கண்ணோட்டம்: 3

# தேநீரும் சாப்பாடும்

விருந்தோம்பல் தமிழ் இனத்தின் சிறந்த பண்புகளில் ஒன்ருகும். இன்றுநாம் அப்பண்பை மறந்துவிட்டோம். பணங்கொடுத்தும்கூட நமக்குக் கிடைக்கும் உணவு அசுத்தமானதாகவும், சுவையற்றதாகவும் இருக்கின்றதே,நம் நாட்டில்!

ஆமாம்; எங்கள் நகரங்களிலுள்ள தேநீர்க்கடைகளையும், உணவு விடுதிகளையும்தான் குறிப்பிடுகிறேன். பொதுமக்கள் கொடுக்கும் பணத்திற்கு, அவர்களுக்குச் சுத்தமான உணவு கிடைக்கிறதா என்று கேட்டால், இல்லை என்றே சொல்லவேண்டும். ஏதோ சமைத்துப்போட வேண்டியிருக்கிறதே என்ற மனப்பான்மையுடன் அரையும் குறையுமாய் சாப்பாட்டைத் தயார்செய்கிருர்களே தவிர, வந்தவர் உள்ளங்குளிர உணவு அளிக்க வேண்டுமே என்ற பரந்த நோக்கம் உணவு விடுதிகள் வைத்திருப்போரிடம் இல்லை. இது வருத்தத்திற் குரியதாகும்.

வீதியருகேயுள்ள தேநீர்க் கடைகள் அசுத்தத்தின் இருப்பிடமாகக் காட்சியளிக்கின்றன. தேநீர் கலக்கும் இடத்திலேயே ஈக்கள் மொய்த்துவிடுகின்றன. அதிகமாக, அந்த ஈக்களில் பல தேநீர்க்கோப்பைக்குள்விழுந்து மனித வயிறுகளில் தஞ்சம் புகுந்துவிடுகின்றன.

நீங்கள் ஒரு தேநீர்க்கடைக்குச் சென்று, தேநீர் வாங்கி அருந்துகிறீர்கள். ஏன் உங்கள் வாய் கசக்கின்றது? வேருென்றுமில்லை. பல நாட்கள் சென்ற அதே சாயத்தினல்தான் அத் தேநீர் தயாரிக்கப்பட்டுள்ளது. அது கசக்காமல் பின் என்னதான் செய்யும்? இதனல் தேநீர்க் கடைக்காரருக்கு இலாபம்; உங்களுக்கோ, அன்று முழுவதும் வயிற்றுக் கோளாறும் வாய்க் கசப்புந்தான்.

இனி, ஒரு உணவு விடுதிக்குச் செல்வோம். ஒரு வேலையாள் உமதருகில் வந்துநிற்பார். "என்ன வேணும்?" என்பார். அவர் அதைக் கேட்கும் விதம் உம்மைத் திடுக்கிடச் செய்யும். ஆனல், அதற்கெல்லாம் நீர் பயப்பட்டால் எப்படிச் சாப்பிட முடியும்? நீர் ஒருவாறு தைரியத்தை வரவழைத்து, "எனக்கு ஒரு சாப்பாடு" என்று சொல்லும். வேலையாள் சென்றுவிடுவார். பத்துப் பதினைந்து நிமிடங்கள் ஓடி விடும். உமக்குக் கோபம் வந்துவிடும். உம்மை உபசரிக்க வந்த அதே வேலையாள் பின்னும் அந்தப் பக்கத்தாலே வர நேரிடும். "என்னப்பா, எங்கே சாப்பாடு?" இது உமது கேள்வி.

"பொறும், ஐயா. அவசரப்பட்டால் என்ன செய்யிறது?"

(14 ஆம் பக்கம் பார்க்க)

சிறந்த போட்டோக்களுக்கு
தொலைபேசி: 252.
தந்தி: பாரத்போட்டோ
பாரத் ஸ்ருடியோ
படம் பிடிப்பவர்கள்
கஸ்தூரியார் ரேட், யாழ்ப்பாணம்.

தொடர் கதை

**இக்கதை முடிந்தவுடன் பின்னர் ஒருதரம் இதனை நீங்கள் திருப்பிப்படிக்க வேண்டிவரும். ஆகையால் இங்கு வெளிவரும் இதழ்களைப் பத்திரமாக அடுக்கி வைத்திருக்கவும்.**

# தேடி வந்த செல்வம்

**கசின்**

**உத்தியோகத்தை நாடும் ஓர் இனம் காலக்கிரமத்தில் மிருகப் பண்பு மிகுந்து விளங்கும்.**

1

எனக்கு முன்னால் அவள் வந்து இருந்தவுடன், நான் எழுந்துபோவதா? தொடர்ந்து இருப்பதா? என்று என்னுள் தீவிரமாக யோசித்தேன். எனக்குள்ளே கலவரமடைந்தேன். எனது நிலையை அவள் உணர்ந்திருக்கவேண்டும். நான் அவளைப் பார்க்காமலும், ஒன்றும் கேட்காமலும் இருக்கவும், அவள் பேசினாள். அதாவது எனது மனத்துள் எழுந்த கேள்விக்கு மறுமொழி சொன்னாள்.

'பெண்கள் பெட்டியில் ஒருவரும் இல்லை. எனக்குத்தனியே இருக்கப் பயமாயிருந்தது.' அவளுடைய இந்த வார்த்தைகள் எனக்கு மிகவும் நியாயமாகப்பட்டது. அவளுடைய பேச்சும் பேசிய தோரணையும், அவள்மீது எனக்கு நன் மதிப்பைக் கொடுத்தன. நான் கொஞ்சம் ஆறுதலாக மூச்சு விட்டு நிமிர்ந்து, உட்கார்ந்தேன்.

வண்டி - யாழ்தேவி - தனக்கேயுரிய வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. என்னைக் கவ்வியிருந்த நாணமும் சிறிது சிறிதாக விலகிக் கொண்டிருந்தது. நாணம் விலக விலக எனது உடம்பை இலேசாக அசைக்கவும் அங்கிங்கு பார்க்கவும் முடிந்தது. நாங்கள் இருந்த பெட்டியின் ஓர வழியால் போவோர் வருவோர் எங்களைக் கூறுகுறிப்பாகப் பார்த்துவிட்டுப் போகும்பொழுது, என்னை மீண்டும் வெட்கம் வந்து சூழ்ந்து கொள்ளும். பின்னர் வண்டியின் அசைப்பில், ஆட்டத்தில் அவ்வெட்கம் சிறிது சிறிதாக விலகும்.

எனது கால்களும், அவளுடைய கால்களும், மிகச் சமீபத்திலேயே இருந்தன. மிகவும் அவதானமாகவன்றி எங்கள் கால்களை இங்கே அங்கே அசைத்தாலும் அவை ஒன்றை ஒன்று தீண்டிவிடும். அதனால் நான் எனது கால்களை மிகவும் பக்குவமாக நேராக வைத்திருந்தேன்.

சுதந்தரமின்றி, சிறையிலிருக்கும் கைதிபோல நான் இருந்தேன். கைதிபோலல்லாது மனத்திற்குள் ஒரு சுகமும் இருந்தது. பயமும் கூச்சமும் இருந்த போதிலும், ஒரு உற்சாகமும் நெஞ்சத்தின் அடித் தளத்திலிருந்து ஊதிக் கொண்டிருந்தது. அந்த மெல்லிய ஊதலை நான் அடக்கி அடக்கிக் கொண்டிருந்தேன். யாழ்தேவி கனவேகமாகப் போய்க்கொண்டிருந்தது.

அந்தச் சூழல் மெல்ல மெல்ல எனக்குப் பழகி வந்தது. எனினும் அவளுடன் சம்பாஷிக்க எனக்கு நா எழவில்லை. வார்த்தைகள் தோன்றவில்லை. என்ன கேட்க வேண்டும் என்றே தோன்றவில்லை. அவள்தான் முதலில் என்னோடு பேசிவிட்டாளே. பெண்கள் பெட்டியில் தனியே இருக்கப் பயந்து இங்கே வந்ததாகக் கூறினாளே.

நான் அதற்கு ஒரு மறுமொழியும் சொல்லவில்லை. என்ன சொல்ல இருக்கிறது. புகைவண்டி எனது புகைவண்டியா? யாரும் எங்கேயும் இருக்கலாம். அவள் என்னோடு தனியே வந்திருப்பது பார்ப்பவர்களுக்கு நன்றாய் இராது. ஆனால் அவள் சொன்ன நியாயமோ மிகவும் சரியானது அதற்கு நான் என்ன சொல்ல இருக்கிறது. 'மிகவுஞ் சரி' என்ற தோரணையில் தலையை ஒரு மாதிரி ஆட்டி வைத்தேன். பிறகு என்ன பேசுவதென்று எனக்குத் தோன்றவில்லை.

சிறிது சிறிதாக அவளை அவதானித்தேன். கூந்தலை இரண்டாகப் பின்னி விட்டிருந்தாள். ஒரு கையில் கைக்கடிகாரமும், ஒரு கையில் ஒற்றைக் காப்பும் அணிந்திருந்தாள். கழுத்தில் ஒரு மெல்லிய சங்கிலி; அது உடைக்குள் சென்றது. அதில் என்ன தூக்கப்பட்டிருந்தது என்று தெரியவில்லை. அதில் தூக்க ஒன்றும் இன்மையால் உள்ளே விட்டாளோ தெரியவில்லை. சிலசமயம் அதில் தாலியும் தூக்கப்பட்டிருக்கலாம். இப்படி நினைக்க எனக்கு விருப்பமில்லை. அதில் ஒன்றும் தூக்கவில்லை என்றே நினைத்துக் கொண்டேன்.

தன்னை நான் அவதானிக்கிறேன் என்பதை அவள் எப்படியோ கண்டுவிட்டாள். தனது ஆடையைச் சரிசெய்து கொண்டாள். நான் ஏதோ தன்னைக் கேட்கப் போகிறேன் என்று நினைத்து நிமிர்ந்து உட்கார்ந்தாள். ஆனால் எனக்கு என்ன கேட்பதென்றே தெரியவில்லை.

நான் பேசுவேனென்று, அவள் சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தாள். நான் பேசவில்லை. அவளே மீண்டும் பேசினாள்.

'நீங்கள் எங்கே போகிறீர்கள்' என்னைக் கேட்டாள். 'நான் கிளிநொச்சிக்குச் செல்கிறேன்;' என்று மிகவும் அடக்கமாகவும், பணிவாகவும் கூறினேன். எனது அடக்கமும், பணிவும் அவளுக்குச் சிரிப்பு வருவித்தன போலும். அவள் ஒரு புன்சிரிப்புடன் 'கிளிநொச்சியில் உத்தியோகமோ? கொழும்பில் உத்தியோகமோ?' என்று என்னைக்கேட்டாள்.

என்னைக் கேட்கக் கூடாத கேள்வி எந்தக் கேள்வியோ அந்தக் கேள்வியைக் கேட்டு விட்டாள். கேட்கக்கூடாத கேள்வியைக் கேட்டுவிட்டாள். எனக்கு ஆத்திரம் வந்து விட்டது. முன்னால் இருப்பவள் ஒரு பெண்—புதியவள் — என்பதையும் மறந்துவிட்டேன்.

சவாரி மாடுகளுக்குப் பின்னங்காற்றொடையில் ஒரு அங்குலச் சதுரமளவில் அறுத்துச் சதையை எடுத்து, அதற்குள் ஒரு பீங்கான் துண்டை வைத்திருப்பார்களாம். தக்க தருணத்தில் அந்த இடத்தைக் காற் பெருவிரலால் அமர்த்த மாடு உயிரைப் பாராது ஆவேசமாகப் பாயும். இப்படி நான் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதுபோல எனக்கும் எனது நெஞ்சத்தில் தொடக் கூடாத இடத்தில் அவள் தொட்டுவிட்டாள். அதுவரை அவள்மீது நான் வைத்திருந்த மதிப்பு மரியாதை எல்லாம் பஞ்சாய்ப் பறந்துவிட்டன.

நாங்கள் இருவரும் கொழும்பிலிருந்து பிற்பகல் இரண்டே கால் மணிக்குப் புறப்படும் யாழ்தேவியில் பிரயாணஞ் செய்தோம். இருவரும் யாழ்ப்பாணத் தமிழர்கள். கொழும்பில் ஏறினோம். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் இறங்க வேண்டுமே. நான் இறங்குமிடம் கிளிநொச்சி என்று சொன்னதும், அவள் கிளிநொச்சியிலா கொழும்பிலா உத்தியோகம்? என்று வாயாடித்தனமாகக் கேட்டுவிட்டாள்.

இக்கேள்வி எனது நெஞ்சப் புண்ணில் வேல் ஒன்று செலுத்தியது போலிருந்தது. எனது முகம் மாறிக் கோபாவேசம் உற்றதை அவள் அவதானித்துப் பயந்து போனாள். ஒடுங்கி அடங்கி இருந்தாள். அப்பொழுது எனது கண்ணுக்குச் சிறு பூச்சிபோல அவள் இருந்தாள்.

அவளுடைய அந்தக் கேள்விக்கு எனக்கு ஏன் ஆத்திரம் வரவேண்டும் என்று நீங்களும் அதிசயப்படலாம். நான் ஒரு அரசாங்க உத்தியோகத்தனகத்தான் இருந்தேன். மாதம் முந்நூறு ரூபாய் சம்பளம் பெற்று வந்தேன். ஆரம்பமுதல் எனக்கு உத்தியோகம் பிடிக்கவில்லை. வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் ஒரே மாதிரியாகக் கந்தோருக்குள் வேலை செய்ய என்னால் முடியவில்லை. காலையில் எழுந்ததும் அவசரமாகக் கந்தோருக்கு ஓடவேண்டும்; மாலையில் திரும்பி ஓடிவர வேண்டும். அப்பப்பா ஒரு நாளா? இரண்டு நாளா? ஆயுள் முழுவதும் இந்த அவதி. இதை யாரால் பொறுக்கமுடியும்.

மாதா மாதம் சம்பளத்தை எடுத்து அவனுக்கும் இவனுக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டு வெறுமனே திரியவேண்டும். மிச்சமும் பிடிக்க இயலாது. காணாது என்று, கூட உழைக்கவும் முடியாது. இந்த இயந்திர வாழ்க்கை என்னால் சகிக்க முடியவில்லை. தொடக்கத்திலிருந்தே விடப்போகிறேன், விடப்போகிறேன்; என்று சொல்லி வந்தேன்.

'நீ இல்லா விட்டால் இந்தக் கந்தோரில் வேலை நடவாது என்று நினைக்கிறாயா?' என்று ஒரு நாள் எனது மேலதிகாரி, அவர் விட்டுக் காட்டிய தவறை நான் சுட்டிக்காட்டியபொழுது கேட்டார். 'நான் அப்படிச் சொல்லவுமில்லை; நினைக்கவுமில்லை. தவறு யார் செய்தாலும் திருத்தப்படவேண்டியது தானே' என்று நான் வினயமாக மொழிந்தும் குதித்து எழுந்தார். நானும் குதித்து எழுந்துவிட்டு, கையோடே விளையாட்டு விளையாட்டாக நான் தொழிலிலிருந்து விலகும் கடிதத்தையும் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன்.

என்னுடைய சக உத்தியோகத்தர்களும், ஏனைய மேலதிகாரிகளும், 'நீ முன்னுக்கு வரக்கூடியவன்; ஒரு காலத்தில் பெரிய பதவியில் இருப்பாய்; விடாதே;' என்று தடுத்தார்கள். நான் கேட்கவில்லை.

என்னுடன் கூடப்பிறந்தவர்கள் எனது தமையன்மார் இருவர்; அவர்களும் உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் 'உன்னுடைய திறமை எங்களுக்கில்லை. நாங்கள் விட்டாலும் பரவாயில்லை. நீ விடக்கூடாது. பெரிய பதவிக்கு வருவாய்; உன்னால் எங்களுடைய சுற்றமே மேலோங்கும்;' என்று தடுத்தார்கள். 'நான் திறமையுள்ளவன் ஆனபடியால்தான் விடுகிறேன்; திறமையுள்ளவன் எப்படியும் முன்னேறுவான்; என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்' என்று சொல்லி விட்டேன்.

என்னுடைய தகப்பனார் தடுத்தார். அவருக்கும் நான் மற்றவர்களுக்குச் சொன்ன விடையையே கூறினேன்.

கடைசியாக எனது தாயார் அழுதார்; குழறினார்; நான் மசியவேயில்லை. ஆனால் அவர் சொன்ன ஒரு வார்த்தைக்கு அப்பொழுது நான் சிரித்தேனேயெனினும், அது என் நெஞ்சத்தில் ஒரு புண்ணை ஏற்படுத்திவிட்டது.

'உன்னை ஒருத்தியும் கலியாணஞ் செய்ய விரும்பமாட்டார்களடா' என்று எனது தாய் சொல்லி அழுதார். 'அது தான் இன்னும் நல்லது' என்று நான் சொல்லி அப்பொழுது சிரித்தேன். ஆனால் அவ்வார்த்தைகள் என் நெஞ்சில் ஆழமாகப்பதிந்துவிட்டன.

'அந்தப் புண்ணிற்றான் 'எங்கே உத்தியோகம்' என்ற வேலை எனக்கு முன்னிலையில் இருந்தவள் பாய்ச்சினாள். உடனே எனக்கு அளவற்ற கோபம் வந்ததுக்குக் காரணம் அந்தப் புண்தான். (தொடரும்)


**பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?**

**ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்**

**பொலிடோல்:** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ்:** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று:** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சீரிசையன்:** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**தைகருகாபாமற்று:** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல்:** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை:** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீனிடுயா நச்சுப்பசை:** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள்:** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

**மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்**
K. S. செல்லையா, றோயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்டோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக் கொள்க.

தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம்:

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**

தபால் பெட்டி இல. 743.

**கொழும்பு 8.**

முதிர்ந்த இலக்கியம் : 2

அறிவின் முதிர்ச்சி, நாகரிகத்தின் முதிர்ச்சி பொதுவாயுள்ள மக்களின் மொழிநடையில் ஒரு பூரணத்துவம்—முழுமை—இவையாவுமே கிளாஸிக் பிறப்பதற்கு ஏற்ற சூழ்நிலையாகும்

# இலக்கியப் பொன்சிகரம்

— ரா. ஸ்ரீ. தேசிகன் —

ஸாந்தேபுவே தொடங்கினது போலவே டீ. எஸ். எலியட்டும் தம் கட்டுரையைத் தொடங்குகின்றார். " 'கிளாஸிக்' ரொமான்டிக் என்ற வாதம் வெம்போர் புயற்காற்றிற்கு இடந்தராமல் கிளாஸிக் என்றால் என்ன? என்ற பொருளைப் பற்றி மட்டும் ஆராயப் புகுகின்றேன்" என்று அவர் கூறுகின்றார்.

"நாகரிகம் முதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும், மொழியும் அம்மொழியால் பிறந்த இலக்கியமும் ஒரு பழுத்த நிலையில் காட்சி அளிப்பதுதான் கிளாஸிக்கின் சின்னமாகும். அதுவும் முதிர்ந்த அறிவாளியின் செஞ்சொற் படைப்பாயிருக்க வேண்டும்.*

அறிவின் முதிர்ச்சி, நாகரிகத்தின் முதிர்ச்சி பொதுவாயுள்ள மக்களின் மொழிநடையில் ஒரு பூரணத்துவம்—முழுமை—இவை யாவுமே கிளாஸிக் பிறப்பதற்கு ஏற்ற சூழ்நிலையாகும்.

* A classic can only occur when a civilization is mature; when a language and a literature are mature; it must be the work of a mature mind.

ஒரு கிளாஸிக்கைப் படித்தால், அதற்கு முன்பு சென்ற அத்தனை நூல்களையும் படித்ததை ஒக்கும். "கிளாஸிக்குக்கு ஒரு தக்க சான்றாய் நிற்பவர் வர்ஜில் தாம் என்று டீ. எஸ். எலியட் கருதுகின்றார். வர்ஜில் திகழ்ந்தகாலம் ரோமாபுரியின் நாகரிகம் தழைத்தோங்கி நின்றகாலம். வர்ஜிலைப் படித்தோமானால் வர்ஜிலுக்கு முன் சென்ற அத்தனை கிரேக்க இலக்கியத்தைப் படித்த பேற்றை நாம் அடைவோம். லத்தீன்மொழி அவர் கையில் மிகவும் பழுத்த மொழியாகப் போய்விட்டது. கிளாஸிக் குறுகிய இயல்பாயிருக்கக்கூடாது. அதில் உலகத்தையே கட்டித் தழுவக்கூடிய அம்சங்கள் மிளிரவேண்டும்.

## காளிதாசன்

இவ்விருவர் தந்த இலக்கணங்களாம் அளவு கோலை வைத்து நம் தமிழ் இலக்கியத்தை அளப்போமாக. வடமொழியிலும் இதே நிலையைத் தான் நாம் பார்க்கின்றோம். வடமொழியின் முதிர்ச்சியில் தான் காளிதாஸன் தோன்றினான். காளிதாஸனைப் படித்தோமானால் இவருக்கு முன் திகழ்ந்த வால்மீகி, வியாஸர், இவர்களின் நூல் நயங்களைப் பருகிய உணர்ச்சி எழும். காளிதாஸனில் வால்மீகியின் அடிகள் அப்படியே இழைத்து வைத்திருப்பதைக் காண்போம். 'வயிரமணியில் துளைக்கப்பட்ட துவாரங்களில் நூல் செல்லுவதுபோல நானும் எனக்கு முன் சென்ற சான்றோர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்றேன்' என்று காளிதாஸன் தம் ரகு வம்சத்தில் மொழிகின்றார்.

## பக்தி வெள்ளம்

சிலப்பதிகாரத்தை ஒரு 'கிளாஸிக்' என்று சொல்லலாம். அகவற்பா தொகை நூல்களில் அத்தனை முதிர்ச்சி அடையவில்லை. இளங்கோ கையில் அது மாசில் வீணைபோல ஒலிக்கின்றது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் இசைத்த பக்திப் பாடல்கள் ஒரு முதிர்ச்சி அடைந்துவிட்டன. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் ஒரு பக்தி வெள்ளம் எங்கும் பொங்கிப் பரந்ததை நாம் பார்க்கின்றோம்.

"பொலிக பொலிக பொலிக
போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக்கு இங்கு யாதொன்
[றுமில்லை
கலியும்கெடும் கண்டு கொண்
மின் கடல் வண்ணன் பூதங்
[கள் மண்மேல்
மலியப்புகுந்து இசை பாடியுழி
தரக் கண்டோம்
கண்டோம் கண்டோம்
கண்டோம் கண்ணுக்கினியன
[கண்டோம்
தொண்டீர் எல்லீரும் வாரீர்
தொழுது தொழுது நின்றார்
[த்தும்
வண்டார் தண்ணந் துழாயன்
மாதவ பூதங்கள் மண்மேல்
பண்தான் பாடி நின்றாடிப்
பரந்து திரிகின்றனவே."

## வைணவக்கிளர்ச்சி

ஆறும் நூற்றாண்டிலிருந்த நம்மாழ்வாருடைய இப்பாடல்களில் ஒரு பெரும் வைணவக் கிளர்ச்சி கோயில் கொண்டிருப்பதை உணர்கின்றோம். சிவநேசச் செல்வர்களின் சைவப் பக்தி வெள்ளமும் பெருக்கெடுத்தோடிற்று.

இவ்வெள்ளங்களின் சிகரங்கள் மீது மிதந்து செல்லும் நம்மாழ்வார் அப்பர் மாணிக்கவாசகர்—இவர்களுடைய நூல்களைக் 'கிளாஸிக்' என்று மொழிவதற்குத் தடையுண்டோ?

விருத்தப்பா ஆழ்வார்கள் கையிலும் நாயன்மார்கள் கையிலும் நல்ல யாழ்போல் இசைத்ாலும், இவர்கள் இதை வைத்துக்கொண்டு ஒரு காப்பியம் சமைக்கவில்லை. திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணியென்ற காப்பியத்தை நமக்கு நல்கினார்; ஆனால் விருத்தப்பா முழு ஆற்றலையும், அழகையும், முதிர்ச்சியையும் கம்பர் கையில் தான் எய்திற்று என்று இயம்பலாம். கம்பர் ஒரு 'கிளாஸிக்' என்பதில் யாதொரு ஐயமுமில்லை. மத்தியகாலத்தில் இவர் ஒரு வானளாவும் சிகரம் போலிருக்கிறார். ஒரு மகா கவி இவருக்கு முன்பும் இல்லை, பின்பும் இல்லை என்றளவுக்கு இவர் ஓங்கிக் கம்பீரமாய்க் காட்சி அளிக்கின்றார்.

## வள்ளுவர்-கம்பர்-பாரதி

ஒழுக்க நெறியைக் காண்பிப்பதில் திருவள்ளுவர் ஒரு கிளாஸிக் என்பதில் யாதொரு ஐயமுண்டோ? வள்ளுவருக்கு மேல் அவர் ஞான புத்திரரான கம்பர் ஒருபடி மேலேசென்றுவிட்டார். அறத்துப்பாலிலுள்ள உயர்ந்த லட்சியத்தைப் பொருட்பாலில் காணமுடியவில்லை. தனித்த மனிதனின் அறத்தைப் பற்றிக் கூறுகின்ற திருவள்ளுவர் இயேசுநாதரின்மலைஉபதேசத்தை நினைவூட்டுகின்றார். ஆனால் அரசியல் தத்துவத்தில் சாணக்கியர் மணம் வீசுகின்றார். தனித்த மனிதன் நெறிக்கும் அரசியல் தத்துவத்திற்கும் இடையே விரிந்து கிடந்த பிளவுக்குப் பாலம் போட்ட பேறு கம்பரைச் சார்ந்ததாகும். அன்புதான் எல்லாவற்றின் மீதும் ஆட்சிபுரியவேண்டும், யாரோடும் பகை கொள்ளலில் என்ற பின் போரொடுங்கும் என்று கம்பர் மொழிந்த புனித சொற்களை உலகங் கேட்டு உய்யட்டும். வள்ளுவர், இளங்கோ, கம்பர் என்ற இலக்கியப் பொன்சிகரங்களுக்கு நாம் வணக்கஞ் செய்வோமாக. நவீன காலத்தில் நமக்குக் காட்சி அளித்த பாரதியும் ஒரு கிளாஸிக் தான். இவருடைய நூலில் பழமையும் புதுமையும் கைகோத்துத் தெய்வத் திருநடம் புரியப் பார்க்கின்றோம். இத்தகைய சான்றோர்கள் பிறந்த தமிழ் நாட்டை வணங்கிக் கன்னித் தமிழ் வளர்ப்போமாக.

## ஈழத் தமிழர் சிறப்பு

— கே. கணேஷ் —

ஈழச் சிறுதீவில் என்னைப் பிறப்பித்து
வாழ வகுத்திட்ட வள்ளல் மகனுகும்
கோழிக் கொடியோய் குமரா கதிர்காமா
ஈழத் தமிழர் இயல்பைநீ கேளாயோ!

மூன்று தமிழர் முயன்றுமிகக் கூடிடிலோ
தோன்றும் அதனிடையே தொண்ணூறு கட்சிகளாய்
ஆன்ற தமிழ்த்தலைமை ஆகுந் தமக்கென்பார்
சான்று பலகூறிச் சட்டவழி யுங்காண்பார்.

அன்றாளுங் கட்சிக் கடிவ்ருடி கூறிடுவார்
தொன்று தொடக்கம் தொழிலெம தாயிருக்க
இன்று இவரென்ன இத்தொழிலைச் செய்வித்தல்
நன்று எனநகைத்து நாடெங்கும் தூற்றிடுவார்.

எங்கும் தலைவீக்கம் எங்கும் இனப்பிரிவு
சங்கு முழங்கிஎரி சட்டிசெலப் பின்சென்று
அங்கு இடுகாட்டில் ஆளுடன்போய்த் தான்மட்டும்
தங்கும் பிணத்திற்கும் சாதிசொலித் தள்ளிடுவார்.

தன்னைப் புகழாரைத் தான்மதியார் அன்னவர்கள்
என்ன எழுதிடினும் ஏற்றம் உளதெனினும்
அன்ன துயர்வோகாண் ஆனதோர் குப்பையென்பார்
தன்னுள் குழுவமைப்பார் தற்புகழ்ச்சி செய்திடுவார்.

அன்பே சிவமென்று ஆன்றோர் மொழிந்ததெலாம்
என்றோ எழுதிவைத்த ஏட்டுச் சுரைக்காயோ?
இன்று இருப்பதெல்லாம் எங்கும் பகையுணர்ச்சி
சின்னவனைக் கண்டவுடன் சீறும் பெரியோனும்

இல்லானைக் கண்டதுமே ஏளனங்கள் செய்வதுவும்
கல்லானைப் போற்றியவன் காசுக்காய் ஏற்றுவதும்
வல்லானைக் கண்டிடிலோ வாய்மூடிப் போவதுவும்
எல்லாம் இதுநாள் இயங்கும் செயலாகும்.

அங்கே தமிழ்நாட்டில் ஆரியரைத் தூற்றிடவும்
இங்கே தமிழர்தமை இன்னொருவர் தாக்குவதும்
மங்குக இந்தியென மற்றங்கு ஓலமிட
இங்கு தமிழொழிக என்று எதிரொலிக்கும்.

பெண்மை உயர்வென்று பேசித் திரிவதல்லால்
கண்ணில் தெரிகின்ற காரிகைகள் யாரெனினும்
கண்வீசிக் காமுற்றுக் கடத்தத் துணிகின்ற
பண்பைத் தமிழர்சிலர் பாங்கெனவே கொண்டனரோ?.

கள்ளைக் குடிப்பார் களவுபல செய்திடுவார்
கொள்ளை அடிப்பார் குடிகள் பலகெடுப்பார்
குள்ள உளமுடையார் கோணல் மனத்தரெலாம்
வள்ளு வரைமொழிந்து வாய்நிறையப் பேசிடுவார்.

சொல்லும் செயலிரண்டும் சோர்வு படாதிங்கு
நல்ல செயலிரங்கி நாடு செழிப்பதற்கும்
வல்ல தொழில்பெருகி வாழ வகைசெய்து
எல்லை யிலாநலன்கள் இன்றே அடைந்திடவும்

கள்ளம் ஒழிந்திடவும் காய்ச்சல் மறைந்திடவும்
உள்ளம் விரிந்திடவும் உண்மை பெருகிடவும்
தெள்ளு தமிழரது சீலம் உயர்ந்திடவும்
வள்ளல் மகனே நீ வாழ்த்து.

## பத்திரிகை ஆசிரியருக்கு ஒரு லட்ச ரூபாய்!

சென்னையிலிருந்து வெளியாகும் "ஆந்திரப் பிரபா" என்ற கோயங்காவின் பத்திரிகை ஆசிரியர், வி. ஆர். நாரளாவுக்கு 50 வயதாகிறது. அவரது 25 வருஷ பத்திரிகை சேவையைப் பாராட்டு முகமாக ஒரு லட்ச ரூபாய் அடங்கிய பண முடிப்பு அவருக்கு அளிக்கப்பட்டது.

வரவேற்புக் கமிட்டியில் ஆந்திர ராஜ்ய பிரதம மந்திரி சஞ்சீவ ரெட்டி, யூனியன் மந்திரி பி. கோபால ரெட்டி, உத்தர பிரதேச கவர்னர் வி. வி. கிரி இவர்களுள்ளிட்டுப் பல பிரமுகர்கள் சேர்ந்து ஆசிரியரைக் கௌரவித்தனர்.

சென்னையைச்சேராத ஆந்திர ராஜ்யத்தை ஒப்புக்கொள்ளலாமென்று அவர் பத்திரிகையில் எழுதி வந்தபோது, அந்தப் பத்திரிகையை ஆத்திரமடைந்த ஆந்திர மக்கள் பல இடங்களில் கொளுத்தினர். பின்னர் சில வருடங்களிலே, கோதாவரி வெள்ளக் கஷ்ட நிவாரணத்துக்கு வெற்றிகரமாக அப்பத்திரிகைநிதி திரட்டித் தந்தபோது, அவரை ஆந்திரம் நன்றியுடன் போற்றியது.

கோயங்காவின் மற்ற பத்திரிகைகள் காங்கிரஸின் நாகபுரி தீர்மானத்தையும், நிலச் சீர்திருத்த சட்டத்தையும் பலமாக எதிர்க்கையில்ஆசிரியர்—நாரளா "நான் சீர்திருத்தத்தைப்பலமாக ஆதரிக்கிறேன்.கோயங்கா என்னைத் தடுக்க முடியாது .நான் சுதந்திரவாதி" என்றார். அவர் டில்லி மேல் சபையில் ஓர் அங்கத்தினருமாவார்.


இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸன்ஸ்

ஹெப்பற்றோ - B12
(Hepato - B12)

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்
பாண்டு, இரத்தமின்மை
ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்
அற்புதமான மருந்து

கிடைக்குமிடம் :
புதியமலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி
268, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்

# மதுரையிலே அன்பு அடிப்படையில் நடைபெறும் கிராம ராஜ்யம்
# கிராம மக்களே பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளும் அபூர்வவழி

— ச. ஜெகந்நாதன் —

[கிராமங்களில் ஏற்படும் பிரச்சினைகளை கிராமமக்களே அன்பின் அடிப்படையில் எவ்விதம் தீர்த்துக் கொள்ளுகிறார்கள் என்பதை இந்தக் கட்டுரை விளக்குகின்றது. மதுரையிலேகிராமதானகிராமங்களில் சர்வோதய கூட்டுறவு முறை நடைபெறும் விதம் எதிர்கால இலங்கைக்கும் பயன்படுவதாக இருக்கும்.]

மதுரை ஜில்லாவிலுள்ள கிராமதான கிராமங்களில் 10 கிராமதான சர்வோதயக் கூட்டுறவு சொஸைட்டிகள் இயங்கி வருகின்றன. விவசாயம்செய்வதற்குச் சௌகரியமாக, ஐந்தாறு குடும்பங்கள் கொண்ட சிறு சிறு பண்ணைகளாகப் பிரித்து இக்கிராமங்களில் விவசாயம் செய்கிறார்கள். பண்ணைகளில் நிலம் உடையவர்கள், இல்லாதவர்கள் என்று இல்லை; குடும்பங்கள் சேர்ந்து உழைத்துப் பகிர்ந்து வாழ்கின்றார்கள்.

### பண்ணைத் தலைவரின் பண்பு

கூட்டுறவு சொஸைட்டி இயங்கிவரும் கணவாய்ப்பட்டி என்ற கிராமத்தில் 62 குடும்பங்கள் 7 பண்ணைகளாகப் பிரித்து விவசாயம் செய்கிறார்கள். ஒரு பண்ணையில், நெல் விளைச்சலில் விவசாயச் செலவு போக, மிகுதியைச் சமமாகப் பகிர்ந்து கொண்டார்கள். வீட்டில் சேரும் தவிடு முதலிய மாட்டுத் தீவனங்களைப் பண்ணையில் வேலை செய்யும் மாடுகளுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று அவர்களுக்குள் ஒரு ஏற்பாடு. ஆனால் சங்கிலி என்பவர் முன்பு நிலமில்லாதவர். நெல் அரைத்து, வந்த தவிட்டை 2 அணாவிற்கு விற்று குழந்தைக்கு வாழைப் பழம் வாங்கிக் கொடுத்துவிட்டார். வந்தது வினை! 2 அணாத் தவிட்டிற்காகப் பண்ணைத் தலைவருக்கும் சங்கிலிக்கும் சண்டை. பண்ணைத் தலைவர் "நிலத்தில் காலெடுத்து வைக்கக்கூடாது" என்று ஆத்திரத்தில் சொல்லி விட்டார். சங்கிலி முன்பு நிலமில்லாதவராக இருந்திருக்கலாம்; ஆனால் கிராமதான கிராமத்தில் அவருக்கு உரிமை உண்டல்லவா! அவரும் ரோஷத்துடன் பண்ணையைவிட்டு விலகி விட்டார்.

இப் பிரச்சினை கிராமப் பொதுச் சபைக்கு வந்துவிட்டது. பண்ணையிலுள்ளவர்கள் ஒரு முறை சேர்ந்ததற்குப் பிறகு குறைந்தது ஒரு வருஷத்திற்காவது பண்ணையில் வேலை செய்ய வேண்டுமென்ற பொது விதி வற்புறுத்தப்பட்டது. "பண்ணை நிலத்தில் கால் வைக்கக்கூடாது என்று பண்ணைத் தலைவர் எவ்வாறு சொல்லலாம்?" என்று சங்கிலி கேட்டார். தாம் ஆத்திரத்தில் பேசிவிட்டதாகவும், தான் சொன்னது தவறு என்றும் மன்னிப்புக் கேட்டார், முன்பு நிலத்திற்குச் சொந்தக்காரராயிருந்த பண்ணைத் தலைவர் மயிலான் அம்பலம்! அவருடைய பெருந்தன்மையைப் பஞ்சாயத்தார்கள் பாராட்டினார்கள். சங்கிலியும் திரும்பவும் பண்ணையில் சேர்ந்துகொண்டார்.

### அவர்களே கண்ட அரிய தீர்வு

மற்றொரு நாள் வெள்ளிக்கிழமை கிராமப் பொதுச்சபை சர்வோதய கிராமத்தில் கூடியது. 'மாரியப்பன் பண்ணை'யில் உழைப்பின் அடிப்படையில் விளைச்சலைப் பகிர்ந்து கொண்டார்கள். பண்ணை அங்கத்தினர்களில் ஒருவர் முக்கியமான பிரச்சினையொன்றைக் கிளப்பினார். வேலை செய்ய முடியாத குழந்தைகளும், முதியோர்களும் எல்லாக் குடும்பங்களிலும் ஒரே மாதிரி இருப்பதில்லையே? சில குடும்பங்களில் அதிகக் குழந்தைகள்; சில குடும்பங்களில் ஒன்றிரண்டு குழந்தைகள் தான். சமமாகப் பகிர்ந்து கொண்டால் எப்படி? இது நியாயமான கேள்வி. பண்ணை அங்கத்தினர்கள் திகைத்தார்கள். கூடியிருந்தவர்களெல்லாம் எங்களைப் பார்த்தார்கள். எங்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. தேவைக்குத்தக்கவாறு பிரித்துக்கொள்ள பண்ணை அங்கத்தினர்கள் தயாராயிருப்பார்களா என்ற சந்தேகம் எங்களுக்கு. பண்ணை அங்கத்தினர் மாரியப்பன் இச்சிக்கலை அவிழ்ப்பதற்குப் பரிகாரம்தேடி விட்டார். "எங்கள் பண்ணையில் 7 குடும்பத்தினர் இருக்கிறோம். இனிமேல் வருகின்ற விளைச்சலை 7 பங்கிற்குப் பதிலாக 8 பங்கு வைத்து, 7 பங்குகளை உழைப்பின் அடிப்படையிலும், 8-வது பங்கை அந்தந்த வீட்டிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு பிரித்துக் கொள்கிறோம்" என்றார். எல்லோர் முகத்திலும் ஒரு பிரகாசம். மற்ற அங்கத்தினர்களும் அதை ஆமோதித்துத் தலையாட்டினார்கள். இந்த அபூர்வமான யோசனை எங்களுக்குத் தோன்றவில்லை. விவசாயிகளே தங்கள் பிரச்சினைகளுக்கு வழி தேடிக்கொள்ள முடியுமல்லவா?

### திட்டமிட்டுச் சாகுபடி

அடுத்த நாள் மறுபடியும் அதே கணவாய்ப் பட்டியில் சர்வோதயப் பஞ்சாயத்துக் கூட்டம் கூடியது. இப்பொழுது அடிக்கடி கூட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. தங்களுக்கென்று ஒரு வருஷத் திட்டம் வகுத்துக்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு பண்ணையிலும் குழந்தைகள் உள்பட சராசரி 50 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். சமுதாய நல சமூகக் கல்வி அமைப்பாளர் உதவிகொண்டு சீரான உணவுத் திட்டம் தயாரித்து ஒரு வருஷத்திற்குத் தேவையான தானியம், பருப்பு, எண்ணெய் வித்துக்கள் முதலிய தேவைகளை நிர்ணயித்துக் கொண்டார்கள். துணித் தேவையை அனுசரித்து எவ்வளவு பருத்தி தேவையென்பதையும் முடிவு செய்திருக்கிறார்கள். சமுதாய நலத் திட்ட விவசாய அபிவிருத்தி அதிகாரியின் உதவி கொண்டு தங்கள் பண்ணைக்குச் சொந்தமான குறிப்பிட்ட புஞ்சையிலோ, தோட்டத்திலோ இவ்வருஷத்தில் என்னென்ன தானியங்கள் உற்பத்தி செய்வதென்ற திட்டத்தையும் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்புதிய முறையில் விவசாயிகள் அதிக உற்சாகம் காட்டி வருகிறார்கள். தாங்கள் தினசரி ஈடுபடுத்தும் உழைப்பையும் குறிப்பெழுதி வைக்க முடிவு செய்கிறார்கள். ஆணுடைய உழைப்பு "ஒரு வேலை (யூனிட்)", பெண்ணினுடைய உழைப்பு $\frac{1}{2}$ யூனிட், சிறுவர் சிறுமிகள் உழைப்பு $\frac{1}{4}$ யூனிட் என்றும் கணக்கு வைத்துக் குடும்பத்தின் அன்றாடஉழைப்புச் சக்தியைக் கணக்கெழுதிக்கொள்கிறார்கள். ஆகையால் தினசரிப் பண்ணை அங்கத்தினர்கள் கூட வேண்டிய அவசியமும், வாரம் ஒருமுறை எல்லாப் பண்ணைகளின் அங்கத்தினர்களும் கூடவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

### கூலிவேலைப் பிரச்னை

7-4-59 ல கணவாய்ப்பட்டியில் சர்வோதயப் பஞ்சாயத்து கூடியது; கிராமதான இயக்க ஊழியர்களும் சமுதாய நலத் திட்ட ஊழியர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். பரமசிவம் பண்ணையில் சோணை என்பவருடைய குடும்பத்திற்கு $\frac{1}{2}$ யூனிட்தான் கொடுக்கப்பட்டிருந்தது. இதற்குக் காரணம் என்னவென்று கேட்டபொழுது, அக்குடும்பத்தினர் நிலமில்லாதவர்கள்: அவர் கிணறு வெட்டும் வேலைக்குத் தினசரிக் கூலியாகப் போய் வருகிறார். அவ் வீட்டிலுள்ள பெண்கள்தான் தண்ணீர் கட்டுதல், களை பிடுங்குதல் போன்ற பண்ணை வேலைகளில் கலந்து கொள்கிறார்கள் என்று தெரிந்தது.

ஒரு குடும்பத்தில் பெண்கள் மாத்திரம் வேலை செய்ய நேர்ந்தால் அவர்களுக்கு எவ்விதம் பங்கு கிடைக்கும், எவ்விதம் பண்ணை விவசாயம் நடைபெறும்?" என்று இயக்க ஊழியர்கள் கேள்வி போட்டார்கள்.

பண்ணைத் தலைவர் பரமசிவம் "நாங்கள் என்ன செய்ய முடியும்? அவர் தினசரி கூலிவேலை செய்தால்தான் குடும்பம் சாப்பிட முடியும்?"

இயக்க ஊழியர் "பண்ணை அங்கத்தினரென்றால், அவருடைய கஷ்ட நஷ்டங்களில் நீங்கள் பங்குகொள்ள வேண்டாமா? அவர் கூலி ஆளாக வேலை செய்து கொண்டிருந்தால் அவர் எப்பொழுது உங்கள் பண்ணை அங்கத்தினராக முடியும்?"

பண்ணை அங்கத்தினர் ஒருவர் "எல்லோருக்கும் போதிய உணவு இல்லாதிருக்கும்போது அவருக்கு நாங்கள் எப்படி உதவி செய்ய முடியும்?"

இயக்க ஊழியர் "அவரைப் பண்ணையில் வேலை செய்யச் செய்து, உங்களில் ஒருவர் வெளியில் கிணற்று வேலை செய்து அதைக்கொண்டு பண்ணை மூலம் உதவி செய்யக் கூடாதா? உங்கள் பண்ணையில் நிலமில்லாத அவரும் சமத்துவ உரிமையுள்ளவராக வேண்டுமல்லவா?"

பரமசிவம்: "ஆமாம்! நீங்கள் சொல்லுவது சரிதான். இப்படியே விட்டுக்கொண்டே போனால் இதற்கு முடிவு கிடையாது. எங்கள் பண்ணையில் இப்பொழுது தக்காளி போட்டிருக்கிறோம். அதில் வரும் லாபத்தை சோணைக்கும் சரியாகப் பகிர்ந்து கொடுக்கிறோம். அதை வைத்துக்கொண்டு அவர் கூலி வேலைக்குப் போகாமலிருந்தால் பிறகு எல்லாம் சரியாகிவிடும்."

தக்காளி விவசாயத்தில் தான் உழைப்புக் கொடுத்துப் பங்கு கொள்ளாவிட்டாலும், பரமசிவம் தமக்குச் சரி பங்கு கொடுக்க வந்தது சோணையின் மனதை உருக்கி விட்டது.

சோணை "நான் இனி வேலைக்குப் போனாலும் கூலியைக் கொண்டு வந்து பண்ணைப் பொதுவில் கொடுத்துவிடுகிறேன்!" என்றார்.

"பண்ணையைச் சேர்ந்தவர் யார் வெளி வேலைக்குப் போனாலும் கிடைக்கும் ஊதியத்தைப் பொதுப் பண்ணையில் கொடுத்து விடுவோம்!" என்றார் பரமசிவம். எல்லோரும் ஆமோதித்தார்கள்.

முன்பு நிலம் உடையவர்களாயிருந்தவர்கள், இல்லாதவர்கள் கிராமதான இயக்கத்தில் பொது உரிமையாளர்களாகி விட்டார்கள். இயக்க ஊழியர்களுக்கு இதைக்காட்டிலும் அற்புதக் காட்சி வேறென்ன வேண்டும்! இரண்டு பக்தர்கள் கட்டித் தழுவிக்கொண்டு ஆனந்த பாஷ்பம் புரியும் காட்சியாகவே இருந்தது இக் காட்சி!

# நமது நூல் நிலையம்

**தாழம்பூ: ஆசிரியர்: 'மகரம்'; வெளியீடு:** அல்லயன்ஸ் கம்பெனி த. பெ. நெ. 617, சென்னை 4; **விலை** ரூபா 1-50.

தமிழிலே கட்டுரைகளைப் படித்துச் சுவைக்கும் பழக்கம் இக்காலத்தில் அதிகரித்துவருகின்றது. கரடு முரடான நடையிலே எழுதினால்தான் கட்டுரைக்கு 'இலக்கிய மதிப்பு' ஏற்படும் என்ற எண்ணம் ஒரு காலத்தில் இருந்தது. இப்போது நிலைமை மாறி எளிய நடையிற் சுவையாக எழுத வேண்டுமென்ற ஆசை பண்டிதர்களையும் பட்டதாரிகளையும் பீடித்துவருகின்றது. வேதாந்த விஷயங்களைக் கூட சாதாரண சம்பவங்களை விளக்குவது போல் எழுதக்கூடிய சக்தி 'மகரம்' அவர்களுக்கு இருக்கும்போது, புளியம் பழத்தைப் பற்றியும் பலாப் பழத்தைப் பற்றியும் முத்துக்களைப பற்றியும் கட்டெறும்பைப் பற்றியும் அவர் எப்படி எல்லாம் எழுதுவார் என்பதை இக்கட்டுரைத் தொகுதியைப் படித்தால்தான் அறிய முடியும். 'பலாப்பழம்' என்ற கட்டுரையில் இலக்கியச்சுவை நனிசொட்டிக்கொண்டிருக்கிறது. 'தாழையின் பெருமை தாழையடி தாழையாகத் தழைத்து வரும்' எனக் கட்டுரையாளர் 'தாழம்பூ' என்ற கட்டுரையை எழுதி முடிக்கும்போது கட்டுரை முடிந்துவிட்டதே என்ற ஏக்கம் உண்டாகின்றது.

> மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

இக்கட்டுரைத் தொகுதியில் பதினெட்டுக் கட்டுரைகள் உள. இவற்றை 'மகரம்' புலமைமிக்க தமிழ்க் கையோடு, புதுமைமிக்க கைலாகவமும் சேர்த்து நகைச்சுவைச் சரட்டில் பின்னியுள்ளார் எனச் 'சுகி' கூறியிருப்பதை இக்கட்டுரைத் தொகுதியைப் படிப்பவர்கள் ஆட்சேபிக்கவே மாட்டார்கள்.

**இலங்கையின் இருமொழிகள் ஆசிரியர்:** இளங்கீரன், **வெளியீடு:** லக்ஷிமி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை 17, **விலை:** ரூபா 1-25.

ஒன்றரை நூற்றாண்டுகளாக ஒன்றோடொன்று குலவித் தேசியப் பாதையில் கைகோத்துச் சென்று கொண்டிருந்த தமிழர் சிங்களர் ஆகிய இரு இனத்தவர்க்கிடையில் 1956-ம் ஆண்டு மூண்ட கலவரச் சூழ்நிலையை வைத்துக்கொண்டு அதனை விமர்சனம் செய்யும் முறையில் அமைந்தது இந்நூல்.

"இந்நூலை வாசிக்கும் அன்பர்கள் இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இந்நூல் தினையளவேனும் பயனளிக்கிறது. என்று கருதுவார்களானால் அதுவே இந்நூலின் வெற்றியாகும்."

என்று ஆசிரியர் தமது குறிக்கோளில் கூறியிருக்கிறார். அவரது கூற்றுக்கு வழியாகப் பொதுவுடைமைச் சமுதாயமே சிறந்தது என்ற சாயல் படிந்திருப்பதைக் கவனிக்காமலிருக்க முடியாது,

மொழி பிறந்தகதை, மொழியின் முக்கியத்துவம், தமிழ் மொழி, சிங்கள மொழி, முதலான பல உபதலைப்புகளிற் பிரித்து விஷயத்தைத் தெளிவுபடுத்தியிருப்பது வரவேற்கத் தக்கது.

"ஆங்கிலம் வர்த்தகமொழி, பிரஞ்சு ராஜதந்திர மொழி, ஜேர்மன் தத்துவமொழி, தமிழ்மொழியோ அன்பு மொழி ......" முதலான சிறப்பு எடுத்துக்காட்டுக்கள் மிகவும் பயன் தரக்கூடியவையாக அமைந்துள்ளன. ஆனால் எடுத்துக் கொண்ட பொருளின் இழையோட்டம் ஆங்காங்கு சிறிது விடுபடுவதுடன், வசனக்கட்டு பிரசங்க ரீதியிலும் அமைந்திருக்கின்றது.

இருமொழிகளின் தலைப்பில் எழுந்த முதனூல்என்பதாலும், வகுப்பு வெறியற்ற சந்துஷ்டியான நிலையைச் சிருஷ்டிக்கத் தக்க போக்கில் அமைந்திருப்பதாலும் ஆரம்பத்திற் குறிப்பிட்டிருக்கும் ஆசிரியரின் அபிலாஷை நிறைவேறலாம்.

"ஒல்காப்புகழ் தொல்காப்பியம் என்றிருக்கவேண்டியது ஓங்காப்புகழ் தொல்காப்பியம் (பக்கம் 14) என்று இருக்கிற தவறு எவ்வாறேற்பட்டது என்று தெரியவில்லை.

"ஆங்கில வெள்ளத்துடன் புதையுண்டுவிட்டது" (பக்கம் 28) என ஓரிடத்திற் குறிப்பிட்டிருப்பது பொருந்தாத கருத்தாகும். மண்ணிற் புதையுண்டு போகலாம், வெள்ளத்துடன் அள்ளுண்டு போய்விட்டது என்று குறிப்பிடவேண்டும்.

(பக்கம் 4) தளை என்பது 'தழை' என்று இருப்பதுடன் பல எழுத்துப்பிழைகளையும் கொண்டதாக இந்நூல் அமைந்திருக்கிறது. அடுத்த பதிப்பில் இப்படியான தவறுகளைத் திருத்தல் அவசியம்.

**வீரத்தாய்:** (கதைப்பாடல்) **ஆசிரியர்:** சொக்கன். **வெளியீடு:** கலாபவனம், பருத்தித்துறை. **விலை:** சதம் 60.

"தேனுயர் மொழியாற் பாடல்
செய்தனன் இளங்கோ,
பின்னர்
வானுயர் புகழைப் பெற்றான்
வளமுறு கவியாற் கம்பன்
கூனியோர் நிமரப் பாடல்
பாரதி தந்தான். வீணில்
யானுமின் றென்று செய்தேன்
யாவரே நகையார் என்னை."

என்று ஆசிரியர் அவையடக்கமாகச் சொல்லி இக்காவியத்தைப் புனைந்திருக்கிறார்.

சந்த ஓசைகளையும், கற்பனை நயத்தையும் கொண்ட **வீரத்தாய்** பழந்தமிழ் மக்களின் வீரத்திண்மையை விளக்குவதாகும்.

போரில் கணவனை இழந்த பின், உறுதுணையாக இருக்க வேண்டிய மைந்தனையும் களத்துக்கனுப்பி அவனது மாசற்ற வீரத்தைக் கண்டு மகிழ்கிறாள் ஒரு தாய். சங்க இலக்கியக் காட்சிகளில் ஒன்றான இக்கரு தமிழ் வாசகர்களுக்குப் புதுமையானதல்ல. ஆனால் அந்தக் கருவை வைத்துக் கொண்டு காவியமாக வளர்த்திருப்பது வரவேற்கத் தக்கது.

பழகிப்போன கதையாகையால் அடுத்து வரும் நிகழ்ச்சிகளை அறியும் துடிப்பு இல்லாது போய்விடுகிறது. கவிதைகள் ஒரே சந்தத்தை மட்டும் கொள்ளாது நிகழ்ச்சிகளுக்கேற்ப உணர்ச்சியைகொடுக்கக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

கருத்தரங்கம்

# ஏமாற்றுக்காரர் யார்?
## நம்மவர்களா? அன்னியர்களா?

எஸ். பெரியதம்பி
( காரியதரிசி - சுழிபுரம் சமசமாஜ வாலிப முன்னணி )

ஈழநாடு 18-4-59 இதழில் அன்பர் ஒருவர் "போலிக் கட்சியைநம்பி மோசம்போகாதீர்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையிலுள்ள வீண் புகார்களுக்கு விளக்கங் கொடுக்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது.

### மலைநாட்டில் சமசமாஜிகள்

மலைநாட்டுத் தமிழ் மக்களுக்காகக் கடந்த 25 ஆண்டுகளாய் சமசமாஜக் கட்சி போராடி வந்ததற்கு ஆதாரம் கேட்கும் அன்பரை முதலில் மலைநாட்டுத் தொழிலாளர்களது கடந்த காலப் போராட்ட வரலாற்றைச் சற்றுப் புரட்டிப் பார்க்குமாறு வேண்டுகின்றேன். முதன் முதலில் தோட்டத் தொழிலாளர் மத்தியில் அரசியல் என்றால் என்ன? என்பதைக் கற்பித்ததுடன், அவர்களது உரிமைப் போராட்டத்திற்குத் தொழிற் சங்க இயக்கம் இன்றியமையாதது என்ற அடிப்படையில் அதனை நிறுவிய பெருமையும் இலங்கை சமசமாஜக் கட்சிக்கே உரியது. 1939-ம் ஆண்டில் ( காங்கிரஸ் சங்கமில்லாத காலம் ) தோட்டப் பகுதிகளில், குறிப்பாக முல்லோயாவில் தோட்டத் தொழிலாளர்களது உரிமைகளை அடிப்படையாக வைத்து நடாத்திய போராட்டத்தில் தொழிலாளர் தோழர் கோவிந்தனைப் பறி கொடுத்ததுடன் கட்சித் தலைவர்கள் பல கஷ்ட நஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது. இவ்வேளையில் அன்பரின் மதிப்புக்குரிய காங்கிரஸ் ஸ்தாபனம் எங்கே?

### தடுப்புக் காவலில்

தோட்டப் பகுதிகளில் சமசமாஜக் கட்சியினரின் அயராத உழைப்பு, தோட்டப் பகுதியிற் சுரண்டி வாழ்ந்தவர்களைத் திணற வைத்தது. தொழிலாளர்கள் ஒன்று பட்ட சக்தியாக மாறுவதைக் கண்ட முதலாளிமார் முதலாளித்துவ அரசாங்கத்தின் ஆதரவைநாடியதன் விளைவாகச் சமசமாஜக் கட்சி சட்ட விரோதமாக்கப் பட்டது. கட்சித் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டார்கள். தொழிற் சங்கத்தை உடைத்தெறியும் பணியில் அரசாங்கம் தீவிர பங்கெடுத்துக்கொண்டது. இருந்தும் தோட்டப் பகுதியில் தொழிற் சங்க இயக்கம் மறை முகமாக இயங்கிக் கொண்டுதானிருந்தது. இச் சூழ் நிலையிலேதான் அன்பரின் அபிமானத்தைப் பெற்ற காங்கிரஸ் ஸ்தாபனம் உதயமானது. எதிர்ப்பற்ற சமயத்தில் வலுப் பெற்றுப்பலம் பொருந்திய ஸ்தாபனமாக மாறியது காங்கிரஸ் கட்சி. சமசமாஜக் கட்சியினரைத் தடுப்புக் காவலில் வைத்திராவிட்டால் இன்று மலை நாட்டுப் பகுதியில் மிகப் பலம் பொருந்திய தொழிற் சங்கமாக "லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன்" இருக்குமென்பதை அன்பர் அறிவாரா? ஆரம்ப காலத் தொழிற் சங்க இயக்கத்தை இன்று சிலர் அறியாமையினால் — ஆராய்ச்சியின்மையால் காளான்போன்ற சங்கமென்றும், சில நாட்களுக்கு முன் தோட்டப்பகுதியில் அடியெடுத்து வைத்த சங்கமென்றும் கூறுவதில் என்ன அர்த்தமிருக்கிறது?

### பிரஜாவுரிமைச் சட்டம்

சென்ற 1948-ம் ஆண்டு மலைநாட்டு மக்களின் ஜீவாதாரவுரிமையாகிய பிரஜாவுரிமையைப் பறித்தெடுக்கும் கொடிய சட்டம் பாராளுமன்றத்திற்கு வந்தபொழுது அச்சட்டத்தை நிதானமாக நின்று, பலமாக எதிர்த்த ஒரேயொரு அரசியல் கட்சி இலங்கை சமசமாஜக் கட்சியேயாகும். சமசமாஜிகள் எதிர்க்க, தமிழ் மக்களின் மதிப்புக்குரிய பிரதிநிதிகள் சிலர் ஆதரவு கொடுத்துதவினார்கள். எதற்காக அவர்கள் அதனை எதிர்க்கவில்லை? இன்றுவரை சமசமாஜிகள் அச்சட்டத்தை எதிர்த்து வருகின்றார்கள்.

### மொழிச் சமத்துவம்

சமசமாஜக் கட்சியின் கொள்கைத் திட்டத்தில் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து என்பது ஓர் அம்சமாகும். சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர், தமிழ் மக்களது கட்சிகளின் மொழிப் போராட்டத்திற்கு முன்னரே சமசமாஜக் கட்சி இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து கோரிப் போராட்டத்தை ஆரம்பித்தது. உதாரணமாக: கொழும்பு நகர மண்டபத்தில் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து கோரி நடாத்திய கூட்டத்தில் சிங்களச் சகோதரர்கள் எதிர் பாராத பல கஷ்டங்களுக்குள்ளாகியது மட்டுமல்ல, சிங்களத் தொழிலாளத் தோழர் ஒருவர் கையுமிழந்தார். இன்னொருவர் கண் பார்வையிழந்தார். வேறுபலர் காடையர்களின் கல்லெறிகளுக்கும், கை வரிசைக்கும் இலக்கானார்கள். இருந்தும் இன்றுவரை சிங்கள மக்கள் மத்தியில் மொழிச் சமத்துவத்தினை விளக்கிக் கூறுவதுடன், அவர்களது ஆதரவையும் நாளடைவில் பெற்றுவருகின்றனர்.

### ஹர்த்தாலில் காங்கிரஸ்காரர்

தோட்டத் தொழிலாளருக்கென உண்மையாகப் போராடி வருவது காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் என்று கூறுகிறார் அன்பர். இக்கூற்றின் உண்மையைச் சற்று ஆராய்வோம்: இந் நாட்டிலுள்ள ஏழைப் பொது மக்கள் குறிப்பாகத் தொழிலாளர்கள், விவசாயிகள் எனப்படுவோர் அரிசி விலையை அரசினர் உயர்த்தியதை ஆட்சேபித்து நடாத்திய ஹர்த்தாலில் பெரும்பான்மையான ஏழைத் தொழிலாளர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சி ஏன் கலந்து கொள்ளவில்லை? இது வரை காலமாகக் காங்கிரஸ்காரர்கள் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்காக ஒரு உருப்படியான போராட்டத்தை நடாத்த முன் வராததன் மர்மமென்ன?

### அடையாள வேலை நிறுத்தத்தில் காங்கிரஸ்காரர்

கால கதியில் உண்மை நிலையையுணரத் தொடங்கிய காங்கிரஸ்காரர், இந்நாட்டில் திடமான சோஷலிஸ கொள்கையைக் கொண்ட சமசமாஜக் கட்சியினருடன் ஒன்றுசேர்ந்து போராடினால்தான் தோட்டத் தொழிலாளர்களது பிரச்சினைகளைத் தீர்க்கலாமென்ற நம்பிக்கையின்மீது போராட முன் வந்துள்ளார்கள். உதாரணமாக: சென்ற மார்ச் மூன்றாந் திகதி நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தத்தில் என்றுமே இந் நாட்டில் தொழிலாளர்களுடன் சேர்ந்து போராடாத காங்கிரஸ்காரர் கலந்துகொண்டது வரவேற்கத்தக்கதாகும். இதனைக் கண்ணுற்ற தோட்டத்தொழிலாளர்கள் காங்கிரஸ் சங்கங்களை விட்டு சமசமாஜக் கட்சியின், ஆதிக்கத்திலுள்ள "லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனு"க்கு நூற்றுக் கணக்காக நாளாந்தம் வந்து கொண்டார்கள்.

### மலைநாட்டுத் தமிழ் மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சி

அன்பரின் கட்டுரையில் தமிழ் அரசுக் கட்சி தான் தமிழினத்தின் விடுதலைக்காக உழைக்கின்றதெனக் குறிப்பிட்டிருந்தார். இக்கூற்றின் அடிப்படையில் அன்பரை ஒரு சில கேள்விகள் கேட்க விரும்புகின்றேன். தமிழினத்தின் விடுதலைக்காக உழைக்கும் தமிழ் அரசுக் கட்சி ஏன், எதற்காக மலைநாட்டுத் தமிழ் மக்கள் மத்தியில் கட்சிப் பிரசாரத்தை நடாத்தவோ, அல்லது கட்சிக் கிளையை ஸ்தாபிக்கவோ முன் வரவில்லை? மலை நாட்டிலுள்ளவர்கள் தமிழர்களா அல்லது வேறு இனத்தைச் சேர்ந்தவர்களா? கொள்கையளவில்வைத்துக் கோரிக்கையாகக் குரலெழுப்பிப் போராடினால் மலைநாட்டுத் தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்க்கப்படுமா? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

### யார் மோசடிகாரர்?

தேர்தல் காலத்தில் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுவோமென்று கூறித் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுப் பிரதிநிதியான பிறகு ஜனநாயக மற்ற அநீதியான அரசாங்கத்துடன் சேர்ந்து, கரன்சி நோட்டுக்களிலும், நீதிமன்றங்களிலும் தனிச் சிங்களம் மாத்திரம் தான் இருக்கவேண்டுமென ஆலோசனை கூறுபவர்கள் யார்!

தமிழினத்தின் ஒற்றுமைக்காகப் போராடுகிறோமென்று ஓலமிட்டுக் கொண்டு கண்மூடித்தனமாகக் காலத்தைக் கழிக்கும் கட்சிக்காரர்கள் யார்? தமிழினத்தைச் சேர்ந்த தன்மானப் புருஷர்களல்லவா? எதற்காக இவர்கள் தொழிலாளர்களின் பகைவர்களாகக் காட்சி அளிக்கின்றார்கள். "தன் கையே தனக்குதவி" என்பதன் பொருள் தற்போது என்ன நிலையில் பிரதிபலிக்கிறது அன்பரே?

மேற் கூறிய கருத்துரைகளின் மீது மேலும் சிந்தனையைச் செலுத்தினால் யார் மோசடிகாரர்கள்? நம்மவர்களா? அன்னியர்களா? என்பது நன்கு புலனாகும்.

---

## உலகத் தொழிலாளருக்கு வெற்றி தந்த
# மகத்தான மே தினம்

மே மாதம் முதலாம் திகதி மேதினி எங்கும் தொழிலாளரின் தினமாகக் கொண்டாடப் பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு எட்டு மணித்தியால வேலையே மனிதனாற் செய்ய முடியும் என்ற உண்மை வெற்றி கொண்ட நாள் தான் மே மாதம் முதல் திகதி. அந்த உண்மையை, உரிமையை இன்று உலகெங்கும் பறைசாற்றிவரும் தினம் மே தினமாகும்.

மே தினம் பிறந்தது மனிதனின்—தொழிலாளியின்—மாண்புமிக்க தியாகத்தினால். அமெரிக்க நாட்டிலுள்ள சிக்காக்கோ நகரில் சிந்தப்பட்ட தொழிலாளர்களின் செங்குருதியிலே மிதந்துவந்த செல்வம், எட்டு மணித்தியால வேலை. இன்று எட்டு மணித்தியால வேலைதான் உலகெங்கும் நிலவி வரும் தொழில் முறையாகும். சகல நாடுகளின் ஆட்சியாளரும் இந்த அடிப்படையான உரிமையை அங்கீகரித்து, அதன்படியே தங்கள் அரசியற், தொழிற்கருமங்களை நடாத்துகின்றனர். இது தொழிலாளியின் மாபெரும் வெற்றியாகும்.

பத்து, பன்னிரண்டு, பதினைந்து மணித்தியாலங்களோ அல்லது அவற்றினும் கூடவோ தொழிற்சாலைகளில் வேலை செய்து, பல இன்னல்களுக்குள்ளானதொழிலாளர்களுக்கு மே தினம் உள்ளத்தில் மகிழ்ச்சியும், உடம்பிலே உறுதியும் அளிக்கவல்லது. அவர்கள் பட்ட துயரம் நீக்கி அவர்கள் வாழ்வுக்குப் புத்துணர்ச்சியும் புதிய நம்பிக்கையும் அளித்து, அவர்கள் இதயங்களை மலர வைத்த தினம் மே தினம். குறைந்த நேரத்தில் நிறைந்த வேலைசெய்து, தம் உள்ளங்களையும், உடல்களையும் உறுதியாக்கி, எதிர்காலத்தை உற்சாகத்துடன் நோக்கத் தொழிலாளருக்குச் சந்தர்ப்பமளித்த பெருமையும் மே தினத்தையே சாரும்.

மே தினம் உலகமெங்கும் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுவது என்னவோ உண்மைதான். ஆனால், மே தினம் உலகுக்கு அளித்த எட்டு மணித்தியால வேலை நேரம் என்ற கோஷம் உலகெங்கும் வெற்றி பெற்றுள்ளதா? எட்டு மணித்தியால வேலைதான், உலகிலுள்ள நாடுகள் எல்லாவற்றிலும் நடைமுறையிற் கையாளப்படுகின்றதா? இந்தக் கேள்விக்கு 'இல்லை'யென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

பல நாடுகளிலுமுள்ள தொழிலாளர்கள் எட்டு மணித்தியாலங்களிலும் மேலதிகமாகப் பல மணித்தியாலங்கள் வேலை செய்கின்றனர். சட்டப்படி எட்டு மணித்தியால வேலை; ஆனால் முதலாளிகளின் இஷ்டப்படி அவர்கள் இட்ட நேரமெல்லாம் வேலை. தொழிலாளியும் ஒரு மனிதன், அவனுக்கும் மனிதனுக்குள்ள விருப்பு வெறுப்புகள், ஆசைகள் இருக்கும் என்பதை முதலாளிகள் சில சமயம் மறந்துவிடுகின்றனர்.

மே தினம் எந்த உரிமையின் வெற்றிச் சின்னமாக விளங்கி நிற்கின்றதோ, அந்த உரிமை உலகெங்கும் உண்மையிலேயே வெற்றிபெற மக்கள் அனைவரும் உழைக்கவேண்டும். எட்டு மணித்தியால நேர வேலை சட்டத்தின் வரம்பிற்குள் மாத்திரம் கட்டுப்பட்டு நின்றுவிடாமல், வாழ்க்கையிலே, நடைமுறையிலே செயலாற்றும் வண்ணம் முயலவேண்டும்.

கடைசியாக, மே தினம் தொழிலாளர்களுக்கு வெற்றி தந்த தினம் என்று கூறும் பொழுது, அது மனித குலத்திற்கே வெற்றிதந்ததாக அல்லவா விளங்கவேண்டும்? ஏனெனில், தொழில் செய்பவன் தானே 'மனிதன்' என்ற புனிதமான பெயருக்கு உரியவனாவான்!

—மனிதன்

---

## திருமண அழைப்பு

**தேவன் — மணி**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் **இளையப்பா மகாதேவா** (தேவன் - யாழ்ப்பாணம்) அவர்களுக்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை **பரமேஸ்வரி ராஜா** ( மணி ) அவர்களுக்கும் சுன்னுகம், ஊரெழு கிழக்கிலுள்ள "ராஜஸ் தான்" என்னும் இல்லத்தில் வருகிற சனிக்கிழமை ( 9-5-59 ) இரவு 11 மணிக்கு திருமணம் நடைபெறும். உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமதி இளையப்பா கேதீஸ்வரநாதன்** (பரமேஸ்வரா) **தர்மலிங்கம்** (யாழ்ப்பாண நீர்ப்பாசன இலாகா), **கமலா ஆறுமுகம் தம்பி** (வைத்தீஸ்வர வித்தியாலயம்), **லோகா கனகேஸ்** (களத்துவாவா) — "ராஜேஸ்வரி பவனம்" பரமேஸ்வரக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு சித்திரை மீ 19 உ (2-5-59)

# தொழிலாளரின் உரிமை நாள்

நேற்று மே மாதம் முதல் திகதி உலகத் தொழிலாளரின் உரிமை நாள், இலங்கையிலும் அரசாங்க விடுமுறையாகி, பல தொழிலாளராலும் கொண்டாடப்பெற்றது. மனித தர்மமும் ஜனநாயகமும் வறபுறுத்தப்படும் இக் காலத்தில் தொழிலாளரின் நிலே வரவர முன்னேறி அவர்கள் எல்லா உரிமைகளேயும் பெறுவரென்பதில் ஐயமில்லை.

தங்களது உரிமைகளுக்காகப் போராடும் தொழிலாளர் இரு முக்கிய விஷயங்களே மறக்க முடியாது. ஒன்று ஒற்றுமை, மற்றொன்று தங்கள் பொறுப்புகளேயும், கடமைகளேயும் உணர்ந்து அவற்றைச் சரிவர நிறைவேற்றல்.

இன்று தொழிலாளரிடை ஒற்றுமை இன்றி, அவர்கள் பல பல போட்டிச் சங்கங்களாகப் பிளவுபட்டு, அடிக்கடி மோதிக் கொள்வதையும் பார்க்கின்ருேம். சில சுயநலமிகள், தொழிலாளரைத் தங்கள் நன்மைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் பயன்படுத்திக்கொள்ளுகின்ருர்கள். அவர்களிடையே வகுப்புத் துவேஷத்தைப் புகுத்தியும், அவர்களேச் சுரண்டியும் வாழ்கின்றனர். இதனுல் தொழிலாளருக்கு மட்டுமன்றிப் பொதுமக்களுக்கும் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள்.

தொழிலாளர்சமூகம் விழித்துக்கொண்டு வருவதால், இந்த விஷமங்கள் அதிகநாள் நீடிக்க முடியாது. தொழிலாளருக்கு ஒற்றுமையே உயிர்போன்றது. ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வென்றும் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வென்றும் கூறும் அமரகவி பாரதியாரின் வாக்கைத் தொழிலாளர் மனதிலிருத்தி, தங்களிடையே உள்ள பிளவுகளேயும் வேற்றுமைகளேயும் நீக்கி ஒற்றுமையைப் பலப்படுத்த முயல வேண்டும். காரியத்தில் இது கஷ்டமாக இருக்கலாம். சில சுயநலமிகள், தொழிலாளரிடையே ஒற்றுமை ஏற்படமுடியாமல் பெரிய முட்டுக்கட்டைகளேயும் போட்டுவரலாம். இவற்றை உணர்ந்து அற்ப வேற்றுமைகளே ஒதுக்கி, ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் தொழிலாளர் எவ்வளவுதூரம் பலப்படுத்திக்கொள்ள முடிகிறதோ, அவ்வளவும் அவர்களுக்கு வெற்றியாகும்.

நாம் உரிமைகளேப்பற்றி வற்புறுத்திக்கொண்டே இருக்கக்கூடாதென்றும், கடமைகளேயும், பொறுப்புகளேயும் சரிவர நிறைவேற்றினுல், உரிமைகள் தாமாகக் கிடைக்குமென்றும் கூறினுர் காந்திஅடிகள். தொழிலாளரின் உழைப்பு நாட்டின் முக்கிய செல்வமாகும். கூலிக்கு மாரடிப்பவர்கள்போல் தங்களேக் கருதிக் கொள்ளக்கூடாது. ஒவ்வொருவரும் என்ன தொழில் செய்தாலும் அது தங்கள் நாட்டுக்கு, அதாவது பொதுமக்களுக்குச் செய்யும் சேவையாகும் என்ற உணர்ச்சியுடன் தொண்டாற்ற வேண்டும்.

சமீபவருடங்களில் வேலை நிறுத்தங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இதனுல் மக்களுக்கு வசதியீனங்கள் அதிகரிக்கவும் வாழ்க்கைச்செலவுகள் உயரவும் செய்கின்றன. நியாயமான உரிமைகளேப் பெறவும் இப்போதுள்ள பொருளாதார அமைப்பை மாற்றவும் வேலே நிறுத்தம் அவசியமாக இருக்கக்கூடும். என்ருலும் அந்த "பிரம மாஸ்திரம்" இருபக்கம் கூருள்ள கத்தி. அது தொழிலாளரையும் பாதிப்பதாகும். பொறுப்பற்ற சில சுயநலமிகள் அவர்களே வேலேநிறுத்தத்துக்குத் தூண்டலாம்.

உணர்ச்சிவசப்படாமலும் மக்களின் அபிமானத்தை இழக்காதமுறையிலும், அந்த ஆயுதத்தைக் கடைசி ஆயுதமாகவே தொழிலாளர் அபூர்வமாகக் கையாளவேண்டும். அப்படிப் பொறுப்புடன் அவர்கள் கடமையாற்றினுல், பொதுமக்களின் அபிமானத்துடனே எல்லா உரிமைகளேயும் வெற்றிகரமாகப் பெறமுடியும். நாடும் அகிம்ஸாமுறையிலே சமதர்ம லட்சியத்தைச் சீக்கிரத்தில் அடைய முடியும்.

## திரு. டட்லியின் பேச்சு

மாத்தறையிலே நடைபெற்ற யு. என். பி. மகாநாட்டுக்குத் தலைமைவகித்து திரு. டட்லி சேனநாயக்காசெய்தபிரசங்கம், நமது இன்றைய அரசியற் சங்கடங்களேத் தீர்க்க எவ்வகையிலும் உதவுவதாக இல்லை. எம். ஈ. பி. அரசாங்கத்தின் போக்கை அவர் பலமாகக் கண்டித்துள்ளார். இதில் வியப்பில்லை. ஆனுலும் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தவும், நாடு அமைதியாக முன்னேறவும் உருப்படியான யோசனே எதுவும் கூருததால் அவரது பிரசங்கத்தைப் பயனற்ற பேச்சென்றே கருதவேண்டியுள்ளது.

அரசியல் அமைப்பை இப்பொழுது திருத்தக்கூடாது என்கிருர் திரு.டட்லி. பொதுத் தேர்தல் நடத்தியே இதைப் பற்றிய எவ்வித தீர்மானமும் செய்யவேண்டும் என்கிருர். ஆனுல் இன்றுள்ள ஸோல்பரி அரசியல் திட்டம் எப்படித் தயாரிக்கப்பட்டது? அரசியல் நிர்ணய சபையைக்கூட்டி, மக்களாற் தயாரிக்கப்பட்டதா? அல்ல. பழைய உளுத்துப் போன அரசாங்க சபையிலே தங்களுக்கிருந்த மேலதிகமான வாக்குப் பலத்தைக்கொண்டு, பெரிய சேனநாயக்காவின் கோஷ்டியினர் தயாரித்தனர். அடிப்படை உரிமைகள் அதிற் சேர்க்கப்படவில்லை. சிங்களமும் தமிழும் தேசிய மொழிகள் என்று அங்கீகரிக்கப்பட்டு, அவ்விரண்டையும் அரசாங்க மொழிகளாக நடைமுறைக்குக் கொண்டுவந்தும், யு. என். பி. (சேர் ஜோனின் தலைமையில்) அதைக் களனி மகாநாட்டில் சற்றும் கூச்சமின்றித் திடீரென மாற்றி, சிறுபான்மைச் சமூகங்களின் காலே வாரிவிட்டது. இதனுல் அக்கட்சியிலிருந்த சிறுபான்மைச் சமூகத்தினர் பெரும் ஏமாற்றமடைந்து, அதிலிருந்து விலகினர். தேர்தலில் தோற்று, திரு. டட்லி தலைமைப் பதவிக்கு வந்தபின்பாவது, அக்கட்சியினர், தங்கள் தவறை உணர்ந்து, சிறுபான்மை மக்களுக்குச் செய்த பெரிய அநீதியை நீக்கி, உண்மை ஜனநாயகத்தை நிலேநாட்ட முயற்சி நடைபெறுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனுல் இது ஏமாற்றத்தில் முடிந்தது. திரு. டட்லி சேனநாயக்கா தமது பிரசங்கத்தில் தமிழருக்கு ஆறுதலும் நம்பிக்கையும் அளிக்கக்கூடிய ஒரு வார்த்தையும் கூறவில்லை.

இதற்கு மாருக "பிரதேச சபை"கள் மூலம் தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய ஓரளவு சுயாட்சி உரிமைகளும் கூடாதென்கிருர். அந்த ஏற்பாடு வகுப்புவாத முறையில் நாட்டைப் பிளவுபடுத்துவதாகும் என்று கூறுகிருர். தமிழ் மக்கள் வகுப்புவாதிகளல்ல. நாட்டைப் பிரிக்கவேண்டுமென்றும் கேட்கவில்லை. ஆனுல் தங்களது மொழி முதலிய அடிப்படை உரிமைகளேக் காத்துக் கொண்டு, இந்நாட்டில் மற்றவர்களேப்போல் சரிநிகர் சமானமாக வாழவே விரும்புகிருர்கள். தமிழரின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் பெற வேண்டுமென்ற எண்ணம் திரு. டட்லிக்கு இருக்குமாயின், அவர் அவர்கள்பால் அதிக தாராள மனப்பான்மை காட்ட வேண்டும். ஆனுல் 'பிரதேச சபை' மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் ஓரளவு சுயாட்சியையும்கூட அவர் எதிர்ப்பதைப் பார்க்கையில், அவர் தமிழரின் அபிமானத்தைப் பெறக் கவலே கொண்டவராகத் தோன்றவில்லை. இந்தியாவிலே மாகாண சுயாட்சியுடன் சமஷ்டி ஆட்சி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

பழைய 'கமிட்டி' ஆட்சிமுறையில் கைலஞ்சம் முதலிய ஊழல்கள் அதிகமென்றும், ஆகவே அது கூடாதென்றும் 'காபினட்' (மந்திரிசபை) ஆட்சியே நீடிக்கவேண்டுமென்றும் கூறுகிருர். 'கமிட்டி' ஆட்சிமுறையிற் பல குறைகளுண்டு. என்ருலும் அதிற் சிறுபான்மை மக்களுக்குச் சிறிதாவது பங்கு இருந்தது. ஆனுல் சிறுபான்மை மக்களே அடியோடு ஒதுக்கி 'காபினட்' (மந்திரிசபை)யை வகுப்புவாத முறையில் இலங்கையில் அமைக்கப்படுவதைப் பார்க்கிருேம். இது ஜனநாயகமாகுமா? சிறப்பாகத் தமிழர் இம்முறையை எப்படி ஆதரிக்க முடியும்.

நாட்டில் இன்று அரசியல் அமைதியில்லாமல், முன்னேற்றமும் தடைபட்டிருப்பதற்குக் காரணம், சமூக ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இல்லாததே. இதைப் பெறக்கூடிய விதத்தில் அரசியலே எப்படி வகுப்பது? இவ்விஷயத்தில் திரு. டட்லி சேனநாயக்கா அரசியல் ஞானியாக விளங்கி குறிப்பாகத் தமிழரின் நம்பிக்கையையும் பெறுவாராயின் இங்கு ஜனநாயகம் வெற்றியுடன் நடக்க உதவுபவராவார். இன்றேல் இங்கு ஜனநாயகமென்பது நடைபெற முடியாமல் நாட்டில் அமைதி குலேந்து பாகிஸ்தானேப்போல் இராணுவ சர்வாதிகார ஆட்சியே ஏற்படுவதாக இருக்கும்.

## நாடற்றவருக்குப் பிரதிநிதித்துவம்

இலங்கையிலே ஜனநாயகம் உண்மையானதா? அல்லவா? என்பதற்கு ஒரு சரியான அத்தாட்சி, இந்திய வம்சாவளியினருக்குப் புதிய பார்லிமென்ட்டில் அளிக்கும் பிரதிநிதித்துவத்தையே பொறுத்திருக்கும்.

இங்குள்ள பத்து லட்சம் இந்திய வம்சாவளியினருக்கும் இப்போதுள்ள பார்லிமென்டில் ஒரு ஸ்தானமும் கிடையாது. மலேநாட்டிலே அவர்களில் பெரும்பாலோரும் ஒரே அடியில் நாடற்றவர்களாக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே அவர்களில் எட்டுப்பேர்கள் அச்சபையில் இருந்து அச்சமூகத்தின் நல உரிமைகளேப்பற்றிக் கவனித்துவந்தனர். ஆனுல் இன்று அச்சபையில் அத்துரதிருஷ்ட மக்களின் விஷயங்களேக் கவனிக்க ஒருவர்கூட இல்லை. இதே நிலே நீடிக்குமாயின் அது ஜனநாயகத்துக்கு மாருவதுடன், சம்பந்தப்பட்ட மக்களின் நிலே மிகவும் மோசமாகித் தோட்டங்களில் தொழில் அமைதியில்லாமல் இந்நாட்டின் பொருளாதாரமும் சீர்குலேயும். ஜனநாயக தர்மத்தையும், மனித தர்மத்தையும் ஆதரிப்பவர்கள் இதை மறுக்கமுடியாது.

இனி அம்மக்களுக்கு 150 பேரடங்கிய புதிய பார்லிமென்டில் எவ்வளவு பிரதிநிதிகள் இருக்கவேண்டும் என்பது அடுத்த கேள்வி. இதுபற்றிக் கருத்துவேற்றுமைகள் இருக்கின்றன. ஆனுல் உண்மை ஜனநாயகப்படி, அவர்களுக்கு உடனடியாக வாக்குரிமை கிடையாவிட்டாலும், அவர்களது உழைப்பு இந்நாட்டுக்குப் பயன்படும்வரை, அவர்கள் இங்கு வசிக்கும்வரை, அவர்களது ஜனத்தொகை வீதாசாரத்துக்குத் தக்கபடி ஸ்தானங்களே ஒதுக்குவதே நியாயமாகும்.

இலங்கை ஜனநாயக காங்கிரஸ் சார்பாக, தொகுதி நிர்ணய விசாரணேச் சபைக்குச் சமர்ப்பித்துள்ள ஒரு மகஜரில் இந்திய வம்சாவளியினருக்கு 12 ஸ்தானங்கள் வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. ஜனத்தொகை வீதாசாரப்படி பார்த்தால் இது அதிகமல்ல; குறைவேயாகும். நூறு பேரடங்கிய சபையிலேயே இம்மக்களுக்குப் 14 ஸ்தானங்கள் இருக்கவேண்டும் என்று ஸோல்பரிப் பிரபு தமது அறிக்கையில் தெரிவித்திருந்தார். அப்படியாயின் 150 பேரடங்கிய சபையில் 21 ஸ்தானங்களாவது இருக்க வேண்டும், ஆனுல் இன்றைய அரசியல் சூழ்நிலேயில் இதை எதிர்பார்க்க முடியுமா?

டில்லியில் செய்துகொண்ட ஒப்பந்தப்படிகூட இந்திய வம்சாவளியினருக்கு இந்தப் பார்லிமென்டில் 6 ஸ்தானங்கள் அளிப்பதாக யு. என். பி. அரசாங்கம் ஒப்புக் கொண்டது, அந்த ஒப்பந்தத்தில் இப்போதுள்ள பிரதமர் பண்டாரநாயக்கா திரு. டட்லி சேனநாயக்கா இவர்களும் கையொப்பம் இட்டுள்ளனர். இலங்கை திரும்பியபின் 4 ஸ்தானங்கள் ஒதுக்குவதென்று ஒரு திருத்தச் சட்டம் நிறைவேற்றினர். ஆனுல் காரியத்தில் "ஏமிலேது" (ஒன்றும் இல்லை) இது பெரிய அரசியல் அநீதி என்பதையும் ஜனநாயகத்துக்கு மாருகுமென்பதையும் இங்குள்ள முக்கிய அரசியற் கட்சிகளும் உணரும்.

இந்த அநீதியை மாற்ற இப்போது நல்ல சந்தர்ப்பம். நூறு பேரடங்கிய சபையிலேயே 4 ஸ்தானங்கள் அளிக்க முன்வந்தவர்கள் 150 பேருள்ள சபையில் 6 ஸ்தானங்களாவது அளிக்கவேண்டும். இதற்கான முறையிலாவது தொகுதி நிர்ணய சபை ஸ்தானங்களே ஒதுக்க ஏற்பாடுசெய்யாத பட்சத்தில் இலங்கை, ஜனநாயகம் பற்றியும் மனித நீதி பற்றியும் பேசுவது அர்த்தமற்றதாகும். அரசியல் அனுதைகளுக்குத் தான் பாதுகாப்பும் பிரதிநிதித்துவமும் மற்றவர்களேவிட அதிகம் தேவை.

## பூவலம்

சூத்திரப்பாவை

பூகோளத்து முகட்டு உச்சியை முன்னர் ஒரு முறை ஓர் உச்ச நிலேயிலிருந்து பார்த்தோம். இப்போது அரசியல் தந்திரம் ததும்பும் சர்வதேச உச்சிமகாநாடு ஓர் புழுவின் கண்ணுக்கு என்ன தோற்றம் அளிக்கும் என்பதைச் சிந்திக்கலாம்.

இந்த அலங்கார உச்சிமகாநாட்டுத்தேர் கோயிலேச் சுற்றி இழுபட்டு இருப்பிடம் வந்து சேரமாட்டாதென்பது தான் புழுவின் நோக்கம். ஆயினும் இந்தத் தேர் இழுப்புக்கு முன்னதாக நடக்கவேண்டிய பல திருவிழாக்கள், சிறப்பாக நடந்து வருகின்றன. இரண்டு வருடங்களாகக் கடிதப் போக்கு வரத்துக்கள் நடந்தன. அதில் ஒரு வகையாகத் தேரை இழுக்க வேண்டியது நன்று என்னும் கொள்கையில் மன ஒற்றுமை கண்டு விட்டார்களாம். சபாஷ்! நாம் பேசுவது கிழக்கு—மேற்கு என்னும் ருஷிய—அமெரிக்க பிரச்சினேயில் இரு சாராருடைய உத்தியோகத்தர்கள் கண்ட முடிவைப் பற்றியே. இந்த முடிபும் முதலேயின் வயிற்றிலிருந்து கூனி இருல் பிறந்தது போலாகும். எனவே, இதில் நன்மை ஒன்றுமில்லை என்பதல்ல; அது இப்போது இருக்கும் மனக்கசப்பு நிலேயிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் வராமல் காப்பாற்றி விட்டது, அடுத்தபடி வெளிநாட்டு விவகார அமைச்சர்கள் சந்தித்து உரையாடும் முறை. இதை யொட்டி பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன் ருஷிய நாட்டைச் சுற்றிப் பார்த்து அந்நாட்டுப் பிரமுகர்களுடன் அளவளாவிப் பின் பாரிஸ் வாஷிங்டன் தலேநகர்களேயும் தரிசித்து வாஸ்து சாந்திக் கிரியைகள் முடித்து வைத்தார். இதைத் தொடர்ந்து மேற்கு நாடுகளின் வெளி நாட்டு விவகார அமைச்சர்கள் நிற்க வேண்டிய நிலே தெளிவாகி விட்டதென்பது வெளிப்படை.

இந்தப் பிரச்சினேயை அமெரிக்காவிலும் பார்க்கப் பிரிட்டன் சமரசக்கண் கொண்டு பார்க்கிறதை எல்லோரும் அறிவோம். அப்படியிருந்தும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் செல்வின் லொயிட் உலகெலாம் பரவும் 'ரீடேர்ஸ் டைஜெஸ்ற்' என்னும் மாதப் பத்திரிகையில் அண்மையில் எழுதியுள்ள கட்டுரை ருஷிய மனப்பான்மைக்கு உகந்ததாயிருக்க மாட்டாதெனத் தோன்றுகிறது. "ருஷிய நாட்டுடன் சமாதானமாக வாழும் முறை" என்னும் தலேயங்கத்தைக் கொண்ட அக் கட்டுரை சப்த வாக்கியங்களே அடக்கியுள்ளது, முதலில் மேல் நாடுகள் தங்கள் யுத்த பலத்தை அதிகரிக்கச் செய்யவேண்டியது. இரண்டாவது தமக்குள் ஒற்றுமையை நிலவச்செய்வது. மூன்ருவது, சமாதானத்திற்கு இடையூறு விளேவிக்கும் நடவடிக்கை ருஷியா ஏதும் செய்கிறதா வென்று கவனித்து வருவது, நாலாவது, பொதுவுடைமைக்கு ஏதுவாயுள்ள சூழ்நிலேகளாகிய பிற் போக்குகளே ஆபிரிக்கா ஆசியாக்கண்

[9-ம் பக்கம் பார்க்க]

# திரு. டட்லியின் வாதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரதமர் யோசனை

ஸ்விட்ஸர்லந்திலுள்ளது போல் நாட்டைக் 'காண்டன்'களாகப்பிரித்து, மண்டலசுயாட்சி அளிக்கலாமென்பது பிரதமர் வெளியிட்ட ஒரு யோசனை. இது மேற்குறித்த ஒப்பந்தத்திலேயுள்ள பிரதேசசபை யோசனையைவிட மோசமானதென்றும் டட்லி கண்டிக்கிருர்.

பிரதேச சபைகளில் சட்டசபைகளும் அமைக்கப்பட்டு பூரண சுயாட்சியும் அளிக்கப்படுமாயின் தமிழர் தங்கள் பகுதிகளிலாவது ஓரளவு நிம்மதியுடன் வாழ்ந்து அபிவிருத்தி அடைய இடமிருக்கும். இந்த யோசனையைத் திரு டட்லியே எதிர்க்கையில், மற்ற வகுப்புவாதிகளின் கருத்து எவ்விதமிருக்குமென்பதைக் கேட்கவேண்டியதில்லை. சுயாட்சி 'காண்டன்'களால் ஆகிய சமஷ்டி அரசியல் அமைப்பையும் திரு. டட்லி ஆட்சேபிப்பதுடன் இப்போதுள்ளது போலவே பெரும்பான்மையினரின் சமூக ஆட்சியே நடைபெறவேண்டுமென்று, இதை மாற்றவேண்டுமாயின், பொதுத் தேர்தல் நடத்திப் பொதுமக்களின் சம்மதம் பெற்றே செய்யவேண்டுமென்றும் கூறுகின்ருர்.

### 'காபினட்' ஆட்சி முறை

'காபினட்'மந்திரிசபை ஆட்சி முறையை மாற்றி முன்னர் இருந்ததுபோல் நிர்வாகக் 'கமிட்டி' ஆட்சி முறையை ஏற்படுத்தலாமென்று பிரதமர் பண்டாரநாயக்கா கூறினரல்லவா? மந்திரிசபை ஆட்சி முறையில் தவறு எதுவுமில்லை என்றும் 'ஆடத்தெரியாதவள் கூடம் கோணல்' என்று கூறுவது போலவே இது இருப்பதாயும், பல நாடுகளிலே 'காபினட்' ஆட்சி முறை வெற்றியுடன் நடந்துவருவதாகவும், எட்டு வருஷ காலம் இலங்கையிலும் தங்கள் கட்சி ஆட்சி நடத்தி வந்ததாயும் கூறுகின்ருர்.

தமிழ்மொழிக்குச் சம உரிமை அளித்துத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றதனல், யு. என். பி. ஆட்சி முறையை நடத்த முடிந்தது. ஆனல் திடீரென "சிங்களம் மட்டும்"என்று தீர்மானம் செய்து தமிழை யு. என்.பி. ஏன் ஒதுக்கியது? இது ஜனநாயகமா? மலை நாட்டிலே வாக்குரிமை பெற்றிருந்த தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமையை ஒரே அடியில் பறிப்பதுதான் ஜனநாயகமா? இதைத் தேர்தல்களில் யு.என்.பி.யை ஆதரிக்காமல் எதிர்க்கட்சிகளை இலங்கை இந்திய காங்கிரஸ் ஆதரித்ததால், பழி வாங்குவது போல் இந்தியரின் வாக்குரிமையும் பறிபோய் அவர்கள் அரசியல் அனதைகளாக்கப்பட்டனர். அச்சமூகத்துக்கு பார்லிமெண்டிலேயே பிரதிநிதித்துவம் இல்லாமலும் செய்யப்பட்டுவிட்டது. ஜனநாயகத்தின் பெயரால்'காபினட்' ஆட்சி முறையில் இவ்வளவும் நடந்துள்ளது. பெரும்பான்மை சமூகத்தினர் சிறுபான்மை சமூகங்கள் மீது நிரந்தரமாக ஆட்சி நடத்துவதே ஜனநாயகமாயின் அதைச் சிறுபான்மை சமூகங்கள் ஏற்று எவ்வளவு காலம் சகித்துக் கொண்டிருக்கும்?

### மன்னர் கோன் முறை

இலங்கை முதலிய ஆசிய நாடுகளில் மன்னர்களின் கோன் முறைதான் இருந்துவந்தது. மன்னர் எல்லாரையும் சமமாக மதித்து நடத்திவருபவர். பிரிட்டிஷார் இங்கு வந்ததும் தங்கள் நாட்டிலுள்ள ஜனநாயகத்தை இங்கு புகுத்தினர். இது நமக்குப் புதிது. இதனல் பல குறைபாடுகள் ஏற்படலாயின.

ஒரு கட்சி மற்ருேர் கட்சியை எப்போது எப்படி வீழ்த்தலாமென்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. பொது நன்மையை முன்னிட்டுச் சாதாரண ஒத்துழைப்புமில்லை. பிரதமரோ மற்ற மந்திரிகளோ தமிழ் மாகாணங்களுக்குச் செல்ல முடியாத அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

இது அரசியலின் தவறல்லவென்றும் ஆட்சி முறை நடத்த எம். ஈ பி. க்குத் திறமையில்லை என்றும் திரு. டட்லி கூறலாம். ஆனல் திரு. டட்லியே ஒரு நெருக்கடி ஏற்பட்ட போது பிரதம மந்திரி பதவியையும் விட்டுவிட்டுச் சென்ருர்.

இது எப்படியாயினும் நாட்டில் எல்லாரும் சரிநிகர் சமானமாக வாழக்கூடிய முறையில் எல்லா சமூகத்தாரும் சேர்ந்து தக்க அரசியலைத் தயாரிக்க வேண்டிய சமயம் வந்துவிட்டது. இதை உணர்ந்துதான் பார்லிமெண்ட் கூட்டுக்கமிட்டியும் அமைக்கப்பட்டுள்ளது. இரு பார்லிமெண்ட் சபைகளின் தீர்மானத்தின்மீதே இக்கமிட்டி நியமிக்கப்பட்டது. எதேச்சாதிகாரமாக அல்ல. அப்படியிருக்க திரு. டட்லி சேனநாயக்கா இப்போது, அரசியல் திருத்தங்களை எதிர்த்து முட்டுக்கட்டை போடுவானேன் ?

# பூவலம்

[8ஆம் பக்கத் தொடர்ச்சி]

டங்களிலிருந்து களைந்து அவர்களைத் தம் வசப்படுத்துவது. ஐந்தாவது, ஐக்கியநாடுகள்சங்கத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தும் வழிவகைகளை உருவாக்குவது. ஆருவது, மேல் நாடுகளின் பொருளாதாரத் தத்துவங்களை ஒரு வழிப்படுத்துவது. ஏழாவது, கம்யூனிஸ்ட் நாட்டிலுள்ள பொது மக்களுக்கும் முதலாளி நாடுகளிலுள்ள பொது மக்களுக்குமிடையில் ஐக்கியத்தையும் ஒத்துழைப்பையும் பெருக்குவது.

இவையெல்லாம் உயர் நோக்குடையதாய் இருப்பினும் ருஷியா இவை யுத்த ஆயத்தங்கள் என்றே யூகிக்கும். பிரதானமாக, ஏழாவது கொள்கை தமது நாட்டினுள் ஐந்தாம் படை உருவாகும் என்பதை விட வேறுயோசனை சொற்பமேனும் அவரின் மனதிற் படியாது. என்செய்வார் செல்வின் லொயிட்! இந்தக் கொள்கையைத் தானும் அமெரிக்கப்பிரமுகர் மக்காத்தி போன்றவர் ருஷியரைக் கட்டி அணைக்கும் சதி என்றே சொல்வர். வெளி நாட்டு விவகாரங்களில் சாமர்த்தியமுடைய பிரிட்டன் பொதுவாக விலாங்குபோல் பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டிச் சமரசங் காண்பதில் கெட்டி. ஆனல் இந்தப் பிரச்சினையில், அந்த அரிசி வேகாது.

இதைக் குறித்தோ ருஷியாவை உருவாக்கிய லெனின் பிதா 1929-ம் ஆண்டிலேயே தமது அடிப்படையில் முதலாளித்துவத்திற்கும் கம்யூனிஸத்துக்குமிடையில் ஒரு போதும் ஒற்றுமை வராது; இறுதியில் கம்யூனிசம் மற்றக் கொள்கைகள் எல்லாவற்றையும் கொள்ளை கொண்டு தீரவேண்டும் என்று எழுதிவைத்தார்? துப்பாக்கிப் பிரயோகம் வராமல் பார்க்கும் பிரித்தானிய தந்திரம் வாழ்க! ஏப்பிரல் மாதம் 30-ம் திகதி லண்டனில் நடைபெறும் உபகுழு வெளிவிவகார அமைச்சர் கூட்டத்திற்கு ஆயத்தம் செய்யுமாம். அதன் பின்னர் உச்சி மகாநாடு எப்போது நடைபெறுமோ? அந்தக் காலம் வரும்வரை யுத்தம் இல்லையாம். இனிப் புழுக்களுக்கு வேட்டைதானே.

# தஞ்சமளிக்கும் கேதீச்சரம்

நீங்கள் திருக்கேதீச்சரம் சென்று பார்த்தீர்களோ? என்று ஒரு கத்தோலிக்க நண்பரொருவர் இரண்டு மாதங்களுக்கு முன் கேட்டார்.

பார்த்துச் சில ஆண்டுகளாகின்றன; நீங்கள் இதைப்பற்றி கேட்பானேன்? என்றதும், அந்த நண்பர், "நான் மடு மாதா கோவிலுக்கு என்குழந்தையுடன் சென்றேன். அப்படியே பக்கத்தில் திருக்கேதீச்சரத்துக்கு போனேன். அழகான புதுக்கோவிலும் நகரமும் அங்கு வளர்ந்து வருவதைக் கண்டேன். நம்பவே முடியவில்லை. நீங்கள் அவசியம் அங்கு சென்று இப்போது பார்க்கவேண்டும்" என்ருர் நண்பர்.

ஒரு கத்தோலிக்கர் இப்படிக் கூறுவதைக் கேட்க வியப்பாக இருந்தது. இவ்வாரம் அங்கு செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. ஸ்டேஷனிலிருந்து திருக்கேதீச்சரத்துக்கு முன்னர் கப்பி மண் ரோடுதான். மேடு பள்ளம் அதிகம். அது இப்போது தார் ரோடாக மாறி எங்கள் மோட்டாரை சுகமாகக் கொண்டு சென்றது.

பாலாவியிலே சுத்தமான நீர் இடுப்பளவு பரந்து நிற்கிறது. "இந்தக் கோடையிலிலே வந்து குளியுங்கள். உஷ்ணமெல்லாம் தீர்ந்து உங்கள் உடலை சுகமாக்குகிறேன்" என்று அது அன்புடன் அழைக்கிறது!

* * *

மேலே சென்ருேம். கோவிலுக்கு முன்னே இருந்த பழைய கீத்துக் கொட்டிலைக் காணேம். ராஜகோபுர வாயிலும், மதிற் சுவர்களும் வானை நோக்கி எழுந்துள்ளன. மேற்குப் புறம் சில விமானங்கள் அரைகுறையாகவுள்ளன. விசாலமான வீதிகள். முன்னர் சுவாமியுடன் பிரதட்சணம் வருகையில் காலில் முள்ளுக் குத்தும்! இப்போது டிராக்டர்கள், காட்டையும் மேட்டையும் திருத்தி, விசாலமான வீதியை ஆக்கியுள்ளன!

முன்னர் 'முணுக் முணுக்' என்ற அரிக்கன் விளக்குத்தான். இப்போது எங்கும் மின்சார விளக்குகள், இருளை எல்லாம் நீக்கி, கோவிலையும் ஊரையும் அழகு செய்கின்றன.

யாழ்ப்பாணத்திலே பல வருஷகாலமாக முயன்றும், இன்னும் குழாய்த் தண்ணீர் கிடைக்கவில்லை. ஆனல் அந்தக் கேதீச்சரத்திலே குழாய்த் தண்ணீர், நமது தாகமெல்லாம் தீர்க்க இராப்பகலாகக் காத்துள்ளது. காடாக இருந்த இடத்தில் பல பல புதிய மடங்கள்! இதையெல்லாம் கண்டதும், நண்பர் கூறியது உண்மை என்பதை உணர்ந்தேன்.

இனிமையான தாள ஓசையுடனே "பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரை மேல் தேவன் எனை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே" என்று தேவார இன் தமிழ் காற்றிலே கலந்து வந்து செவிக்கும் சோர்ந்த உள்ளத்துக்கும் இன்பமளித்தது. அது வந்தது கோவிலிலிருந்து.

கோவிலில் ஒரு பஜனைக் கோஷ்டியினர்சுந்தரர் தமிழை பக்தியுடன் பாடினர். யார் அவர்கள் என்று விசாரித்ததில், வட்டுக்கோட்டை சித்தங்கேணி இந்துக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் பாடுவதாயும், அன்று அவர்களின் திருவிழா உபயமென்றும் அறிந்தேன்.

இப்போது அங்கு சித்திரைத் திருவிழா. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பல பள்ளிக்கூட மாணவர்களும் ஆசிரியர்களும் ஸ்பெஷல் பஸ்ஸுகளிலே வந்து, ஒவ்வொரு நாள் உற்சவத்தையும் பக்தியுடன் நடத்திவிட்டுச் செல்லுகின்ருர்கள்! மூன்று வருஷ காலமாக இந்த ஏற்பாடாம்! மாணவர்களுக்கு இதை விட நல்ல 'எக்ஸ் கர்ஷன்' (உல்லாச யாத்திரை) கிடைப்பதரிது! அம்மாணவர் மூலம் ஆஸ்திகம் வளர்வதையும் கண்டேன். பாலாவியில் குஷியாகக் குளித்துவிட்டு, அவர்கள் கோவிலைச்சுற்றி வலம் வந்து தரிசனம் செய்கின்றனர்.

இரவு எட்டு மணிக்கு மற்ருேர் பஸ்ஸில் 'ஹரோஹரா' கோஷத்துடனே மாணவர் கோஷ்டி இறங்கியது. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாசாலை கோஷ்டியாம் அது. தலைமை ஆசிரியர் உள்ளிட்டுப் பல ஆசிரியர்களும் மாணவருமாக ஐம்பது பேருக்குமேல் மறு நாள் உற்சவம் நடத்த விரைந்து வந்தனர்.

கொழும்பு, மானிப்பாய், கொக்குவில், மாத்தளை, தெல்லிப்பளை, காரைநகர், உரும்பராய், திருநெல்வேலி, திருக்கோணமலை முதலிய தூர இடங்களிலிருந்தெல்லாம் இவ்விதம், இளம் சிங்கங்கள் பக்தியுடன் கேதீச்சர நாதனின் அருளைப்பெற ஆவலுடன் வருகிருர்கள்.

சென்ற மாசி மாத சிவராத்திரியின்போது 15 ஆயிரம் பக்தர்களுக்கு மேல் அங்கு பல பக்கங்களிலிருந்தும் கூடினர்களாம். மே மாத கலவரத்துக்குப் பின் கேதீச்சரமே தங்களுக்குத் தஞ்சம் என்று உணர்ந்து தமிழர் அதிகமாகக் கூடுவதாக அறிந்தேன். நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே! தமிழர் ஒன்றுபட்டு, அன்பு வாழ்க்கை நடத்த கேதீச்சரம் வழிகாட்டுகின்றது. அது வளர்ந்து வருவதை நேரிற்காண பெருமையும் புது நம்பிக்கையும் அளிப்பதாகவுள்ளது.

—ஐயாறன்

# பூஜ்யம் தபால்

நேருஜி,
பிரதம மந்திரி,
புதுடில்லி.
நமஸ்தே.

தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் மிகவும் சங்கடமான நிலையில் இக்கடிதம் எழுதித் தங்கள் பொன்னனநேரத்தை வீணக்கி, தங்களைத் தொந்தரவு செய்வதற்காக மன்னிக்கவேண்டும்.

'ஐயம்பேட்டை வேலை' என்று ஒரு கதையுண்டு. தெருவிற் போகிற ஒருவனை வீணுக வம்புக்கிழுத்துச் சங்கடத்தில் சிக்க வைப்பதற்கே அப்படிக் கூறுவது. அதேபோல் சீனத்துக்கும் திபேத்துக்கும் ஏற்பட்டுள்ள தகராறில் இந்தியாவை இழுத்துவிட்டு, சீனமும் இந்தியாவும் மோதிக்கொள்ள இப் புண்ணியவான்கள் காத்திருக்கிருர்கள். அது தங்களுக்குத் தெரியும்.

சீனத்திலிருந்துசில அவசரக் குடுக்கைகள் இந்தியாமீதும் தங்கள்மீதும் வசைமாரி பொழிந்தனர். தாங்கள் பொறுமைக்கே பூஷணமாக இருந்து, மிகக் கண்யமாக "இது பெரிய தேசமான சீனத்துக்கு அழகல்ல" என்று மறுத்து தங்கள் மேலான அரசியல் ஞானத்தைக்காட்டி உலகத்தின் பெருமதிப்பைப் பெற்றீர்கள்.

தங்களது பொறுமை, சீனத்தின் மனப்போக்கையும் மாற்றி, இந்தியா—சீன நல்லுறவுக்குத் தீங்கு ஏற்பட அனுமதிக்கக் கூடாதென்று நல்ல புத்தியுடன் தீர்மானித்துள்ளது.

தலாய்லாமாவைப் புது சீனம் ஒரு உபதலைவராகத் தெரிவுசெய்துள்ளதால் சீனத்துக்கும் தலாய்லாமாவுக்கும் மீண்டும் நட்பு ஏற்படுத்தத் தாங்கள்செய்யும் மேலான முயற்சி வெற்றி பெறுவது சாத்யமென நம்புகிறேன்.

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு :-

பாகிஸ்தானிலிருந்து லட்சக்கணக்கான அகதிகள் வந்தனர். ஏற்றீர்கள். இப்போது திபேத்திலிருந்து ஆயிரக்கணக்காக வரும் அகதிகளுக்கும் தாங்கள் ஜீவகாருண்யத்துடன் தஞ்சம் அளிக்கின்றீர்கள். எளிய நாடான இந்தியா இவ்விதம் பெரிய மனது காட்டிவருவதின் மூலம் பாரத அன்னையின் பரம்பரைப் பண்பாடு மாறவில்லை என்பதை உலகுக்குக் காட்டிவிட்டீர்கள். தர்மம் தலை காக்கும்! தாங்களும், இந்தத் தர்மமும் நீடூழி வாழ்க!

"பூ"

# கிராமாபிவிருத்திச் சம்மேளனம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிராமாபிவிருத்தி இயக்கம் பல்கிப் பெருகிப் பயன் தருகின்றதென்ற உண்மையையும் எடுத்துக் காட்டினர். தமிழினம் முன்னேறவேண்டுமாயின் கமத்தொழிலில் ஈடுபட்டு உழைக்கும் வாலிபர்களையே படித்த பெண்கள் இனிமேல் மணம்புரிந்து கொள்ள வேண்டுமெனச் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசும்போது குறிப்பிட்டார்.

### அதிபரின் மகிழ்ச்சி

திரு. சமரசிங்க மிகுந்த உணர்ச்சியுடன் பேசினர். குடிசைக் கைத்தொழில் வடபகுதியில் நல்லமுறையில் விருத்தியடைந்து வருவதைக் கண்டு தாம் மகிழ்ச்சியடைவதாக அவர் கூறினர். யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள கிராமாபிவிருத்திச் சங்கங்கள் அனைத்துக்கும் அரசாங்கத்தின் பண உதவி தாராளமாகக் கிடைக்கும் எனவும் அவர் உறுதியளித்தார்.

மீசாலைகிராமாபிவிருத்திச்சங்கத்தின் போஷகர் திரு. ஆர்.ரி. சுப்பிரமணியம் பேசும் போது அரசினர் நெசவுத் தொழிலில் அக்கறைகாட்ட முன்னரே யாழ்ப்பாணமும் மட்டக்களப்பும் அத்துறையில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு உழைத்து வருகின்றனவெனக் கூறினர்.

பொதுக்கூட்டத்தில் திரு.து. சீனிவாசகம், திருமதி சத்தியதேவி துரைசிங்கம் திருமதி வேதவல்லி கந்தையா, திருமதி சரஸ்வதி நடராசாஆகியோரும் பேசினர். பரிசுகள்பெற்ற சங்கங்களுக்கு அரசாங்க அதிபரின் மனைவி திருமதி ஸ்ரீ காந்தா அவர்கள் பரிசில்களை வழங்கினர்.

### ஆடல் பாடல்

அன்றிரவு நடைபெற்ற கதம்பக் கச்சேரியில் ஒவ்வொரு காரியாதிகாரியின் பிரிவுகளிலிருந்தும் ஆடல்பாடல்கள் இடம்பெற்றன. கும்மி, கோலாட்டம், நடனம், பொய்க்காற் குதிரை நாட்டியம், கரகம் என்பன குறிப்பிடத்தக்கன.

மின்சார விளக்குகளுடன் ஜோதி மயமாக விளங்கிய கண் காட்சியானது, காரியாதிகாரிகளும் கிராமத்தலைமைக்காரர்களும் கிராமாபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பொது மக்களும் ஒன்று சேர்ந்து உறுதியுடன் உழைத்த சிறப்பினை எடுத்துக் காட்டுவது போலிருந்தது.

தென்மராட்சிப் பகுதித் தலைமைக்காரர்கள் தங்கள் காரியாதிகாரியின் துணையோடும், பொது மக்களின் ஆதரவுடனும் ஏனைய உத்தியோகத்தர்களின் அனுசரணையுடனும் விழாவும் கண்காட்சியும் நடைபெற்ற இரு தினங்களும் அறுசுவையோடு கூடிய விருந்தளித்து அனைவரையும் உபசரித்தனர். கண்காட்சியின் வெற்றிக்குச் சலியாது உழைத்த பெண் மணிகளுக்கும் பொது மக்களின் நன்றி உரியதாகும்.

நகைகளுக்கும்

வைரங்களுக்கும்

ஏ. கே. எஸ். அன் சன்ஸ்



நகை மாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

*மாதர் பகுதி*

### நாடாளும் மன்னர்களின் கையிலே செங்கோல்
### வீடாளும் பெண்களின் கையிலே அகப்பை!

# சமையற் கலை

— வாணி —

"அகப்பை பிடிப்பவர் நம்மாளானால்......" என்பது பழமொழிகளுளெல்லாம் சுவையானது என்கிறார் ஒரு சாப்பாட்டுப் பிரியர். உணவுவகைகளுள் சிறந்ததெனப்பட்ட எல்லாவற்றையும் சுவைத்துக் கரைகண்ட இப் பழுத்த அனுபவசாலி தம் இல்வாழ்வைப் பற்றிச் சொல்லும் பொன்மொழிகளைப் பாருங்கள். "குடும்பத்தில் சண்டை சச்சரவு என்று உலகத்தில் இல்லாததையெல்லாம் கதைகளில் எழுதுகிறார்கள். நாங்கள் ஒரு குடும்பம் நடத்துகிறோம். எங்களுக்கு அது ஏற்படவேயில்லை. என் மனைவியைப்போன்று மந்திரங் கற்ற பெண்கள் எல்லோருக்கும் வாய்ப்பதில்லையே! மந்திரம் தெரிந்தவளான என் மனைவி 'தெய்வ உலக'த்திலுள்ள அமுதம் போன்ற உணவுவகைகளையே எனக்குப் பரிமாறுகிறாள்."

* *

இதுமாத்திரமல்ல சமையல் தந்திரம் கண்ட அந்த அம்மையார் கைவண்ணம் அது.

பெண்களுக்குத் தனி உரிமை சமையற் கலை! சமையல் செய்வதற்காகப் பெண்கள் பிறந்தார்களா, அல்லது பெண் இனத்தினால் அக் கலை உயர்வடையப் பிறந்ததா, என்னவென்று தெரியவில்லை. ஆனால், பெண்மணிகளின் கைபட்டு சமையற்கலை உயர்ந்துள்ளது என்பது உண்மை. நாடாளும் மன்னர்களின் கைகளிலே செங்கோல். வீடாளும் பெண்களின் கையிலே அகப்பை. அகப்பை அசைந்தால் வீட்டில் அன்று நிறைவு, இல்லையெனில் ஏதோ அசம்பாவிதம்தான்!

இல்லறத்திலேற்படும் சிறு சிறு தகராறுகளுக்குச் சமையல் ஒரு காரணம். வேலை முடிந்து வீட்டுக்கு அலுப்புடன் வருவார் கணவன். அப்போதுதான், 'விரைவாகச் சமைப்பது எப்படி' என்ற நூலைத் தூர வைத்துவிட்டுச் சமையற் கட்டுக்குள் நுழைவாள் மனைவி. 'ஏன் இவ்வளவு விரைவாக வந்து தொலைந்தார்' என்று எண்ணாமல், 'அடடா இவ்வளவு நேரம் படித்துக்கொண்டிருந்துவிட்டோமே' என்று மனைவி எண்ணுவதாயின் அதைப் பாராட்ட வேண்டியதுதான்.

இரண்டுமணிநேரம் 'உஸ், சீ' என்று நிலைகொள்ளாமல் முணுமுணுத்துக்கொண்டிருந்த கணவனுக்கு உணவு பரிமாறப்பட்ட இரண்டு நிமிடத்தில்— 'படீர்' தண்ணீர் டம்ளர் தூரப் போய் விழும்; 'தடால்' கறிப் பாத்திரம் சுவரில் மோதும்; 'சொர்...' வேகமாகத் தூக்கப்பட்ட சோற்றுடன் கூடிய இலையினிலிருந்தும் இரசம் நிலத்தில் கோடிடும். தெருக்கோடியில் நின்ற நாய்க்கூட்டம் 'சொத்' என்று வெளியில் விழுந்த இலைக்குப் போட்டி போட்டுக்கொண்டு ஓடிவரும்.

இது அன்றைய நாடகத்தின் முதலாம் அங்கம். இரண்டாவது, "கறியா இது? பாத்திரம் கழுவிய தண்ணீர்தான் இரசமா" என்ற கர்ஜனையோடு கணவனின் குரல் கிளம்பும். மனைவியின் விம்மல் ஒலி சிறிது நேரத்தால் எழும். பின் மூன்று நாட்களுக்கு மௌன விரதம்! 'அருமை மனைவி அகத்தலை இருந்தால் அறுசுவை உணவு வரும்' என்று நம்பித் திருமணம் செய்துகொள்ளும் இன்றைய ஆண்குலத்தை இப்படிப்பட்டவர்கள் எப்படித் திருப்தி செய்யப்போகிறார்கள்?

இன்றைய பெண்மணிகளிற் சிலர் சமையல் செய்வதற்குப் புத்தகங்களை நாடுகின்றனர். நூல்களிற் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை வைத்துக்கொண்டு புதுமாதிரிச் சமையல்வகைகளைச் செய்கிறார்கள். அந்தவழி வெற்றியளித்தாலும், அதைக் கருவாகக்கொண்டு விகடத் துணுக்குகள் வெளியிட்டு மகிழ்கின்றன பத்திரிகைகள். நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறிப்புகளை முறைப்படி பின்பற்றினால் நல்ல வெற்றி கிட்டுவது உண்மை!

இவர்கள் சமையல்செய்யத் தெரியுமென்றாவது சொல்லிக்கொள்ளலாம். சில பெரிய இடத்துப் பெண்கள் அடுக்களையை மறந்தும் நாடுவதில்லை. 'டைனிங் ஹோல்' வரைக்குமே அவர்கள் செல்வார்கள். அவர்களுக்கும், தொழில்செய்யும் பெண்களுக்கும் சமைக்க வேண்டிய அவசியம் இல்லாதிருக்கலாம்; சந்தர்ப்பம் நேராதிருக்கலாம். ஆனால், ஓய்வுள்ள ஒருநாளில் தன் கைபடச் சமைத்துக் கணவனுக்கு அளித்து உண்ணும் இன்பம் மகத்தானது. இத்தகைய நேரத்தை எதிர்பார்த்துத் துடிக்கும் பெண்கள் எத்தனையோபேர் இருக்கின்றனர். அடுக்களைப்பக்கம் எட்டியும் பார்க்காத பெண்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

உணவு கொடுப்போர் உயிரைக் காப்போர் என்றபடி நாட்டுக்கு விவசாயி; வீட்டுக்கு இல்லாள்! பெண்கள் கௌரவம், தொழில் எல்லாவற்றிற்கும் வீட்டு வாயிலிலேயே தடையிட்டு, உள் நுழைந்து குடும்பத்தைக் காக்கும் தெய்வமாக மாறல் வேண்டும். கணவன் பிள்ளைகளின் மகிழ்ச்சியிலே தாமும் இன்பங்காணல் வேண்டும். உடலுறுதிமிக்க குடும்பத்தைச் சிருட்டிக்க ஒழுங்கான சமையலை மேற்கொள்ளல் வேண்டும். தேவையிருந்தாலொழிய கணவன் ஹோட்டல்களுக்குச் செல்லும் அனாவசிய செயலைச் செய்யவிடாது தடுப்பது பெண்களின் கையிலேதானிருக்கிறது. அடடே! புடவைத் தலைப்பை வரிந்து கட்டிக்கொண்டு எங்கே புறப்பட்டுவிட்டீர்கள், அடுக்களைக்கா? நன்று; நன்றி!

# வீட்டுக்கு ஒரு திலகம்

— பூங்கோதை —

'மலாயாவிலிருந்துமாணிக்கவாசகர் குடும்பத்தோடு வந்திருக்கின்றாராம். நேற்றுத்தான் இதைப்பற்றி அறிந்தேன். மகேஸ்வரியைப் பார்த்துப் பத்துவருடங்களாகி விட்டன. ஏன், நீயும் மகேஸ்வரியுடன் ஒரு வகுப்பில்தானே படித்தாய். இருவரும் நாளைக்குப் பின்னேரம் அவர்களைப் போய்ப் பார்க்கலாம் என்று எண்ணுகிறேன். நீ என்ன சொல்லுகிறாய்' என்று கனகமணி, திலகவதியைப் பார்த்துக் கேட்டாள்.

திலகவதி அப்போதுதான் வீட்டு வேலைகளை முடித்துவிட்டுக் குழந்தைகளுக்குச் சட்டை தைப்பதற்காகப் புதிய துணியொன்றை அளவெடுத்து வெட்டிக் கொண்டிருந்தாள். அதிகாலை தொடக்கம் வீட்டு வேலைகளைக் கவனித்துவிட்டு, மாலைநேரத்திலேனும் 'சும்மா' இருக்கலாம் என்றால் அது திலகவதியால் முடியாத காரியம். பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவேண்டும், அவர்களுக்கு வேண்டிய உணவு வகைகளைத் தயார் செய்ய வேண்டும். காரியாலயத்தில் உத்தியோகம் பார்க்கும் கணவனுக்கும் மத்தியானத்துக்குச் சாப்பாடு அனுப்பி வைக்க வேண்டும், இத்தனைக்கும் வீட்டில் ஒரு சிறுவன் கூட உதவிக்கு இல்லை.

அன்று, ஒரு நாளும் இல்லாத திருநாளாகக் கனகமணி திலகத்தைப் பார்க்கச் சென்றபோது அவளுக்கு அது மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கியது. கனகமணி தையற்கலையில் நல்ல அனுபவம் வாய்ந்தவள். அவளைக்கொண்டு புதிய முறையில் ஒரு சட்டையைத் தனது குழந்தைக்குத் தயாரிக்கலாம் என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் உதித்தது.

"என்ன கனகம், எத்தனையோ நாட்களாக நீ இந்தப் பக்கமும் தலைகாட்டவில்லையே, வீட்டில் நிலைமை எப்படி? குழந்தைகள் சுகந்தானே! இங்கேபார், உன்னுடைய கையாலே எனது வசந்திக்கு ஒரு சட்டை வெட்டித்தா" என்று ஆசையுடன் கேட்டாள்.

கனகத்துக்கு அது ஒரு பெரிய வேலையாக இப்போது தோன்றியது. "நான் தான் தையல் வேலையைக் கைவிட்டு எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன. தையற்காரன் தைக்கும் சட்டைகள் தான் தங்களுக்கு வேண்டுமென எனது பிள்ளைகள் ஒற்றைக் காலில் நிற்கிறார்கள். தையற்காரர் 'பாஷனா'கத் தைக்கும்போது எங்கள் தையலை இந்தக்காலத்திற் பள்ளிக்கூடம் செல்லும் பெண்பிள்ளைகள்கூட விரும்புவதாயில்லை. நான் இப்போது தையற் காரனிடம் கொடுத்துத்தான் தேவையான சட்டைகளைத் தைப்பிக்கின்றேன். இதற்காகச் செலவாகும் பணமோ கொஞ்சநஞ்சமல்ல என்று கனகம் முறையிட்டாள்.

திலகவதிக்கு எல்லாம் நூதனமாகவே இருந்தது. மணமாகாத மங்கையாகக் கனகம் இருந்தபோது எத்தனை விதமான சட்டைகளையும் தையல் வேலைகளையும் செய்தாள். குடும்பப் பெண்ணானதும் எல்லாவற்றையும் மறந்துவிட்டுத் தையற்காரனுக்குச் சளைசளையாக எண்ணிக் கொடுக்கின்றாளே என்று நினைத்தவுடன் அவள் தன்னைப்பற்றி உண்மையாகவே திருப்தி அடைந்தாள்.

'என்ன கனகம்? நீ எல்லாம் இப்படித் தையல் வேலையைக் கைவிடுவாயென்று நான் கனவிலும் எண்ணவில்லையே. இவ்வளவு வேலைகளுக்கும் இடையில் எனது குழந்தைகளுக்கு நான் தான் சட்டைகள் தைத்துக் கொடுக்கின்றேன்' என்று திலகவதி சொல்லி முடிக்க முன்னர், கனகம் குறுக்கிட்டு 'நாளைக்கு மகேஸ்வரியிடம் இருவரும் போகத்தான்வேண்டும், இதே நேரத்துக்கு வருவேன். ஆயத்தமாய் இரு' என்றாள்.

'புது வருடம் பிறந்திருப்பதால் நல்லநாளாகப் பார்த்துத்தான் சிநேகிதர்களின் வீட்டுக்குப்போக வேண்டும்' என்றாள் திலகவதி.

"நாளும் கோளும் பார்ப்பதை நீ இன்னும் கைவிடவில்லை" என்று சொல்லிச் சிரித்து விட்டுக் கனகம் கிளம்பினாள். இதற்கிடையில் திலகவதி பஞ்சாங்கத்தைப்பார்த்து அடுத்தநாள் நல்ல நாள் எனக் கண்டு கொண்டாள். தானும் வருவதாக ஒப்புக்கொண்டு விட்டாள்.

* * *

கனகம் வீடு திரும்பிய மறுகணம் திலகவதி தன்பாட்டில் இருந்து யோசித்தாள். 'தையற் கலையிற் பக்குவம் வாய்ந்த ஒரு பெண் அதனை அசட்டை செய்வது எவ்வளவு தவறு. பொழுது போக்குவதற்காகவேனும் அதில் ஈடுபடலாமே. எனக்குத்தான் வீட்டில் எவ்வளவு வேலை. அப்படியிருந்தும், பிள்ளைகளுக்கு வேண்டிய சட்டைகளை என்கையினால்தானே தைக்கின்றேன்' என எண்ணிக்கொண்டிருக்கையிற் கணவன் படிக்கட்டில் அடி எடுத்து வைத்தார்.

திலகவதி கத்திரிக் கோலையும் புதிய துணியையும் பெட்டிக்குள் வைத்துவிட்டு அடுக்களைப் பக்கம் சென்றாள். அவள் வீட்டுக்கு ஒரு திலகம்.

## பெண்மையின் உயர்வு

பெண்ணின் வாழ்க்கையே தியாகமயமானது. அவள் உண்மையில் தனக்காக வாழ்பவளில்லை. இந்த நியதியே பெண்ணுக்கு ஒரு பெருமை. நம் நாட்டின் இலட்சியம் இது. பெண்ணின் கடமையே மனையறம் பேணி, மக்களுக்குத் தாயாக நிற்பதில் தான் உள்ளது. அதிலேயே அவளுடைய வாழ்வு, இன்பம், பெருமை எல்லாம் அடங்கி விடுகிறது. சுய நலத்தோடு வரையறுத்தார்கள் என்பதைவிட, பெண்மையின் உயர்வை, சகிப்புத் தன்மையை, தியாகத்தை எடுத்துக் காட்டச் சந்தர்ப்பங்கள் அளித்திருக்கின்றார்கள் என்று சொல்லலாமல்லவா.

ராஜம்கிருஷ்ணன்.

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு இலக்கமும்

140. சு. க. பா. சிவானந்தா,
382, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

141. நே. புஷ்பரஞ்சிதம்,
29, செட்டியார்தெரு
ஒழுங்கை, நல்லூர்.

142. எஸ் பி: வில்வரெத்தினம்,
607, பாவற்குளம்,
பூவரசங்குளம்.

143. இ. பஞ்சாட்சரம்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

144. ந. லீலா,
புதிய டிஸ்பென்சரி ஒழுங்கை,
வட்டுக்கோட்டைமேற்கு,
வட்டுக்கோட்டை.

145. யூ. த. பங்கிராஸ்
21, எல்லைவீதி வடக்கு,
மட்டக்களப்பு.

146. எஸ். வி. ஆர். வேத
நாயகம்,
178, ஸ்ரீ குணனந்த
மாவத்தை,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு 13.

147. சூ. கமலேஸ்வரி,
பணியப்பின்னக்கட்டை,
இடல்காசின்னை.

148. ந. வாலாம்பிகை,
151, ஸ்றவோட்பிளேஸ்,
மருதானை.

149. இ. யோகினி,
18, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

150. ச. இராசரெத்தினம்,
152, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

151. ச. யோகரெத்தினம்
165, நாவலர்வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

152. ம. வலித்தா,
55, பலாலிவீதி,
யாழ்ப்பாணம்.

153. எம். முகமது அலி,
பெரிய பள்ளிவாசல் வியூ,
சம்பந்தூர்.

154. மா. தீனதயாளன்,
C/o ஆ. மார்க்கண்டன்
ஆசிரியர்,
சுன்னாகம்.

155. கு. தேம்பமாலா,
காம்புவீதி,
ஊர்காவற்றுறை.

156. ஆர். சுப்பிரமணியம்,
13, குமரப்பா முதலிவீதி,
நுங்கம் பாக்கம்,
மதருஸ் 6.

157. கே. எஸ். மலர்,
"மலர்வாசம்"
பளை.

158. சி. புஷ்பநாதன்,
C/o கா. சிவகுருநாதன்,
சரசாலை, சாவகச்சேரி.

159. ந. சற்குணசிவம்,
"விசும்பொன்வாசா"
நாரந்தனை,
ஊர்காவற்றுறை.

160. ந. இராசரெத்தினம்,
கொத்தாவத்தை,
காங்கேசன்துறை,
இலங்கை.

# சிறுவர் பகுதி

## உண்மை உயர்வு தரும்

வட அமெரிக்காவில் செல்வத்திலும் கல்வியிலும் மேம்பட்ட பிரபு ஒருவர் இருந்தார். அவருடைய மகனின் பெயர் ஜோர்ஜ் வாஷிங்டன்.

அவனுக்கு ஆறு வயதான போது ஓர் அழகான கத்தி இனமாகக்கிடைத்தது. வாஷிங்டன் கத்தியின் பள பளப்பையும் அழகையும் கண்டான். மிகவும் சந்தோஷம் கொண்டான். ஆனந்தக்கூத்தாடினன். அக்கத்தியை எடுத்துக்கொண்டு தந்தையின்தோட்டத்துக்குப் போனன். அங்கே ஒரு முந்திரிகைகொடி நின்றது. அது அவனுடைய தகப்பனரால்அருமையாக வளர்க்கப்பட்டது. வாஷிங்டன் தனது கத்தியின் கூர்மையை அறிவதற்காக முந்திரிகைக் கொடிகளைவெட்டித் தள்ளினன்.

மாலை நேரமானதும் தகப்பனர்தோட்டத்துக்கு உலாவப் போனர். அங்கே அருமையாய் வளர்க்கப்பட்ட கொடி வெட்டப்பட்டிருப்பதைப் பார்த்தார். இதனைவெட்டியவர் யாவர்? என்று கோபத்தோடு கேட்டார். தந்தை கோபத்துடன் இருப்பதை வாஷிங்டன் முகக்குறிகளினல் அறிந்தான். ஆயினும் அவன் தந்தையிடம் நேரே சென்று "அப்பா அம்மரத்தை நானே விளையாட்டுக்காக வெட்டினேன்; மன்னிக்க வேண்டும்" என்று சாந்தமாய்க்கேட்டான்.

தந்தையார் சந்தோஷப்பட்டு "குழந்தாய் நீ உண்மை சொன்னய்; உன்னை மன்னித்தேன்" என்று கட்டி முத்தமிட்டார். அன்று முதல் அவன் உண்மையே பேசிவந்தான். உண்மை உயர்வு அளிக்கும் என்றபடி பிற்காலத்தில்வாஷிங்டன் தான் பிறந்த நாட்டுக்குத் தலைவன் ஆனன்.

## புத்தியுள்ள சிறுவன்

சு. மகேந்திரன். பதிவு எண் 57.

ஓர் ஊரிலே ஒரு பையன் வசித்துவந்தான். அவனுக்குத் தந்தையைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. அவனுடைய தந்தை கூலிவேலை செய்து பிழைத்துவந்தார். ஆனல் அவர் சில நாட்களில் இறந்துவிட்டார். அதனல் அந்தச் சிறுவன் தன்னுடையவாழ்க்கையைநடத்துவதற்காகக்கூலிவேலைசெய்து சீவனம் செய்துவந்தான்.

அவன் ஒருநாள் வேலை செய்துகொண்டிருக்கும் பொழுது அவனுக்கு நன்ருக வியர்வை சிந்திக்கொண்டிருந்தது. ஆனல் அவன் அதைப் பொருட்படுத்தாமல் தன்னுடைய வேலையில் கவனம் செலுத்தினன். அப்பொழுது அந்த வீதியால் பவனிவந்து கொண்டிருந்த அவ்வூர் அரசன் அதைக் கவனித்தான். பிறகு அரசன் தன்னுடைய அரண்மனைக்குச் சென்றுவிட்டான். பின்னர் அரசன் ஒரு சேவகனைக் கூப்பிட்டு அச் சிறுவனை அழைத்துக்கொண்டு வரும்படி சொன்னன். சேவகன் அவனை அழைத்துக்கொண்டு வந்தான். அரசன் அவனைப் பார்த்து, 'நீ ஏன் இப்படி வேலைசெய்கிருய்?' என்ருன். உடனே அவன் "நான் என்னுடைய வாழ்க்கையை நடாத்துவதற்காக இப்படிவேலை செய்கிறேன்" என்ருன். அரசன் அவனுக்கு நிறையப் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்தான். அவன் மிக சந்தோஷத்தோடு அவற்றையும் ஏற்றுக் கொண்டு வீடு திரும்பினன். பிறகு அங்கே ஒரு பெரிய மாளிகை கட்டி வாழ்ந்தான்.

## பாட்டி

வித்துவான் க. வேந்தனர்

அன்பு நிறைந்த பாட்டி என்னை
அணைத்துத் தூக்கும் பாட்டி
இன்பமான கதைகள் எல்லாம்
எனக்குச் சொல்லும் பாட்டி

வாழைப் பழமும் இனிப்பும் எனக்கு
வாங்கித் தந்த பாட்டி
தோளிற் கிடத்தி முதுகைத் தடவித்
தூங்க வைக்கும் பாட்டி

பள்ளிக் கூடப் பாடம் வீட்டில்
படிக்கச் சொல்லும் பாட்டி
துள்ளிக் குதித்து மண்ணில் வீழ்ந்தால்
துடைத்துக் கழுவும் பாட்டி

கோவிலுக்குப் போகும் போது
கூட்டிச் செல்லும் பாட்டி
கும்பிடு நீ கும்பிடென்று
குனிந்து சொல்லும் பாட்டி

அப்பா அம்மா அடிக்கவந்தால்
அலறித் தடுக்கும் பாட்டி
தப்பாய் நானும் பிழைகள் செய்தால்
தானே புலம்பும் பாட்டி

அவ்வைப் பாட்டி பாடித்தந்த
ஆத்தி சூடிப் பாட்டை
செவ்வையாகப் பாடச் சொல்லிச்
சிந்தை மகிழும் பாட்டி

செல்வச் சிறுவர்களே!

நேருமாமா குழந்தைகளுக்குக் கூறிய நல்லுரை மிக நன்ருக இருக்கின்றதெனப் பலர் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர். நேருமாமாவின் படத்தை வெளியிடவில்லையே என்று என் மீது கோபித்துச் சிலர் எழுதிய கடிதங்களும் கிடைத்தன. வேறு சில மருமக்கள் தங்கள் பெயர்கள் 'சிறுவர் பகுதி'யில் இன்னும் வெளியாக வில்லையே என்று அழாக் குறையாகக் கடிதம் எழுதியிருக்கின்றனர்.

புதிய மருமக்களின் பெயர்களை ஒவ்வொரு வாரமும் ஒழுங்காக வெளியிட்டு வருகின்றேன். தாமதம் ஏற்பட்டாலும் பெயர்களைத் தவருது வெளியிட்டு வருவேன் என்பதை மருமக்களுக்கு அன்புடன் தெரிவிக்கின்றேன். ஆனபடியால் பொறுமை யுடன் இருக்கவும்.

சின்னமாமா

## அறிவைப் பெருக்குங்கள்

1. இலங்கையின் புதிய இன்ஸ்பெக்டர் ஜெனரல் யார்?

2. இங்கிலாந்து சென்றுள்ள இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியின் தலைவர் யார்?

3.(i) டெலிவிஷனை முதல் முதலாகக் கண்டு பிடித்தவரின் பெயர் என்ன? (ii) அவர் எந் நாட்டைச் சேர்ந்தவர்?

4. உலகத்திலே சிறந்த மனிதராகக் கருதப்படுபவர் யார்?

5. இந்தியாவின் பாதுகாப்பு மந்திரியின் பெயர் என்ன?

[விடைகள் 14 ஆம் பக்கம் பார்க்க].

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

- **ஈழநாடு சிறுவர் பகுதியில்** ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.
- உறுப்பினராகச் சேர விரும்புவோர் இங்குள்ள உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள அமைவுத்தாள் 9-5-59க்குப்பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் அமைவுத்தாளை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பினல் போதுமானது.
- ஈழநாடு அலுவலகத்திலிருந்து உறுப்பினர் பதிவு இதழ் கிடைத்தபின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதிக்கு** உறுப்பினர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.
- **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

## ஈழநாடு சிறுவர் பகுதி

**உறுப்பினர் அமைவுத்தாள்**

**(2-5-59)**

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்........................................................

விலாசம்................................................

..................................................

.............................. கையொப்பம்

.............................. பெற்ருர் அல்லது ஆசிரியரின் கையொப்பம்.

வயது............

இங்கே வெட்டவும்

சிறுகதை

# புது வாழ்வு

'மயில்வாகனன்'

காரியாலயத்திலிருந்து. வீடு திரும்பிய மணியம், அறைக்குள் நுழைந்ததும் நுழையாததுமாகக் கட்டிலின் மீது தொப்பென்று விழுந்தான். அன்று காரியாலயத்தில் அவனுக்குக் கடும் வேலை. அதனுல் உடலும் மனமும் சோர்ந்து போயிருந்தன. அவன் அறைக் கதவு திறந்த சப்தம் அவன் மனைவி கமலாவின் செவிகளில் இன்பமூட்டியது.

சில நிமிஷங்கள் சென்றன. "கமலா! காப்பி எங்கே?" என்று கேட்டுக்கொண்டு வருவாரே, எங்கே இன்னும் காணவில்லையே'' என்று எண்ணிய கமலா அவன் அறைக்குள் வந்து எட்டிப் பார்த்தாள். அவன் ஆழ்ந்த நித்திரையில், உடுத்த உடுப்புடனேயே படுத்திருப்பதைக் கண்டதும், அவள் கண்கள் கலங்கின. கட்டிலின் மேல் உட்கார்ந்த கமலா கணவனின் பக்கத்திலேயே தானும் படுத்துக்கொண்டாள்.அவளின் ஸ்பரிசம் தன் உடலிற் பட்டதும் மணியம் விழித்துக் கொண்டான்.

"என்ன? இன்று உங்களுக்குக் காப்பி வேண்டாமோ? வந்ததும் வராததுமாய்த் தூங்கி விட்டீர்களே?" என்று கேட்ட கமலம் அவனின் நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துவிட்டாள்.

''கமலா! உனக்கெங்கே தெரியப்போகுது என் கஷ்டத்தை! இன்று முழுதும் காரியாலயத்திலே ஏகப்பட்ட வேலை எனக்கு! அதுதான் இந்தத் தூக்கம்...... அது சரி "காப்பி வேணுமா!" என்று கேட்கிருயே? 'பாவம் களைத்துப் போய் வந்திருக்கிருனே' என்று காப்பியை இங்கேயே கொண்டுவந்திருக்கக் கூடாதோ!". மணியம் மனைவியின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளிவிட்டான்.

"இதோ கொண்டுவாறேன் ஒருநொடியில்!" என்று கூறி விட்டுக் கமலா ஓட்டமும் நடையுமாக அடுக்களைப்பக்கம் அவசரமாக ஓடிச் சென்ருள்.

* * *

மணியம் கொழும்பிலே ஒரு ஐரோப்பிய வர்த்தகக் கம்பனியில்'கிளார்க்' வேலை பார்த்துக்கொண்டிருந்தான். ஏழைப் பெற்ருேருக்குப் பிறந்தவனுனலும் தன்னுடைய சொந்த முயற்சியால் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் திறமையுடன் தேறிப் பின் இக் கம்பனியில் வேலையும் தேடிக்கொண்டான்.

கமலாவை அவன் கொழும்பிலேதான் சந்தித்தான். அவள் செல்வக் குடும்பத்தில் பிறந்தவள். செல்லமாக வளர்க்கப் பட்டவள். ஆனுல், குணத்தில் அவள் சிறந்து விளங்கினுள். மணியத்தின் நேர்மையான குணமும், அடக்கமான சுபாவமும் அவள் உள்ளத்தைக் கவர்ந்தன. இருவருடைய காதலும் வளர்ந்தது. கமலாவின் பெற்ருேர் திருமணத்திற்கு முதலில் சம்மதிக்கவில்லை. ஆனுல், கமலாவின் உறுதியான விருப்பமும், மணியத்தின் குணமும் அவர்களின் மனத்தை மாற்றிவிட்டன.

தாம்பத்ய வாழ்க்கை இருவருக்கும் இன்பமாக அமைந்து, நாட்களை இனிமையாக ஓட்டிச் சென்றது. ஆனுல், அந்த இன்பத்திலும் ஒரு முள் தைக்கத் தான் செய்தது. மணியம்—கமலா அவர்களின் வாழ்க்கையிலும் துன்ப அலைகள் மோதத் தொடங்கின. அதற்கு அவர்கள் இருவருமே பொறுப்பாளிகளல்ல. விதியென்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிடில், இணைபிரியாத அன்பில் திளைத்திருந்த இவ்விருவரின் வாழ்வில் இத்தனை பெரும் புயல் வீசுமா?

* * *

அன்ருெருநாள் வழக்கம் போல், வேலை முடிந்தபின் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தான் மணியம். வீட்டு முன் விருந்தையில் காலெடுத்துவைத்தவன் உள்ளே ஆண் குரல்—அதுவும் முன் பின் கேட்டறியாத குரல்—கேட்டதும் ஒரு கணம் திடுக்கிட்டான். பின் அவன் மனம் ஒருவாறு சமாதானமடைந்தது. 'யாரோ கமலாவுக்குத் தெரிந்தவனுக்கும், என்று எண்ணியவன் வீட்டினுள் அடியெடுத்துவைத்தான்'

அங்கிருந்து பக்கத்து அறைக்குள் எட்டிப் பார்த்த மணியத்துக்கு உலகமே இருண்டுவிட்டதுபோற் பிரமை ஏற்பட்டது மனத்தில். ஆம்! அவன் கண்ட காட்சி அவனைத் திக்பிரமை பிடித்துச் சிலையாய் நிற்கச் செய்துவிட்டது. அவன் காதலி, அவன் கைப்பிடித்த மனைவி கமலா இன்னெரு ஆண் மகனின் அணைப்பில் நின்று கொண்டிருந்தாள்.

"கமலா!" என்று கூவினுன் மணியம். திடுக்கிட்டுத் திரும்பினுள் கமலம். அவள் திடுக்கிட்டது அச்சத்தில் அல்ல, குற்றம் செய்துவிட்டேன் என்ற எண்ணத்தில் அல்ல. ஆனுல், என்றுமே கேட்டிராத அந்தப் பெரிய சப்தத்தில்தான் அவள் திடுக்கிட்டு விட்டாள்.முகத்தில் மலர்ச்சி மிளிரத்தன் கணவனை நோக்கி வந்த கமலா ஆறுதலாக "வந்துவிட்டீர்களா?" என்று கேட்டாள்.

''வந்துவிட்டேனு? பாதகி, உன் மானமெல்லாம் எங்கே சென்றுவிட்டதடி? நீ இப்படி நடந்துகொள்வாய் என்று நான் கனவிலும் எண்ணவில்லையடி. நல்லவளைப்போல் நடித்துவிட்டு இப்படிக் கள்ளத்தனம் செய்யும் துரோகியே! அவன் யாரடி? சொல்! அவன்யார்!" என்று வார்த்தைகளை மடமடவென்று வாயினின்றும் கொட்டிவிட்டு, ஆத்திரத்தில் நடுங்கியவண்ணம் நின்ருன் மணியம்.

கமலா தன் கைகளால் செவிகளைப் பொத்திக்கொண்டாள். அவளின் கண்கள் நீரைப் பொழிந்தன. என்ன பேசுவதென்றே தெரியாது திகைத்துப்போய் நின்ற பேதையைக் காப்பாற்ற அந்த வேற்று மனிதன் முன்வந்தான்.

"மிஸ்டர்! நீங்கள் இவ்வளவு கேவலமான எண்ணம் படைத்தவர் என்பதை அறிய எனக்கு வருத்தமாகவிருக்கிறது. உமக்காகவல்ல உம்மைக் கல்யாணம் செய்துகொண்ட இப்பெண்ணின் நிலைக்காக..." அவன் பேசிமுடிப்பதற்குள், மணியம் அவன் மேலும் பாய்ந்து விழுந்தான்.

''நீ யார் எங்கள் வாழ்க்கையில் குறுக்கிடுவதற்கு? அவள் கரம்பற்ற உனக்கு என்ன உரிமை? அதைவிட எனக்குப் புத்திமதியும் சொல்ல வந்துவிட்டாயா? இங்கிருந்து நீ போய்விடு... இப்பொழுதே... இல்லாவிட்டால், நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது" என்று கதறினுன் மணியம். அவன் நல்ல உள்ளத்தில் மெல்லமெல்லப் புகுந்த சந்தேகம்என்னும்நெருப்பு,இப்பொழுது கட்டுக்கடங்காமல், ஓங்கிவளர்ந்து அவன் உள்ளமெல்லாம் வியாபித்து, அவன் உடலையும் பொசுக்கிக் கொண்டிருந்தது.

அந்த மனிதன் அமைதியுடன் மீண்டும் பேசினுன். "சந்தேகத்தில் ஏதேதோ தெரியாமல் உளறுகின்றீர் நீர். கமலா என் உடன்பிறந்த தங்கையில்லாவிடினும், அவள் என் தங்கையாகவே சிறுவயதிலிருந்து வளர்ந்தாள். அவள் வாழ்வு மலரவேண்டுமென்பதே என் அவா. அதற்காகவே நான் வாழ்ந்தேன்; வாழ்கிறேன் உம்முடைய கடிதங்களை—காதல்சொட்டச்சொட்ட எழுதியிருந்தீரே—அந்தக் கடிதங்களை அவளிடம் சேர்க்கவும், அவள் பெற்ருேர்க்கு அறியாமல் உம்மிடம் அவள் கடிதங்களையும் சேர்க்க எவ்வளவு பாடுபட்டேன் தெரியுமா? ஏன் எனில், அவள் வாழ்வு மலர வேண்டும், மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கவேண்டுமென்பதற்காகவே. இவையெல்லாவற்றையும் தெரிந்துகொள்ளாத நீர் உம் மனைவியை அவள் அண்ணன் முன்னுல் இப்படிக் கேவலமாக நடத்திவிட்டீரே! சீ! வெட்கமில்லை உமக்கு?" என்று கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டு வெளியேறிவிட்டான் அம் மனிதன்.

அவன் சென்றபின் அங்கே அமைதி நிரம்பியிருந்தது. வெட்கத்தில் தலைகுனிந்த வண்ணம் தன் அறைக்குட் சென்ற மணியம் கட்டிலின்மேற் படுத்துக் கொண்டான். அவன் கண்களிலிருந்து நீர் ஆருகப் பெருகியது. ஒரு சில நிமிஷங்களில் நடந்து முடிந்த அந்தச் சம்பவத்தை எண்ணிப்பார்த்த அவன் மனம், தன்னுடைய சிறுமையையும், தன்னை அறியாமலே தன் உள்ளத்திற் புகுந்து தன்னை ஆட்டிவைத்த சந்தேகத்தையும் வெறுத்து ஒதுக்கியது. கமலாவின் உள்ளத்தைப் புண்படுத்தி விட்டதையும், தன்னைப்பற்றி அவள் என்னதான் எண்ணியிருப்பாளோ என்பதையும் எண்ணி எண்ணி அவன் உள்ளம் வெந்து வெதும்பியது.

அன்றிரவு முழுவதும் அவனுக்கு நித்திரையே வரவில்லை. தன்னுடைய செயலை எண்ணி எண்ணி மனம் புழுங்கிக் கொண்டே புரண்டு புரண்டு படுத்தான். விடிந்தாலோ புது வருஷம். ''நாளை, புதுவருஷத்தன்று இருவரும் பிரிந்து நின்று, வேற்று மனிதர் மாதிரிப் பழகவேண்டுமா? என்ன?" என்று மனம் வருந்தினுன் அவன்.

வேதனை பொறுக்க முடியவில்லை அவனுக்கு. கட்டிலை விட்டெழுந்து உள்ளே சென்ருன் அவன். கமலாவின் அறைக்குள் சென்ருன். அவள் நிலத்திலே, வெறும் பாயிலே படுத்திருந்தாள். கன்னங்களைக் கண்ணீர் நனைத்திருந்தது. அவள் முகத்திற் கவலை பரவியிருந்தது. பக்கத்திலே படுத்துக்கொண்டான், மணியம். அவன் ஸ்பரிசம் பட்டதும் அவள் திடுக்கிட்டு விழித்தாள்.

''கமலா—என்னை மன்னித்துவிடு...நான் ஒரு கேவலமானவன்...உன் தூய அன்புக்குத் தகுதியற்ற கயவன்...'' என்று அவள் கைகளிரண்டையும் தன் கைகளாற் பிணைத்தவாறே கெஞ்சினுன் மணியம்.

பொங்கிவந்த அழுகையை' பொருமியெழுந்த துக்கத்தை அடக்கிக்கொண்டு அவள் பதிலளித்தாள்.

"அத்தான்! உங்களை மன்னிப்பது சுலபம். ஆனுல், நீங்கள் என் மனத்தில் ஏற்படுத்தியிருக்கும் வேதனையை எப்படி அத்தான் அகற்றுவேன்?'' மணியம் அவளை இறுக அணைத்துக்கொண்டான். ''கமலா! அப்படியெல்லாம் சொல்லாதே! நவீன புதுவருஷம் பிறக்கின்றது. எங்கள் வாழ்க்கையிலும் புதுமையும், புத்துயிரும் பிறக்கட்டும்! நான் புதுவருஷச் சபதம் ஒன்று எடுத்துக் கொள்ளுகிறேன்...இனிமேல் எந்தச் சந்தர்ப்பத்திலும் உன்னைநான் சந்தேகிக்க மாட்டேன் என்பதே அச் சத்தியம்!'' என்ருன் அவன்.

"ஆமாம்! புதுவருஷம் நாளைக்குப் பிறக்கப்போவது உண்மை. அத்தான்...எனக்குச் சீக்கிரத்தில் குழந்தையும் பிறக்கப்போகிறது!" என்று அவள் மணியத்தின் நெஞ்சில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். மணியத்தின் உள்ளம் இன்பக்கிளர்ச்சியில் தத்தளித்தது. எங்கிருந்தோ கோயில் மணியொன்று 'டாண், டாண்' என்று அடித்தது. அந்த இனிய ஒலி அவர்களிருவரின் உள்ளங்களிலும் எதிரொலித்தது. புதுவருஷத்தை வரவழைத்த அம்மணியின் ஓசை, அவர்கள் புதுவாழ்க்கையை வரவழைப்பதிலும் மகிழ்ச்சி கொண்டிருக்குமோ?


இங்கே வெட்டவும்

ஈழநாடு
சிவன்கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

ஈழநாடு வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து இதனுடன் மனிஓடர்/செக்/மூலம் அனுப்பி வைக்கின்றேன்

.................................
கையொப்பம்.

பெயர்: ..........................................

விலாசம்: ........................................

இங்கே வெட்டவும்

யாழ்ப்பாணம்

ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை
சிருப்பர்

Std. 14.

**மனிதகுல மணிகள் : 1**

## பயங்கர நோய்க்கு மருந்து கண்டுபிடித்த மேதை

# போல் எர்லிக்

— வீ. இராமகிருஷ்ணன் —

**கா**லம், ஏறக்குறைய எண்பது வருடங்களுக்கு முன்பு. இடம், ஜெர்மனி தேசம். ஜெர்மன் சக்கரவர்த்தியும் அவரைச் சேர்ந்த செல்வர்களும் மிகுந்த படாடோபத்துடன் வாழ்ந்த காலம் அது. மக்கள் வறுமையிலும், பிணியிலும், ஆதிக்கத்தாரின் அக்கிரம அடக்குமுறை யாட்சியிலும் உழன்று வருந்திக் கொண்டிருந்த காலம். ஏழைகள் பிணிகளினால் ஈசல்கள் போல் செத்துக் கொண்டிருந்த காலம்.

### கொடிய நோய்

நாட்டு மக்களின் முக்கால் பகுதியினருக்குமேல் ஸிபிலிஸ் (Syphilis) எனப்படும் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டு வருந்திக் கொண்டிருந்தனர். இந் நோய் ஆண், பெண் கலவியின் போதே தோன்றுகின்றது. நோயுள்ளவர்களிடமிருந்து நோயற்றவர்களுக்குத் தொற்றுகின்றது. இந்நோயினால் தேகமுழுவதும் புண்கள் தோன்றி, மூளைபாதிக்கப்பட்டுப்பயித்தியமாகிக் கடைசியில் மிகப் பரிதாபகரமான மரணம் ஏற்படும். மேலும் இந் நோயுள்ள பெண்களுக்கு குழந்தைகள் பிறக்குமாயின் அவை அநேகமாகப் பிறவிக் குருடுகளாக விருக்கும். எத்தகைய பயங்கரமானநோய், பெற்றோரின் பிழையான வாழ்க்கை முறை, பிறவியிலேயே, ஒருபாவமுமறியாத மக்களையும் பாதிக்கின்றது.

### 606 சோதனைகள்

போல் எர்லிக் (Paul Ehrlich) என்ற ஜெர்மன் விஞ்ஞானி, இந்நோயின் கொடுமைகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற மருந்து கண்டு பிடிப்பதற்காக முற்பட்டார்: செயற்கை முறையில் அநேக குரங்குகளின் உடல்களுள் இந்நோய் தோற்றுவிக்கப்பட்டது. பின் அநேகவிதமருந்துகளை இக் குரங்குகளினுடல்களுட் செலுத்தி அங்குத் தோன்றும் நிலைமைகளை ஆராயத்தொடங்கினர். இன்றைய அவசர உலகில் வாழும் நம்மால் அவரது நம்பிக்கையையும் பொறுமையையும் நம்பவியலாது .தோல்விக்குப்பின் தோல்வி. 606 சோதனைகளிலேயே அவர் வெற்றி கண்டார். இக்கொடிய நோயை சால்வர்சான் (Salvarsan) என்ற மருந்தின் மூலம் தீர்க்கலாம் எனக் கண்டு பிடித்தார். பின் இம்மருந்தை நோயுள்ள மக்கட்குக் கொடுத்தும் பரிசோதிக்க வேண்டியிருந்தது.

### நஞ்சு மருந்து

அப்பணி இலகுவாக இருக்கவில்லை. ஏனெனில் இவர் கண்டு பிடித்த மருந்தில் கொடிய நஞ்சாகிய ஆர்சனிக் (Arsenic) சேர்ந்திருந்தது. அறிவற்ற மக்கள் நோயினால் அவதிப்பட்டு இறக்கத்தயாராயிருந்தனரே யன்றி மருந்தினால் ஏதேனும் நலம் ஏற்படுமோ என்று சோதிக்கத் தங்கள் உடல்களை உபயோகிக்கத் தயாராகவில்லை. இம்மருந்தினால் பயனில்லாவிடினும், உபாதையில்லாமல் சீக்கிரத்திலேயே இறக்கலாம் என்ற யோசனையும் அவர்களுக்கு நல்லதாகப்படவில்லை. அவதிப்பட்டுக் கொண்டேனும் எவ்விதமாவது உயிரைக் கையில் பிடிப்பதுதானே உயிரினங்களின் முக்கிய லட்சியம்.

மிகுந்த பிரயாசைக்குப் பிறகு, அரசாங்கத்தார் தூக்குத் தண்டனை விதிக்கப்பெற்ற இந் நோயுள்ள நூறு கைதிகளில் மருந்தைப் பரிசோதிக்க அநுமதி தந்தனர். இக் கைதிகள் குணமடைந்தால் அவர்களின் தூக்குத்தண்டனை ரத்து செய்யப்படும் என்ற நம்பிக்கை கைதிகளுக்குக் கொடுக்கப் பட்டது.

### கைதிக் கூண்டில் மேதை

சால்வர்சான் இந்நூறு கைதிகளுக்கும் கொடுக்கப் பட்டது. சீக்கிரத்தில் இவர்களில் 99 பேர்களின் நோய் குணப்படுத்தப் பட்டது. ஆனால் ஒரு கைதி இறந்து விட்டான், அவன் இறந்தது நோயினாலல்ல, மருந்திலிருந்த நஞ்சின் காரணமாக என்று ஐயமற நிரூபிக்கப்பட்டது.

முட்டாள் கூட்டத்திற்கு வேறு என்ன தேவை? அரசாங்கம் போல்எர்லிக் ஒரு கொலையாளி எனக் கூறி அவரைக் கைதாக்கினது. தூக்கில் இடப்பட்டுச் சாகவிருந்த 99 பேர்கள் காப்பாற்றப் பட்டார்களென்றோ அல்லது அவர்கள் சாவினும் கொடிய நோயிலிருந்து குணப்படுத்தப்பட்டார்களென்றோ எண்ண அறிவிலிகளுக்கு நேரமேது? கொக்கரிப்புடன் ஒரு மேதையைக் கைதிக்கூண்டில் ஏற்றினர்கள்.

### மற்றொருமேதை

முட்டாள்களுக்குத் தங்கள் அறிவின் அளவு தெரியும் தானே. மேதையுடன் விவாதிக்க நேர்ந்தால் தோற்க வேண்டி வருமோ எனப் பயந்து, எர்லிக்கின் விரோதியென்று நம்பப்பட்ட மற்றொரு விஞ்ஞான மேதை எமில் பெரிங் (Emil Behring) இடம் சென்றார்கள். இம் மேதை தான் தொண்டைக்கறப்பான் (Diphtheria) நோய்க்கு மாற்று மருந்து கண்டு பிடித்தவர். எர்லிக்கின் எதிரிகள் இவரை அரசாங்க சாட்சியாக வந்து விஞ்ஞான முறையில் எர்லிக்கின் குற்றத்தை நிரூபிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார்கள். பாரிஸிலிருந்து பெரிங் ஒன்றும் பேசாமல் இதற்கு ஒப்புக்கொண்டார்.

கோர்ட்டில் தவணை. எர்லிக் கைதிக் கூண்டில். பெரிங் சாட்சிக் கூண்டில். அரசாங்க நியாயவாதி மிகக் களிப்புடன் பெரிங்கை நோக்கி:

"எர்லிக் நஞ்சென்றறியப் பட்ட ஒரு பொருளைக் கொடுத்ததினால் ஒரு மனிதன் இறந்தான். ஆகையினால் அவன் ஒரு கொலை செய்தான். என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள்கிறீர்களா"? என்று கேட்டார். பெரிங் மிகவும் சாந்தமாக,

"அரசாங்க நியாயவாதி ஒரு பிழை செய்து விட்டார் என்று நினைக்கின்றேன். எர்லிக் ஒரு கொலை செய்ய வில்லை. இரு கொலைகள் செய்திருக்கின்றார்" என்று கூறினர். நியாயவாதிக்கு ஒரேகுதூகலம். "என்ன, என்ன, நாங்களறியாமல் அவர் வேறெங்கு கொலை செய்திருக்கின்றார். கூறுங்கள் அதையும். இதே குற்றப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்வோம்" என்று அவசரப்பட்டார்.

பெரிங் இன்னமும் மிகச்சாந்தமாக "சால்வர்சான் கொடுத்ததினால் ஒருவன் இறந்தது உண்மையே. **ஆனால் அதே நேரத்தில் பயங்கர ஸிபிலுசு நோயும் கொலை செய்யப்பட்டு விட்டது.** அதையும் கைதியின் குற்றச்சாட்டில் தயவு செய்து சேர்த்துக்கொள்ள வேண்டும்" எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டார்.

### பசு சிங்கமாகிச் சீறியது

கோர்ட்டில் ஒரே ரகளை. அரசாங்க நியாயவாதி நாற்காலியில் உட்கார்ந்தார். மக்கள் ஆரவாரித்தனர். இன்னமும் சாட்சிக் கூண்டிலேயே நின்றிருந்த பசு சிங்கமாகச் சீறியது. "எனக்கும் எர்லிக்குக்கும் விஞ்ஞான விஷயங்களில் வேற்றுமைப்பட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால் இவற்றைத் தனிப்பட்ட முறையில் பகையென்றெண்ணி அவர் தண்டனை யடைவதற்காக விஞ்ஞான விஷயங்களிலும் நான் பொய் கூறுவேன் என்று நம்பிய அறிவிலிகளை என்னென்று விவரிப்பது? மக்களைப் பெருநோயிலிருந்து குணமாக்கப் பாடுபட்ட பெரியாரைக் கைதிக் கூண்டில் நிற்கவைத்த ஜெர்மன் மக்கள் அவர்களுக்கேற்ற அரசாங்கத்தையே பெற்றிருக்கின்றார்கள். இத்தகைய நாட்டில் எர்லிக் போன்ற மேதைகளும் பிறக்கின்றார்களே என்பதுதான் விந்தை. கடவுள் இத்தகைய அறிவிலிகளுக்கே எர்லிக் போன்ற மனிதகுல மணிகள் தேவை என்று அவர்களை இங்குத் தோற்றுவித்தார் போலும்" என்று பொழிந்து தள்ளினர்.

எர்லிக்கை மனிதகுல மணியாகக் கருதினர் பெரிங். விஞ்ஞானப் பெருநோக்கும், மனிதகுலத்திலுள்ள ஆழ்ந்தஅன்பும், வாய்மையும், பெரிங்கை ஒரு மனிதகுல மணிதான் என்று அறிவுறுத்துகின்றன.

---

# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| பு. கேது | சூரி | வெள் | செ: |
| | இவ்வாரக் கிரகநிலை 4வ மிதுன வெள்ளி 8ந்வ மேட. புத | | |
| | | | |
| சனி | வியா | | ராகு |

**இங்குத் தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(2-5-59—8-5-59)

**மேடம்** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) இவ்வார முற்பகுதியில் விருந்தினரின் வரவு அதிகரிக்கும். தொழில் முறையில் சிறிது கவலை ஏற்படலாம். புதுமுயற்சிகளில் ஊக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் மன மகிழ்ச்சிஅதிகரிக்கும். கிழமையின் முடிவில் சில மாற்றங்கள் ஏற்படும். நாற்கால் விலங்குகளின் தொல்லை உண்டு.

**இடபம்** (கார்த்திகை 2, 3, 4ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ம் பாதம்) நினைத்த கருமங்கள் மிக்க பிரயாசையின் பின் நிறைவேறும். கொடுக்கல் வாங்கல் மூலம் பண விருத்தியதிகரிக்கும். பிறர் கருமங்களில் இவ்வாரம் தலையிடாதிருத்தல் நன்று. பணம் பல வழிகளாலும்செலவாகும். நண்பர்கள் உதவி சிறிது குறையும்.

**மிதுனம்** (மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) முக்கியமான சில கருமங்களில் எதிர்பாராத கஷ்டங்கள் இவ்வாரம் ஏற்படலாகும். புத்திரரால் மகிழ்ச்சியுண்டாகும். இவ்வார முற்பகுதி பிரயாணத்திற்கு ஏற்றதன்று. பெண்களின் நேசத்தால் சில கருமங்கள் கைகூடும். பெரியோர் மதிப்பு அதிகரிக்கும்.

**கடகம்** (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) சிநேகித வழியால் நன்மைகள் உண்டாகும். பிறரது வஞ்சகச் செயல்கள் பின்னர் நன்மையைத் தருவதாகும். குடும்பத்தில் மங்கள கருமங்கள் உண்டாகும். பொது மக்களின் உதவி பெருகும். புத்திரர்களால் மனக் கவலை ஏற்பட்டு நீங்கும்.

**சிங்கம்** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) அரசசேவைகளில் மாற்றங்கள் ஏற்படும். எக்கருமத்திலும் மனமானது ஒரேவழியில் செல்லாதிருக்கும். இன பந்துக்களின் கொண்டாட்டங்களால் மனக் கவலை உண்டாகும். அன்னியர் நட்புக் கிடைக்கும். திருடர்கள் தொல்லை உண்டாகும்.

**கன்னி** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம், அத்தம், சித்திரை 1-ம் 2-ம் பாதம்) வார இறுதியில் மனக்குழப்பங்கள் தோன்றி விரைவில் நீங்கும். புத்திரர் மீது மனவெறுப்புத் தோன்றலாம். பிரயாண அலைச்சலுடன் பழிச் சொற்களும் கேட்க வேண்டி நேரிடும். பணச்செலவு அதிகரிக்கும். வழக்கு விஷயங்களில் ஈடுபடாதிருத்தல் நன்று. வார இறுதியில் தேகசுகம் சிறிது குறைவடையும்.

**துலாம்** (சித்திரை 3-ம், 4-ம் பாதம், சுவாதி, விசாகம், 1, 2, 3-ம் பாதம்) ஆரம்பிக்கும் சில கருமங்களில் பகைவர் தலையிடுவர். தொழில் முறையில் நற்பலன் உண்டாகும். காரணமின்றி இனத்தவர்களுடன் மன வெறுப்புத் தோன்றும். வார இறுதியில் மகிழ்ச்சி உண்டாகும்.

**விருச்சிகம்** (விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை) மங்களகரமான நிகழ்ச்சிகளுக்குக் குறைவிலது. மனமானது புதிய புதிய கருமங்கள் செய்வதில் ஈடுபடும். பிரயாணத்திற் சில கஷ்டங்கள் உண்டாகி நீங்கும். சகோதரர்களால் நன்மைவந்து சேரும். தொழில் முறையிற் கீர்த்தியுண்டாகும். பலவழிகளாலும் பணம் வந்து சேரும்.

**தனுசு** (மூலம், பூராடம், உங்தராடம் 1-ம் பாதம்) உத்தியோக முறையிற் சில மாற்றங்கள் ஏற்படும். காத்திராப்பிரகாரமான தீங்குகள் இவ்வார இறுதியில் ஏற்படும். மேலதிகாரிகளால் நன்மை கிட்டும். நடந்த கருமங்களினால் மனக் கவலை உண்டாகும். நண்பர்கள் சிலர் உதவியாக இருப்பர்.

**மகரம்** (உத்தராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்) கொடுக்கல் வாங்கல் மூலம் பகைமை ஏற்படும். பெண்கள் நட்பு அதிகரிக்கும். மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்கள் உண்டாகும். குடும்பக்கவலை சிறிது இருந்தாலும் வார இறுதியில் மனம் நிம்மதியடையும். வியாபாரத் துறையில் வருமானம் அதிகரிக்கும்.

**கும்பம்** (அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1. 2, 3-ம் பாதம்) தவிர்க்கமுடியாத வாக்குவாதங்கள் தோன்றும். அரச கருமங்களில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். குடும்பத்திற் புண்ணிய கருமங்கள் நிறைவேறும். சிநேகித வழியால் உதவிப்பேறுகள் வந்தடையும். இடமாற்றம் ஏற்படக்கூடும்.

**மீனம்** (பூரட்டாதி 4-ம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி) வியாபாரத் துறையில் முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். அநேக நாட்களாக மனதிற் குடிகொண்டிருந்த எண்ணம் இவ்வாரத்தில் நிறைவேறும். திருடர்பயம் அதிகரிக்கும். எதிர்பாராத முறையிற் சில கருமங்கள் நிறைவேறும்

பலவித சிற்றுண்டி பலகார வகைகளுக்கும்
சுத்த சைவ போசனத்திற்கும்
சிறந்த இடம்!
விசேஷ பரிசு
(Special Grade)
1952—1957
மலாயா கபே
உரிமையாளர் : M. K. கதிரவேலு
36, 38, பெரியகடை யாழ்ப்பாணம்

*விளையாட்டுப் பகுதி*

# ஆசிய இளைஞர் உதைபந்தாட்டம்

மலாயாவில் நடைபெற்ற ஆசிய இளைஞர் உதைபந்தாட்டத்தில் தென் கொரியா சிகர வெற்றி எடுத்துள்ளது. 12,000 மலாயன் டொலர்கள் பெறுமதியான தங்க வெற்றிக்கிண்ணம் மலாயாவின் இராணியாரால், தென் கொரிய உதைபந்தாட்டக் கோஷ்டித் தலைவருக்கு அளிக்கப்பட்டது. இக்கிண்ணம் மலாயப் பிரதமர் துங்கு அப்துல் ராஹ்மனின் பரிசளிப்பாகும். தென்கொரியாவைவிட மற்றைய ஆசிய நாடுகளின் கூட்டு உதைபந்தாட்டக் கோஷ்டியொன்று தென் கொரியாவுடன் விளையாடிய பொழுதும், தென் கொரியாவுக்கே வெற்றி கிடைத்தது. அடுத்த ஆசிய இளைஞர் உதைபந்தாட்டப் போட்டி விளையாட்டு பர்மாவில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

1958 ஆம் ஆண்டின் அரசாங்க சேவைகளின் உதைபந்தாட்டப் போட்டியின் A பிரிவின் முடிவு, அரசாங்க சேவைகள் உதைபந்தாட்டச் சங்கத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அம்முடிவின்படி A பிரிவின் சிகரவெற்றி ஸ்தானம் கல் ஓயா அபிவிருத்திச் சங்கத்திற்கே உரித்தாகின்றது.

* * *

பாகிஸ்தான் உதைபந்தாட்டக் கோஷ்டியொன்று அதி விரைவில் இலங்கைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. பாகிஸ்தான் உதைபந்தாட்டச் சங்கம் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளது.

* * *

வட அயர்லாந்து வேல்ஸை 4—1 கோல்களால் தோற்கடித்தது. இந்த வெற்றியின்மூலம் அயர்லாந்து, பிரிட்டிஷ் சர்வதேச உதைபந்தாட்டச் சிகர வெற்றியை இங்கிலாந்துடன் பங்குபோட்டுக் கொண்டது. வட அயர்லாந்தும், இங்கிலாந்தும் நான்கு புள்ளிகள் தனித்தனியே எடுத்துக்கொண்டன. ஸ்கொட்லாந்து மூன்று புள்ளிகளைப் பெற்று இரண்டாவது நிலையைப்பெற்றது. வேல்ஸ் ஒரேயொரு புள்ளிமாத்திரம் பெற்றுக் கடைசி நிலையில் நின்றது.

**கிரிக்கெட்**

இங்கிலாந்தில் இப்பொழுது அதனுடைய வருடாந்த மாவட்டச் சிகர வெற்றிப்போட்டிப் பந்தயம்தொடங்கியுள்ளது. இப்பந்தயத்தில் நடக்கும் போட்டி விளையாட்டில், அதிக வேகத்தில் 200 ஓட்டங்களை ஒரு இன்னிங்ஸிலேயே அடிக்கும் மாவட்ட வீரருக்கு 500 பவுண்கள் பரிசாக அளிக்கப்படும். இதை ஒரு வர்த்தகக் கம்பனி அளிக்க முன்வந்துள்ளது. கிரிக்கெட் ஆட்டத்தில் உற்சாகமான துடுப்பெடுத்தாடுதலை ஊக்கவே இப்பரிசு அளிக்கப்படுகின்றது.

* * *

இந்தியக் கிரிக்கெட் கோஷ்டி இங்கிலாந்துவந்து சேர்ந்துவிட்டது. அதனுடைய முதல் விளையாட்டுப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இந்தியக் கோஷ்டிக்கும் இங்கிலாந்துக் கோஷ்டிக்கும் இடையே ஐந்து டெஸ்ட் போட்டி விளையாட்டுகள் நடைபெறும்.

### இங்கிலாந்தில் உதைபந்தாட்டம் :

ஹாட்டன் டவுண் என்னும் உதைபந்தாட்டக் கோஷ்டியின் தலைவரான **சிட் ஓவ்ண்** என்பவர், இங்கிலாந்து உதை பந்தாட்ட எழுத்தாளர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட வருடாந்தப் போட்டியில் இவ்வருஷ 'இங்கிலாந்து உதைபந்தாட்ட விளையாட்டுக்கார'ராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் **பில்லி ரைற்** என்பவரைத் தோற்கடித்தார். இப்போட்டி தொடங்கிய 11 வருடங்களில், இம்முறைதான் போட்டி மிக நெருங்கியதாக இருந்தது.


'ஹென்றலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

# ஹென்றலி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்றலி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றலி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்

**ஹென்றலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,**
பழைய விமான நிலைய வீதி,
( Old Air Port Road )
இரத்மலானை.


*நாடக விமர்சனம்*

# மயான காண்டம்

காங்கேசன்துறை வசந்த கான சபையாரின் அரிச்சந்திரா மயான காண்டம் ரேடியோ புகழ் பெற்றது. காதால் கேட்கும் போதுள்ள சுவையிலும் பார்க்க நேரில் பார்க்கும் போது பன் மடங்கு சுவை மிக்கது. கொட்டகைக் கூத்துத்தான். ஆனால் இன்றைய நாடகங்களுக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல.

கடமை, கண்ணியம், நேர்மை என்பன அரிச்சந்திரனை நடித்த வைரமுத்துவின் பேச்சில், தோற்றத்தில், நடிப்பில் அப்படியே பிரதிபலித்தன. நுணுக்கமான மனநிலைகள், உணர்ச்சி மோதல்கள் இவற்றைச் சித்திரிக்கும் கட்டங்களில் எப்படித்தான் நடிக்கின்றார் என ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது.

சந்திர மதியின் வேஷப் பொருத்தம் நன்கு அமையவில்லை. ஆனால் சில கட்டங்களில் உணர்ச்சி வசப்பட நடித்தார். "நதிவளம் பெருகும் காசி தன்னில் சுடலை காக்கும் அதிபதி கேள். என் பாலன் அரவத்தால் மாண்டான்" என்று பாடுகிற கட்டத்தில் அவருடைய நடிப்பு உச்சிக் கட்டத்தை அடைகிறது. இரத்தினம் இப்பாத்திரத்தைத் தாங்கி நடித்தார்.

கொஞ்ச நேரம் தோன்றி கண்ணைக் கவர்ந்து கருத்தையும் தொட்ட சிறுமி லலிதா லோகதாசனை கச்சிதமாக நடித்தார்.

ஹாஸ்ய பாத்திரங்களாகத் தோன்றிய சின்னத்துரை, செல்வராசா ஆகிய இருவரிடமும் நல்ல நடிகர்கள் என்பதற்குரிய முத்திரை காணப்பட்டதேயன்றிக் குணசித்திரச் சிறப்புத் தொடர்ந்து விளங்கவில்லை!

அசரீரி பேசுதல், பக்கவாத்திய ஒழுங்கு, ஒளியமைப்பு ஆகியவற்றில் இன்னும் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

பழைய குப்பையென்று சொல்ல முடியாத வகையில் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் கொட்டகைக் கூத்து 'மயான காண்டம்'. அப்புகழுக் குரியவர் கலைஞர் வைரமுத்து எனக் கூறினல் அது மிகையாகாது.

—ஈயம்—

# கண்ணோட்டம்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஏசிவிட்டு உம்மைப் பாராமல் அந்த ஆள் தன் வழியே சென்று விடுவார்.

ஒரு சில நிமிடங்களில் இலை வரும். பிறகு, சோறு வரும். உமது கண்கள் உமக்கு முன்னால் இருக்கும் இலையை உற்று நோக்கும். என்ன இது? செம்மண். உடனே வேலையாளிடம் தண்ணீருக்குக் கட்டளை இடுவீர். பிறகு நீரே இலையைக் கழுவவேண்டியதுதான். அதன் பின்னர் ஏதோ சோறும் கறியும் என்று சொல்லப்படும் பண்டங்களை உள்ளே செலுத்தி விட்டுத் தலை விதியை நொந்து கொள்ள வேண்டியதுதான்.

சாப்பிட்டு முடிந்துவிட்டது. வேலையாள் விரைவில் வந்து நிற்பார் உம்மருகில். உம்முடைய சாப்பாட்டுக் கணக்கு எழுதப்பட்ட கடதாசித் துண்டை உமக்களிப்பார். இது என்ன அநியாயம்! இந்தச் சாப்பாட்டுக்கு எழுபத்தைந்து சதமாஎன்று கேட்பீர். "ஆமாம், ஐயா!" என்று உம்முடைய பதிலுக்கும் நிற்காமல் அவர் போய் விடுவார். சிலையாக நின்று விடுவீர் நீர்! இனிமேலும் அந்த உணவு விடுதிப் பக்கம் போக உமக்கு விருப்பம் இருக்குமா?

இவற்றையெல்லாம் கவனிக்க வேண்டிய சுகாதாரப் பகுதி அதிகாரிகள் என்னதான் செய்கிறார்களோ?

*சினிமா உலகம்*

# சென்னையின் முன்மாதிரி

சினிமா ரசிகர் ஒருவர் யாழ்ப்பாணத்திலிருந்து எழுதுவதாவது:

சென்னையில், சமீபத்தில் 'தியேட்டர் கண்காணிப்புக் குழு' ஒன்று சென்னை சினிமா பார்ப்போர் ஆதரவில் நிறுவப்பட்டுச் செயலாற்றி வருகிறது. தியேட்டர் நிர்வாகிகளின் ஒத்துழைப்புடனே தியேட்டர்களில் காணப்படும் குறைகளைத் தீர்த்துவைப்பதே இதன் நோக்கமாகும். இது தனது முதல் அறிக்கையில் சென்னையில் சகல வசதிகளும் அமைக்கப்பட்ட ஒரே ஒரு தியேட்டர் 'மிட்லண்ட்' என்றும், நகரிலுள்ள மற்றைய 38 தியேட்டர்களில் சில பெருங் குறைகளையும், ஒரு தியேட்டரில் அதிகப்படியான குறைகளையும் கண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. இக் குறைகள்பற்றி இக்குழு தியேட்டர் நிர்வாகிகளுக்குத் தெரிவித்துள்ளதாயும், அவர்கள் அக் குறைகளை நீக்குவதாக உறுதி அளித்திருப்பதாகவும் தெரிகிறது.

யாழ்ப்பாணம் சினிமா தியேட்டர்களிலும் பெருங் குறைகள் காணப்படுகின்றன. இவைகளை நிவர்த்திசெய்வதானால், யாழ்ப்பாணத்திலும் சென்னையில் உள்ளமாதிரி, ஒரு **சினிமா ரசிகர் சங்கம்** நிறுவ வேண்டும். அச் சங்கம், சினிமா பார்க்கச்செல்வோர் தியேட்டர்களில் படும் அவஸ்தைகளை நீக்க உழைக்கவேண்டும். சென்னையில் ஏற்பட்டுள்ள இந்த முறையை இலங்கையும் பின்பற்றுவது நன்று.

## தமிழ்ச் சினிமாவில் சேர சோழ பாண்டியர்!

சேர நாட்டுச் செங்குட்டுவன் என்றோ இறந்துவிட்டான். ஆனால், இன்றோ அவனுடைய இடத்தில் சேர நாடு தமிழ்த் திரைக்கு அளித்த புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். இருக்கின்றார்.

சோழநாடு நமக்கு அளித்துள்ள நடிகர்யார் தெரியுமா? அவர்தான் சிம்மக்குரலோன் சிவாஜிகணேசன். கோப்பெருஞ் சோழன் ஆண்ட நாட்டிலிருந்து வரும் நடிகர் திலகம் சோழ பரம்பரையின் பெருமையைப் பாதுகாக்கத் தவறவில்லை!

பாண்டி நாடு தந்த இலட்சிய நடிகர் தான் எஸ். எஸ். ராஜேந்திரன். சேர, சோழப் பிரதிநிதிகள் இருவருக்கும் ஈடு கொடுக்கத்தன்னால் முடியுமென்பதை, இளம் நடிகர் ராஜேந்திரன் நிரூபித்து வருகிறார். அதன்மூலம் தம் முன்னோரின் புகழையும் நிலைநாட்டி வருகிறார்!

## கல்யாணப் பரிசு

1959ஆம் ஆண்டின் சிறந்த தமிழ் பேசும் படம் என்ற கருத்து பலரிடத்தும் முன்கூட்டியே நிலவி வருகிறது. அந்தக் கருத்துக்கு முக்கிய காரணமாக விளங்குவது அப்படத்தின் கதையேயாகும். வழக்கமான பாதையிலிருந்து விலகி, தனக்கென ஒரு புதுப் பாதையை வகுத்திருக்கும் ஸ்ரீதருக்கு இப்படம் பெரும் வெற்றி அளித்துள்ளதாம். இரு சகோதரிகள் ஒரே வாலிபனைக் காதலிக்கின்றனர். இளையவள் தன் காதலை மூத்தவளுக்காகத் தியாகம் செய்கிறாள். அதன் பின் மூத்தவள் இறக்கின்றாள். ஆனால், இளையவளும் தன் காதலனைக் கடைசியில் அடையவில்லை. இப் படத்திற்குக் கதையையும், வசனத்தையும் எழுதிய தோடுநிற்காமல், டைரக்ஷன்பொறுப்பையும் ஏற்றுத் திறம்படச் செய்திருக்கிறார் ஸ்ரீதர். ஜெமினி கணேசனும், சரோஜாதேவியும் தங்கள் பாகங்களைத் திறமையுடன் நடித்துப் புகழ் தேடியுள்ளார்கள்.

## நமது நூல் நிலையம்

( 6ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய வகையில் அமைந்திருப்பது ஒரு சிறப்பாகும்.

தகுந்த உவமான உவமேயங்கள் வர்ணனைகள் ஆகியவை கூடி ஆசிரியரின் கற்பனை வளத்தைக் காட்டும் இக்காவியத்தின் ஒரு சில பாடல்களில் மோனைத் தொடர்பற்றிருப்பதைச் சுட்டிக் காட்டாமலிருக்க முடியவில்லை.

தன் கூற்றாக அமைந்துளதும் முதலில் இங்கு குறிப்பிட்டிருப்பதுமான கவிதையின் ஐந்தாவது வரிக்கும் ஆறாவது வரிக்கும் மோனைத் தொடர்பற்றிருப்பது கவிதையின் உருவத்துக்கே ஒரு விழுக்காடாகும். இது போன்ற இன்னும் சில பாடல்கள் உள்ளே காணக்கிடக்கின்றன.

### அறிவைப் பெருக்குங்கள்

1. திரு. எம். டபிள்யூ. எப். அபெயக்கூன்.

2. டி. கே. கெயிக்வாட்.

3. (i)லாஜி பயர்ட் (ii) ஸ்கொட்லாந்து.

4. டாக்டர் அல்பேர்ட் ஸ்கொவிட்ஸர்.

5. வி. கே. கிருஷ்ணமேனன்.

### வேலழகன் கிராம முன்னேற்றச் சங்கம்

கரணவாய் தெற்கு — புரும்பொறுக்கி வேலழகன் கிராம முன்னேற்றச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. கூட்டத்துக்கு திரு. கி. இராசதுரை தலைமை வகித்தார்.

சங்கத்தின் தலைவராக திரு. க. கிருஷ்ணபிள்ளையும் செயலாளராக திரு. கு. சிவசம்புவும் தனாதிகாரியாக திரு. வ. சின்னத்தம்பியும் தெரிவு செய்யப்பட்டனர்.

### கட்டளைக்குருவானவரின் வெள்ளிவிழா

இளவாலை சந்தானள்நாயகி ஆலயத்தின் பங்குக் குருவானவர் வண. பிதா சைமன்கோமஸ் ஓ. எம். ஐ. அவர்களின் குருத்துவ வெண் பொன் யூபிலி விழாவையிட்டு அவ்வூர் மக்கள் பெருவிழாஎடுத்துமகிழ்ந்தனர். சென்ற 12-4-59 ஞயிறுவாரம் அதிகாலை தேவதேத்திரப் பாடற்பூசை யூபிலிவிழாக் குரவரவர்களால் நிறைவேற்றப்பட்டது. அன்று மாலை கோவில் ஆராதனையைத் தொடர்ந்து குருவானவர் ஊர்வலமாக இளவாலை சென் ஹென்றியரசர் கல்லூரிக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். ஆங்கு வாழ்த்துப்பத்திரம் வாசித்தளிக்கப் பெற்றது.

# சுயநலமிகளின் சூழ்ச்சி

## மீண்டும் வகுப்புவாதப் பூசலா? தமிழினத்துக்கு ஓர் இழுக்கு

"தமிழரிடையே சிறுபான்மையினராக வாழும் ஹரிஜன மக்களின் தேவைகள் நிறைவேருத நிலையில் தமிழரின் எந்த விதமான போராட்டங்களும் வெற்றி பெறமாட்டா. பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாக அவர்கள் இருந்தாலும் அவர்கள் தமிழர்களே. யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்கள், தேநீர்க்கடைகள் சில திறக்கப்பட்ட பின் ஹரிஜன மக்களின் மனதில் நாமும் தமிழர் என்ற எண்ணம் வளரத் தொடங்கியது. ஆனல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த இசைவிழாவில் ஹரிஜன இசையாளர்களைச் சேர்த்துக் கொள்ள மறுத்த செயலினல் அவர்கள் மனம் திரும்பியும் புண்பட ஆரம்பித்துவிட்டது. இதிற் கவனமெடுத்து ஏற்ற நடவடிக்கைகள் கையாளுமாறு யாழ்ப்பாணப் பிரமுகர்களையும், தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். மொழிப்போராட்டத்தில், இனகலாச்சாரப் போராட்டத்தில் முக்கிய பங்கு எடுத்து தமிழ் மக்களோடு தோளோடு தோள் சேர்ந்து நிற்கும் நேரத்தில் பின்பும் சில சுயநலமிகளின் சூழ்ச்சியினல் மீண்டும் வகுப்பு வாதப் பூசல் தமிழரிடையே தலை காட்டத் தொடங்கி விட்டது. இந்த நேரத்தில் நாம் கடந்த வருடம் மே மாதம் இலங்கையில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தை நினைவு கூர்ந்து தமிழரிடையேவகுப்புவாதம் இல்லை என்பதை நிலை நாட்டத் தவறின் இது தமிழினத்துக்கே பெரிய இழுக்கையும், அவமானத்தையும் உண்டாக்கும். எந்த நிலை யேற்பட்டாலும் ஹரிஜன மக்கள் தம் மனத்தைச் சோரவிடாமல் ஒன்றுபட்டு நின்று தம் கோரிக்கைகளை நிறை வேற்ற வேண்டும்.''

இவ்வாறு சமீபத்தில் சிவியா தெரு சனசமூக நிலையத்தின் சார்பில் நடைபெற்ற தேசிய தின விளையாட்டுப் போட்டிப் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிய நிலையத் தலைவர் திரு: செ. ப. ஜீவானந்தம் தமது தலைமையுரையிற் குறிப்பிட்டார்.

கோப்பாய் பாராளுமன்ற அங்கத்தவர் திரு: கு. வன்னியசிங்கம் பேசுகையில் "திட்டமிடப்பட்டுச் செய்யப்படும் சிங்களக் குடியேற்றங்களினல் தமிழ் மாகாணங்கள் அழிந்து போகின்றன. இதைத் தடுக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகிறது. யாழ்ப்பாணத்திலே நெருக்கமாக வாழுகின்ற கிராமத்திலுள்ள மக்கள் குடும்பமாகவோ, தனித்தோ, தமிழ் மாகாணங்களில் நடைபெறும் குடியேற்றங்களில் போய் குடி யேறித் தமிழ் மாகாணங்களைக் காப்பாற்ற வேண்டும். திருக்கோணமலை சரித்திர காலங் தொட்டு இன்றுவரை ஒரு தமிழ் நாடு. இந் நாடு சிங்களக் குடியேற்றத்தினல் அழிந்து போகிறது. இதைத் தடுக்க நாம் செய்ய வேண்டிய ஒரே ஒரு கடமை யாழ்ப்பாணப் பகுதியில் நெருக்கமாக வாழும் தமிழ் மக்கள் உடனடியாக திருக்கோணமலையில் போய் குடியேற வேண்டும். தமிழ் மாகாணத்தைக் காப்பாற்ற வேண்டும். திருக்கோணமலையில் வாழும் தமிழ் மக்கள் மிகவும் அன்புள்ளவர்கள். மற்றவர்களை உபசரிக்கும் பண்புள்ளவர்கள். அங்கே போய்க் குடியேற விரும்பும் உங்களுக்கு எல்லாவசதிகளையும் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிருர்கள். உத்தியோகத்தை நம்பி வாழ்ந்த காலம் மலையேறிவிட்டது. தமிழர் தம் சரீர உழைப்பினலேயே இனி மேல் முன்னேற வேண்டும். காடு வெட்டிக் கழனியாக்குவதே எமது கடமை என்று குறிப்பிட்டார்.

மாநகரசபைப் பிரதிநிதி திரு. ச. நடராசா பேசுகையில் இந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீர் பெறமுடியாமலிருக்கும் கஷ்டநிலையைக் கூடிய விரைவில் நிவிர்த்தி செய்வதாகத் தெரிவித்தார்.

மாநகரசபைப் பிரதிநிதி திரு. கி. துரைசிங்கம் பேசுகையில் இவ்வட்டாரத்தில் வாழும் மக்கள் மிகவும் ஒற்றுமையாகச் சேர்ந்து செயலாற்றுவது கண்டு நான் மிகவும் மகிழ்சியடைவதாகவும், இக் கிராமத்துத் தேவைகளைத் தன்னல் இயன்ற மட்டும் முயன்று முடித்துத்தர முயலுவதாகக் கூறினர்.

திரு. மா. தம்பிஐயா, ஆசிரியர், திரு. கு. ம. அப்புத்துரை ஆசிரியர், மாணவன் டா. தேவமதுரம், சுகாதாரப் பகுதி அதிகாரி திரு. பி. நடேசன், புவனேஸ்வரி அம்பாள் ஆலயக் காரியதரிசி. திரு. ஐ. வாரித்தம்பி ஆகியோரும் பேசினர்.

யாழ்ப்பாணம் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ருேருக்குப் பரிசில்களை வழங்கினர்.

# பக்தி மார்க்கத்தின் உயர்வு

## ஸ்ரீ ஓங்கார சுவாமிகளின் விளக்கம்

யாழ்ப்பாணம்

மனம் பரிசுத்தமாகி எங்கும் நிறைந்திருக்கும் இறைவனைக் காண்பதே மேலான பக்தி. எல்லாம் அவனே என்ற பக்தி மார்க்கமே மிகவும் சிறந்தது. ஒவ்வொரு ஆன்மாவும் தாம் தாம் செய்த வினையின் பயனை அடைகின்றது. வாழ்க்கையில் நாம் பற்றில்லாமல் தாமரையிலைத் தண்ணீர்போன்று வாழ்வதே தர்மயோகமாகும். இவ்வாறு ஸ்ரீ பரமஹம்ச ஓங்கார சுவாமி அவர்கள் சென்ற புதன்கிழமை மாலை யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்திற் பேசும்போது குறிப்பிட்டார். இக்கூட்டம் யாழ்ப்பாணம் இந்துமாணவர் சமாஜ ஆதரவில் நடைபெற்றது. சுவாமி அவர்கள் தொடர்ந்து பேசியதாவது:

பக்தியென்பது ஒவ்வொருவருக்கும் இயற்கையாகவே அமைந்துள்ளது. நாம் பிறந்தது முதல் சிறுவர்களாக இருக்கும்வரை தாய் தந்தையரிடம் அளவிலா அன்பு, அதாவது, பக்தியுடையவர்களாக இருக்கிரேும். பின்னர் இளம்பிராயத்தில் பாடசாலை சென்றதும் குருபக்தியுடையவர்களாகத் திகழ்கிரேும். அதுவே நாம் இயற்கையாகக் காணுங்காட்சி. இப்பக்தி—அன்பு இறைவனிடத்திற் செலுத்தப்பட வேண்டியது. இதையே நாம் அடியார்களிடம் அல்லது நாயன்மார்களிடம் காணக் கூடியதாக மிளிர்கின்றது:

பரமஹம்ச ஓங்கார சுவாமி அவர்களை வரவேற்றுப் பேசிய வடமாகாண வித்தியாதிகாரியும் இந்துமாணவர் சமாஜத் தலைவருமாகிய திரு சி. உ. சோமசேகரம் அவர்கள் கூறியதாவது.

சுவாமி அவர்கள் சிறுபிராயந்தொட்டே ஆத்ம விசாரணையில் ஈடுபட்டு "ஓம் ராம்" எனும் மந்திரதியானத்தில் பல வருடங்கள் ஈடுபட்டு ஸ்ரீ இராமபிரானது திவ்வியதரிசனம் பெற்ருர்கள். சுவாமிகளிடம் பல அரிய ஆத்மீக சித்திகள் விளங்கியனவென்றும் கூறப்படுகின்றது. தேக உணர்ச்சியற்று, பரம்பொருளோடு ஐக்கியப்பட்டு வாழும் பண்பு அவரிடம் நிறைந்துள்ளதென்பது அவர் உரையாடும் விதத்தில் விளங்குகின்றது. அன்பும் பக்தியும் நிறைந்த உள்ளமும், அருள் நிறைந்த நோக்கும் உடைய இப்பெரியாரைக் கண்டு பயன்பெறுதல் சமய வாழ்க்கையை விரும்பியவர்களது கடமையாகும். ந. நி.

# சமஸ்கிருத விஸ்வ பரிஷத்தின் பரீட்சை

## யாழ்ப்பாண மாணவர்களின் பெறுபேறு

இந்திய ஜனதிபதி டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்கள் தலைவராயிருக்கும் சமஸ்கிருத விஸ்வ பரிஷத்தின் ஆதரவில் பாரதிய வித்தியா பவனத்தார் நடத்தும் பரீட்சைகள், இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முற்பகுதியில் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியிலே சமஸ்கிருத ஆசிரியர் பண்டிதர் எஸ். பி. சர்மாவின் தலைமையில் நடாத்தப்பட்டன.

இலங்கையில் நடாத்தப்பட்ட பிரேராரம்ப, பிரவேசப் பரீட்சைகளுக்கு இருபத்தேழு மாணவர்கள் எழுதினர். இவர்களுள், 23 பேர் சித்தியெய்தினரென்று வித்தியாபவனம் அறிவித்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருக்கும் ஐந்து பிரபல கலாசாலைகளும், ஒரு வேதாகம நூல் நிலையமும் இப் பரீட்சைகளில் பங்குபற்றின.

பிரேராரம்ப பரீட்சை

விசேட பிரிவு: கே. நாகலிங்கம்(வ.அ.ம.க) எம். இராசகோபாலபிள்ளை (சா. இ. க) எஸ். சௌந்தரேஸ்வரி (பு. ஸ்ரீ சோ. க). முதலாம் பிரிவு: ஆர். பரமேஸ்வரி (வ. அ. ம. க), எஸ். நவநீதவள்ளி (சா. இ.க). கே. சிவயோகநாதன் (யா. செ. க). கே. பாலசிங்கம் (வ. அ. ம. க). கே. நவரத்தினம் (மா. வே. நூ). கே. குமாரசாமிசர்மா (மா .வே. நூ). இ. சிவபாக்கியம்(சா.இ.க) பி. அன்னலட்சுமி (நா. அ க). இரண்டாம் பிரிவு: கே. பத்மநாதன் (வ. அ. ம. க). மூன்ரும் பிரிவு: ரி. திருஞானசம்பந்தர் (யா. செ. க) ஆர். வைத்தியநாதன் (வ.அ.ம.க.) என். சக்திதாசன் (மா. வே. நூ.) ரி. பாலசுப்பிரமணியசர்மா (மா. வே. நூ.)

பிரவேச பரீட்சை

விசேட பிரிவு: எஸ். சிவசண்முகசிகாமணி (வ.அ.ம.க.) எஸ்) மகாதேவசர்மா (மா. வே. நூ..

முதலாம் பிரிவு: வி. கிருஷ்ணசாமி (வ.அ ம.க.) கே. செல்வத்துரை(பு.ஸ்ரீ.சோ.க.)எஸ். மனேரஞ்சிதம் (வ.அ.ம.க.)

இரண்டாம் பிரிவு: எஸ் சிவஞானேஸ்வரி (மா.வே.நூ.) கே. சரவணமுத்து (வ.அ.ம.க.)

அட்டவணை

பு. ஸ்ரீ. சோ. க: புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி. யா. செ. க: யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி. நா. அ. க: நாவற்குழி அரசாங்க கல்லூரி சா. இ. க: சாவகச்சேரி இந்துக் கல்லூரி. வ. அ. ம. க: வசாவிளான் அரசாங்க மத்திய கல்லூரி. மா. வே. நூ: மாவிட்டபுரம் வேதாகம நூல் நிலையம்.

# புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதி

## ஊழல்களை நீக்குமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம்

இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சியின் நல்லூர் வாலிப முன்னணியின் அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. சு. ஜெகநாதன் தலைமையிற் சமீபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் பின் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. யாழ்ப்பாணத்திற் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியை மூடிவிடுவதற்கு அதிகாரிகள் தீர்மானித்திருப்பதை இக்கழகம் பலமாகக் கண்டிப்பதுடன் இப்பகுதியிற் காணப்படும் ஊழல்களை அகற்றி விஸ்தரிக்க ஆவன செய்யுமாறு கனம் கலாசார அமைச்சரைக் கேட்டுக்கொள்வது.

2. யாழ்ப்பாணப் பட்டினத்தில் மலாயா கபேக்கு முன்னல் அமைக்கப்பட்டிருக்கும் சைக்கிள் பார்க் நடைபாதையைத் தடைசெய்வதால் இச் சைக்கிள் பார்க்கைப் போக்குவரத்தைத் தடைசெய்யாத வகையில் புறம்பான ஓரிடத்தில் அமைப்பதற்கு யாழ்ப்பாண நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. யாழ்ப்பாணத் தொழில் நுட்பக் கல்லூரி இன்னும் இராணுவத்தினரின் இருப்பிடமாக இருப்பதால் அதை உடனடியாக நீக்கித் தொழில் நுட்பக் கல்லூரி இயங்குவதற்கு நடவடிக்கை கையாளும் வண்ணம் அரசாங்கத்தையும் சிறப்பாகப் பிரதம அமைச்சரையும் கேட்டுக்கொள்வது.

# பரிசு பெற்ற மாணவர்கள்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

திய உயர்தரத் தூதுவரையும் இலங்கை அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கின்றது.

பின்னர் மகா சந்நிதானம் அவர்களால் தேவாரப் பரிசு பெற்ற மாணவ மாணவிகட்குப் பரிசில்கள் வழங்கப்பெற்றன. விபரம் வருமாறு:-

**ஆண்கள் மேற்பிரிவு**

1. செல்வன் க. சிவயோகநாதன், வைத்தீஸ்வரவித்தியாலயம், யாழ்ப்பாணம்.

**மத்திய பிரிவு:**

1. செல்வன் இ. சோமசுந்தரேசசர்மா, சதானந்த வித்தியாசாலை, அளவெட்டி.
2. ச. மார்க்கண்டேய ஐயர் அருணேதயக் கல்லூரி, அள வெட்டி.
3. ப.பாலசுப்பிரமணியசர்மா, அருணேதயக் கல்லூரி, அளவெட்டி.

**ஆரம்பப்பிரிவு**

1. செல்வன் மு. நாதமணி, மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.
2. செல்வி வி. சிவானந்தராசா, அருணேதயச் கல்லூரி, அளவெட்டி.
3. செல்வன் மா. காந்திதாசன், அருணேதயக் கல்லூரி, அளவெட்டி.

**பெண்கள் மேற்பிரிவு**

1. செல்வி இ. பரமேஸ்வரி, சதானந்த வித்தியாசாலை, அளவெட்டி.
2. செல்வி க. சகுந்தலாதேவி, அருணேதயக் கல்லூரி, அளவெட்டி.
3. செல்வி கு. சாந்தகுணநாயகி, சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை.

**மத்திய பிரிவு**

1. செல்வி சி. பரமேஸ்வரி, சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை.
2. செல்வி க, அகிலராணி, அருணேதயக் கல்லூரி, அளவெட்டி.
3. இ. ஜெயசீதா, சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித் துறை.

**ஆரம்பப் பிரிவு**

1. செல்வி. அ. சூரியகுமாரி, சதானந்த வித்தியாசாலை, அளவெட்டி.
2. செல்வி. இ. சிவஞானேஸ்வரி, அருணேதயக் கல்லூரி, அளவெட்டி.
3. செல்வி. பிராணேஸ்வரி, சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை.

ஆதீனகர்த்தர் அவர்கள் குறிப்புரை கூறுங்கால் தமிழ் மக்களாகிய நாம் குறிப்பாகச் சைவமக்கள் திருக்குறள் முழுவதையும், தேவார திருவாசகங்களையும், சைவசித்தாந்தங்களையும் சிறுவயதிலேயே மனனஞ் செய்தல் அவசியம் என்றும் பின்னல் பொருள் விளங்கிக் கொள்வது மிகச் சுலபமென்றுங் கூறினர்.

மகாநாடு நடைபெற்ற மூன்று தினங்களிலும் மதுரைத் திருஞான சம்பந்த மட ஆதீன ஓதுவார் அவர்களால் இடையிடையே தமிழ் மறையோதல் நடைபெற்றது.

## அளவெட்டி சதானந்தா மாணவர்களுக்கு முதற் பரிசு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் இம் மாதம் நடாத்தப்பட்ட தேவாரம் ஓதும் திறமைப் போட்டியில் அளவெட்டி சதானந்தா வித்தியாலய மாணவர்கள் மூன்று முதற் பரிசுகளைப் பெற்று 26.4.59:ல் நடைபெற்ற அகில இலங்கை சைவ மகாநாட்டில் அதற்குரிய பரிசில்களைப் பெற்றனர்.

**பரிசு பெற்ருேர் விபரம்:-**

1. மேற்பிரிவு: செல்வி. இ. பரமேஸ்வரி. 1-ம் பரிசு. 2. மத்திய பிரிவு: செல்வன். இ. சோமசுந்தரேஸ்வர சர்மா. 1-ம்பரிசு. 3. கீழ்ப்பிரிவு: செல்வி. அ.சூரியகுமாரி. 1-ம் பரிசு.

★ புரட்சி நடிகர் எம். ஜி. ஆரின் வெற்றிப்படம்!
★ கண்கவர் காட்சிகள்! பொன்னுன கருத்துக்கள்!
★ மயிர்சிலிர்க்கும் வாட் சண்டைகள்!
மெய்சிலிர்க்கும் வசனங்கள்!
★ இனிமையான இசை! அருமையான நடனம்!
இன்றே பாருங்கள்!




மகத்தான 4-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) காமினி (மருதானை) நவா (கும்பனித்தெரு)

குயின்லன் (நுகேகொடை) வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மனோகரா (யாழ்ப்பாணம்) (சனி, ஞாயிறு 6-30 காட்சி மட்டும்)

தினசரி மாலை 6 மணி இரவு 9-30 மணிக்கு
சனி, ஞாயிறு காலை 10 மணி மாலை 2 மணி, 6 மணி இரவு 9–30 மணி

நட்சத்திரங்கள் :

புரட்சி வீரன் எம். ஜி. ராமச்சந்திரன்

★ எம். என். நம்பியார் ★ பி. பானுமதி
★ பி. எஸ். வீரப்பா ★ பி. சரோஜாதேவி
★ எம். ஜி. சக்கரபாணி ★ டி. பி. முத்துலெட்சுமி
★ ஜே. பி. சந்திரபாபு ★ எம். என். ராஜம்
★ டி. கே. பாலச்சந்திரன் ★ ஜி. சகுந்தலா

முதலியோர் சேர்ந்து நடித்தது

பின்னணி : டி. எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, பி. லீலா, பி. சுசீலா, டி. ராஜரத்தினம், ஜமுனாராணி.

இப்பொழுது காட்சியளிக்கின்றது!

சென்ட்ரல் (கொழும்பு) - ஓடியன் (மவுண்ட்லவினியா) - ராணி (யாழ்ப்பாணம்) - லிபேர்ட்டி (பதுளை)

தினசரி மாலை 2, 6, 9-30 மணிக்கு ஞாயிறு காலை 10 மணிக்கு
திங்கள் 4-ந் திகதி தொடக்கம் தினசரி மாலை 6, 9-30 மணிக்கு

ஜோதி (திருகோணமலை)

தினசரி மாலை 6, 9.30 மணிக்கு. ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு
இன்னிசையும் கண்கவர் நடனங்களும்
பொருந்திய படம்!
சிறந்த நட்சத்திரங்கள் நடிக்கும்




நட்சத்திரங்கள்: எஸ். எஸ். ராஜேந்திரன், பி. சரோஜா தேவி
பிரேம் நஸீர், கிரிஜா, வீ. கே. ராமசாமி,
சீ. கே. சரஸ்வதி, டி. பாலசுப்பிரமணியம்.

உ
விவேகானந்தா டிறேட்ஸ் கோப்பரேஷன் தாபனத்தார் ஒழுங்குசெய்யும்

தென் இந்திய யாத்திரை

6-7-59 தொடக்கம் 25-7-59 வரை

இப்பிரயாணம் விசேஷமாக ஆனி உத்தர சிதம்பர நடராஜப் பெருமானின் தேர்த்திருவுலாக் காட்சியைக் கண்டு ஆனந்தமடைய ஒழுங்குசெய்துள்ளோம்.



போன் : 517 ★ தந்தி : Centravel

1958 மார்கழி திருவாதிரை யாத்திரையில் எமது கோஷ்டியினருக்கு சென்னையில் நடாத்திய வரவேற்பின்போதுஎடுத்த படம்

இம்முறை : சேது, இராமேஸ்வரம், திருச்சி (அழகர்கோயில்) ஸ்ரீரங்கம், திருவானைக்கா, சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில், சிதம்பரம், மதருஸ், காஞ்சீபுரம், மகாபலிபுரம், திருக்கழுக் குன்றம், திருவொற்றியூர், திருவண்ணுமலை, பழனி, கோடைக் கானல், மதுரை, திருப்பரங்குன்றம், திருநெல்வேலி, திருச் செந்தூர், தென்காசி, (குற்ருலம்) கொச்சின், திருவனந்த புரம், (நாகர்கோயில், சுசீந்திரம், கன்னியாகுமரி) முதலிய இன்னும் பல இடங்களைத் தரிசிக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

விபரங்களுக்கு நேரில்வரவும் அல்லது 50சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும்

விவேகானந்தா டிறேட்ஸ் கோப்பறேஷன்
( சிங்கப்பூர், மலாயா பிரயாண வசதிசெய்பவர்கள் )
இராஜ கட்டிடம், யாழ்ப்பாணம் (பஸ்காலைக்கு எதிரில்)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு மே மாதம் 2ம் திகதி வெளியிடப்பெற்றது.